

தொகுதி பத்து

வெளவால் முதல் ஹௌரா வரை

பொருட்குறிப்பு அகராதியும் அடங்கியுள்ளது

# குழந்தைகள் கலைக்களஞ்சியம்




2786

# குழந்தைகள் கலைக்களஞ்சியம்

தொகுதி பத்து

வெளவால் முதல் ஹெளரா வரை

பொருட்குறிப்பு அகராதியும் அடங்கியுள்ளது

தமிழ் வளர்ச்சிக் கழகம்

©பதிப்புரிமை தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை-600 005

முதல் மற்றும் திருந்திய இரண்டாம் பதிப்பு (1983)

**தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு**

Reprint: 1998

திருந்திய இரண்டாம் பதிப்பின் மறுபதிப்பு: 1998

வெளியீடு : தமிழ்வளர்ச்சி இயக்ககம், குறளகம், சென்னை - 600 108

நான்காம் பதிப்பு : 2009

வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113

அமைப்பாளர் - புரவலர்
தி.க. அவினாசிலிங்கம்

தலைவர்
சி.சுப்பிரமணியம்

துணைத் தலைவர்கள்:
நா. மகாலிங்கம்
நெ. து. சுந்தரவடிவேலு

செயலாளர்கள்:
ரா. குழந்தைவேல்
பொ. சோமசுந்தரம்

பொருளாளர்:
ப.சிதம்பரம்

பதிப்பாசிரியர்:
உ.இரா. சூரியநாராயணன்

ஆலோசகர்கள்:
ம.ப. பெரியசாமித்தூரன்
டாக்டர் (திருமதி) ராஜம்மாள் பா. தேவதாஸ்

தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகம்:
பல்கலைக்கழகக் கட்டடம், சென்னை - 5

**நூல் கிடைக்குமிடம்:** **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,**
**மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், இரண்டாம் முதன்மைச் சாலை,**
**தரமணி, சென்னை - 600 113.**

பத்து தொகுதிகள் கொண்ட தொகுப்பு ஒன்றின் விலை: ரூ.1200

வரைபடங்கள் தயாரிப்பு: டி.டி.கே. பார்மா லிட். ( அச்சகப் பிரிவு)

அச்சிட்டவர்:

ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆப்செட், இராயப்பேட்டை, சென்னை - 600 014

குறிப்பு:

இக் கலைக்களஞ்சியத்திலுள்ள கட்டுரைகளுக்கு இடையிடையே அடைப்புக் குறிகளுக்குள் 'த.க.' என்று கொடுக்கப்பட்டிருக்கும். 'த.க.' என்பது தனிக் கட்டுரை என்பதன் சுருக்கம். ஆகவே இக் குறிப்புக்கு முன்பாக உள்ள பொருளைப் பற்றி இக்கலைக்களஞ்சியத்தில் தனிக் கட்டுரை ஒன்று அகர வரிசைப்படி அதற்குரிய இடத்தில் உள்ளது என்று தெரிந்துகொள்ளவேண்டும். வெப்ப நிலைகளைக் குறிக்கும்போது, என்று குறி போடப்பட்டிருந்தால், அது சென்டிகிரேடு அளவையைக்° குறிக்கும். இக்குறியுடன் 'பா' என்ற எழுத்து சேர்க்கப்பட்டிருந்தால், அது பாரன்ஹீட் அளவையைக் குறிக்கும்.

கலைக்களஞ்சியத்தில் உள்ள கட்டுரைகளில் ஆங்காங்கு 'பார்க்க' என்ற குறிப்பைத் தொடர்ந்து வேறு தனிக் கட்டுரைகள் சிலவற்றின் தலைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும். இந்தக் கட்டுரைகளையும் சேர்த்துப் படித்தால், ஒரு பொருளைப் பற்றி மேலும் விரிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

# முன்னுரை

## [நான்காவது பதிப்பு]

சென்னை மாநிலக் கல்வி அமைச்சராகத் திகழ்ந்த திரு. தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களால், அனைத்து அறிவுத் துறைகளிலும் தமிழ் மேம்பாடு காண வேண்டும்; வளர்ச்சி காணவேண்டும் என்ற தலையாய நோக்கத்துடன் 1946-ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக் கழகம் சென்னையில் தோற்றுவிக்கப்பெற்றது. முதல் முயற்சியாக ஆங்கிலத்தில் அமைந்திருப்பது போன்று பெரிய கலைக்களஞ்சியங்களை உருவாக்கும் திட்டம் தமிழ்வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டது. தமிழில் கலைக்களஞ்சியத்தைப் பத்துத் தொகுதிகளாகக் கொண்டுவரவேண்டுமென்று திட்டமிடப்பட்டு, தமிழறிஞர் திரு. ம.ப. பெரியசாமித்தூரன் அவர்களைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு தொடங்கப்பட்ட இப்பணி 1968-இல் நிறைவுபெற்றது. இந்திய மொழிகளில் பத்துத் தொகுதிகளைக் கொண்ட விரிவானதொரு கலைக்களஞ்சியம் தமிழ் மொழியில் தான் முதன் முதலில் வெளிவந்தது. இதைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஓர் ஒப்புயர்வற்ற ஆக்கபூர்வமான தமிழ்ப்பணியாகக் கருதலாம்.

பொதுக் கலைக் களஞ்சியத்தைத் தமிழில் முதல் பதிப்பாகத் திறம்பட வெளியிட்டுச் சிறந்த அனுபவம் பெற்ற தமிழ் வளர்ச்சிக் கழகம், 1968-இல் குழந்தைகளுக்கெனத் தனியே அழகிய வண்ணப்படங்களுடனும், விளக்கப்படங்களுடனும் கூடிய சிறந்ததொரு குழந்தைகள் கலைக் களஞ்சியத்தைப் பத்துத் தொகுதிகளில் முதல் பதிப்பாக வெளியிடத் தொடங்கியது. இப்பணி மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் 1976-இல் நிறைவேறியது. குழந்தைகள் கலைக் களஞ்சியத்தின் முதற்பதிப்பிற்கும் திரு. ம.ப. பெரியசாமித்தூரன் அவர்களே தலைமைப் பதிப்பாசிரியராக விளங்கினார். இந்திய மொழிகளில் இதுவும் ஒரு முன்னோடியான முயற்சி.

பொதுவாக இந்திய மொழிகளில் குழந்தைகள் இலக்கியம் மிகவும் குறைவு. அதுவும் அனைத்துத்துறைகளிலும் சிறுவர்கட்குப்பயன்படத்தக்க செய்திகளைக் கொண்ட கலைக்களஞ்சியம் போன்ற நூல்கள் இந்திய மொழிகட்குள் ஒப்பில்லாத உயர்ந்த முயற்சியாகும். தமிழ் வளர்ச்சிக் கழகம் பெருமுயற்சியின் மூலம் பல் துறைகளிலும் பல அறிஞர்களின் பங்களிப்பைப் பெற்று, வண்ணப் படங்களுடன், எழிலுடன், ஈர்ப்புடன் பத்துத் தொகுதிகளைக் கொண்டு வந்திருப்பது மனம் திறந்து பாராட்டப்பட வேண்டிய சாதனையாகும்.

குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் திருந்திய இரண்டாம் பதிப்புப்பணி 1981–இல் தொடங்கியது. இதற்கிடையில் திரு. தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் முதுமை காரணமாக ஓய்வு பெற்றார். இந்தியாவின் மாநில, மைய அமைச்சராகப் பணியாற்றிய திரு. சி.சுப்பிரமணியம் அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்றார். அவருடைய வழிகாட்டுதலின் கீழ் குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் திருந்திய மறுபதிப்பு பணி 10

தொகுதிகளுடன் 1988–இல் நிறைவுற்றது. திருந்திய பதிப்பின் இரண்டாம் பதிப்பு, 10,000/– படிகள், மூன்றாம் பதிப்பு 2000 படிகள் தமிழக அரசால், தமிழ் வளர்ச்சித் துறை மூலம் வெளியிடப்பட்டன. இப்பொழுது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நான்காம் பதிப்பை வெளியிட முன்வந்துள்ளது.

குழந்தைகள் கலைக்களஞ்சியம் 1988–க்குப் பின் திருத்தம் பெறவில்லை, எனவே இப்பதிப்பில் உள்ள சில செய்திகள் காலம் கடந்தவைகளாக இருக்கலாம். பத்துத் தொகுதிகளைக் கொண்ட இந்த நூல் வரிசையின் பயன்பாட்டை அது எவ்வகையிலும் குறைக்காது.

குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் நான்காவது பதிப்பை வெளியிட முன்வந்துள்ள தமிழக அரசுக்கும், உலகத் தமிழ் மொழி ஆய்வு நிறுவனத்துக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். பெற்றோர்களும், ஆசிரியர்களும், குழந்தைகளும் பரவலாகப் பயன்பெறுவர் என்பது மன நிறைவு தரும் நம்பிக்கையாகும்.

வா.செ. குழந்தைசாமி

பேரா. வா. செ. குழந்தைசாமி
தலைவர்
தமிழ் வளர்ச்சிக் கழகம்




# குழந்தைகள் கலைக் களஞ்சியம்

**வௌவால் :** பகலெல்லாம் உறங்கி இரவு நேரத்தில் மரத்திற்கு மரம் பறந்து, இரை தேடும் ஒரு பிராணி வௌவால். வௌ வால் பறக்கக் கூடியது என்றாலும், இது பறவை அல்ல. இது விலங்கு இனத்தைச் சேர்ந்த ஒரு பாலூட்டி. குட்டி போட்டுப் பாலூட்டும் விலங்குகளில் பறக்கக் கூடியது வௌவால் மட்டும்தான். வௌவாலின் மிக நீளமான முன்கால் விரல்களையும் பின்கால்களையும் மெல்லிய சவ்வுபோன்ற தோல் இணைத்துள்ளது. இத்தகைய விந்தையான இறக்கையால் வௌவால் பறக்கிறது.

வௌவால்கள் உலகெங்கும் காணப் பட்டாலும் வெப்பமண்டலப் பகுதிகளில் தான் இவை அதிகம். மரங்கள், குகைகள், பாழடைந்த மண்டபங்கள் முதலிய இடங் களில் இவை வாழ்கின்றன. வௌவாலின் நிறம் பொதுவாகக் கறுப்பு. சிவப்பு நிற வௌவால்களும் சில உண்டு. வௌ வாலின் உடல் முழுதும் மென்மையான உரோமம் வளர்ந்திருக்கும். பின்கால் விரல் களில் வளைந்த நகம் உண்டு. கொக்கி போன்ற இந்த நகங்களால் கூரை, சுவர், மரக்கிளை முதலியவற்றைப் பற்றிக் கொண்டு வௌவால்கள் தலைகீழாகத் தொங்கியவாறே உறங்கும்.

வௌவாலின் கண்கள் மிகச் சிறியவை. ஆனால் காதுகள் பெரியன. வௌவால் தன் கண்களை அதிகம் பயன்படுத்துவ தில்லை. இதன் குரல் ஒலியே இதற்குப் பெரிதும் உதவுகிறது. இது வௌவாலிடம் மட்டும் காணப்படும் ஒரு விந்தையாகும். வௌவாலின் குரல் மிக உச்ச தொனியில் உள்ளது. இதன் ஒலி ஒரு விநாடிக்கு 30,000 முதல் 70,000 அதிர்வுகளைக் கொண்ட தாக இருக்கும். விநாடிக்கு 20 முதல் 30,000 அதிர்வுகளைக் கொண்ட ஒலியைத் தான் நம்மால் கேட்கமுடியும். எனவேதான் வௌவால் கத்துவது நமக்குக் கேட்ப தில்லை. வௌவால் இவ்வாறு ஒலி எழுப் பும்போது, அந்த ஒலி எதிரில் பூச்சி, புழு அல்லது வேறு எந்தச் சிறிய பொருள் இருந் தாலும் அதன்மீது பட்டு எதிரொலி (த.க.) உண்டாகும். இந்த எதிரொலியைக் கொண்டு வௌவால் தன் எதிரில் உள்ள பொருள் எந்தத் திசையில் எவ்வளவு தொலைவில் உள்ளது என்பதை அறிந்து கொள்ளும். எனவேதான், இருட்டிலுங்கூட



வௌவால்



பழந்தின்னி வெளவால்

வெ்ளவால் சுவரிலோ மரத்திலோ மோதிக் கொள்ளாமல் பறக்க முடிகிறது. பல வௌவால்கள் கூட்டமாகப் பறக்கும் சமயத்திலும் ஒன்றின் எதிரொலியைக் கேட்டு மற்றொன்று குழப்பம் அடைவதில்லை. ஒவ்வொன்றுக்கும் தன் ஒலியும் எதிரொலியும் நன்றாகத் தெரியும். இது வியப்பாக இருக்கிறதல்லவா?

பொதுவாக வௌவால் இருவகைப் படும். ஒன்று, பழந்தின்னி வௌவால். இது உருவில் பெரியது. இதனைப் பெருவௌவால் (Macro Chiroptera) என்பர். தமிழ் இலக்கியத்தில் இது வாவல் எனக் குறிப்பிடப்படுகிறது. மற்றொன்று துரிஞ்சில். இதனைச் சிறு வௌவால் (Micro Chiroptera) என்பர். இரவு நேரத்தில் இவை வீடுகளில் பறந்து திரிவதை நாம் பார்க்கலாம்.

பழந்தின்னி வௌவாலின் முகம் நரி போல இருப்பதால் இதனைப் 'பறக்கும் நரி' (Flying Fox) என்றும் சொல்வதுண்டு. இது பழங்களிலுள்ள சாற்றை மட்டும் உறிஞ்சி உண்ணும். இரத்தச் சோகைக்கு மருந்தாக இந்த வௌவாலை உட்கொள்வர். துரிஞ்சல்கள் சின்னஞ் சிறிய பூச்சியினங்களை உண்டு வாழ்கின்றன.

மீன்பிடிக்கும் வௌவால்



துரிஞ்சிலைக் காட்டிலும் பெரியதாக — ஆனால் பழந்தின்னி வௌவாலைக் காட்டிலும் சிறியதாக உள்ள மற்றோர் இன வௌவாலும் உண்டு. துரிஞ்சில்களிடையே வண்ணத் துரிஞ்சில் என ஒருவகை உண்டு. இது மிக அழகாக இருக்கும். இதன் ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொரு நிறம் கொண்டது.

மத்திய, தென் அமெரிக்கப் பகுதிகளில் வாழும் ஒருவகை வௌவால்கள், விலங்குகளைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சி வாழ்கின்றன. மீன்களைத் தின்னும் வௌவால்களும் உண்டு.

**வெளவால் மீன்** (Pomfret): இது ஒரு கடல்மீன். தலை சிறியது. வாய் முன்முனையில் இருக்கும். செதில்கள் சிறியவை; வழு வழுப்பாக இருக்கும். முதுகிலே ஒரு துடுப்பு நீளமாக இருக்கும். வால்துடுப்பு ஆழமான இரண்டு பிரிவுகளாக இருக்கும். இம்மீனின் பொதுவான நிறம் வெண்மையான சாம்பல் நிறம். வௌவால் மீனில் சிறிய முட்கள் இருப்பதில்லை. இது தமிழ் நாட்டின் கிழக்குக்கரையில் மார்ச்சு முதல் செப்டெம்பர் வரையில் அகப்படும். இது மிகவும் சுவையுடையது.

**ஜப்பான்** : ஆசியாக் கண்டத்தின் கிழக்கிலுள்ள நாடு ஜப்பான். இந்நாடு ஒரு தீவுக் கூட்டமாக உள்ளது. இதில் ஹாக்கைடோ, ஹான்ஷூ, கியூஷூ, ஷிக்கோக்கூ ஆகிய நான்கு பெரிய தீவுகளும், ஆயிரக்கணக்கான சிறிய தீவுகளும் உள்ளன. மேற்கே ஜப்பான் கடலும் கிழக்கே பசிபிக் சமுத்திரமும் உள்ளன. மொத்தப் பரப்பு 3,72,113 சதுர கிலோ மீட்டர். மக்கள்தொகை சுமார் 11.76 கோடி (1981). தலைநகரம் டோக்கியோ.

ஜப்பான் ஒரு மலைப்பாங்கான நாடு. பூஜியாமா இங்குள்ள மிக உயர மான சிகரம். இது தவிர, மேலும் சுமார் 30 எரிமலைகள் உள்ளன. எரிமலைகள் மிகுந்திருப்பதால் இந்நாட்டில் அடிக்கடி நில நடுக்கம் ஏற்படுவது உண்டு. ஆயிரக்கணக்கான வெந்நீர் ஊற்றுகளும் இங்கு உள்ளன. ஏரிகள் பல உள்ளன.

ஜப்பானிய ஆறுகள் மிகச் சிறியவை. போக்குவரத்துக்கு இவை பயன்படுவதில்லை. எனினும் நீர்ப்பாசனத்திற்கும் மின் சக்தி உற்பத்திக்கும் இவை உதவியாக இருக்கின்றன. மலைநாடாக இருப்பதால் இங்கு சமவெளிகள் மிகக் குறைவு. இச்சமவெளிகளில்தான் நாட்டு மக்கள் அனைவருக்கும்




ஜப்பான்



ஜப்பானின் தலைநகரான டோக்கியோ

தேவைப்படும் உணவைப் பயிர்செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, இரசாயன உரங்களைப் பயன்படுத்தித் தீவிர சாகுபடி முறையைக் கையாளுகின்றனர். இந்நாட்டின் முக்கிய விளைபொருள் நெல். கோதுமை, பார்லி, பருப்பு வகைகள், உருளைக்கிழங்கு முதலியனவும் பயிரிடப்படுகின்றன. மலைப் பகுதிகளில் தேயிலை விளைகிறது. கடலிலிருந்து பலவகையான மீன்கள் கிடைக்கின்றன. மீன்பிடித்தல் மிக முக்கியமான தொழில். முத்தும், பவளமும் ஜப்பானியக் கடலிலிருந்து கிடைக்கின்றன.

ஜப்பானில் தாதுவளம் குறைவு. எனினும் சிறந்த தொழில்வளர்ச்சி பெற்ற நாடுகளுள் ஒன்றாக ஜப்பான் விளங்குகிறது. இதற்கு ஜப்பானிய மக்களின் உழைப்பும் முயற்சியுமே காரணம். தாதுப் பொருள்களை இறக்குமதி செய்து பலவிதமான பொருள்களைத் தயாரிக்கின்றனர். வானொலி, தொலைக்காட்சி, காமிரா, பீங்கான், மோட்டார் கார் முதலியன தயாரிப்பதில் இந்நாடு முன்னணியிலிருக்கிறது. விசிறி, பொம்மை, விளையாட்டுக் கருவி, மட்பாண்டம் முதலிய கைவினைப் பொருள்களும் புகழ்பெற்றவை. தந்த வேலை, மரச்செதுக்குச் சிற்பம் முதலிய கலைகளில் ஜப்பானியர்கள் வல்லவர்கள். இரெயில் எஞ்சின், மோட்டார் கார், சைக்கிள் மற்றும் எந்திரங்களும் இந்நாட்டின் ஏற்றுமதிகளில் முக்கியமானவை.

சாலை, ரெயில் போக்குவரத்தும் இங்கு சிறப்பாக முன்னேறியிருக்கிறது. மிக வேகமாகச் செல்லும் இரெயில்கள் பல இங்கு உள்ளன. இவற்றைப்போல வேகமாக ஓடும் இரெயில்கள் வேறு எந்நாட்டிலும் இல்லை. கப்பல் கட்டுவதில் உலகிலேயே ஜப்பான் முதலிடம் வகிக்கிறது.

ஜப்பானியர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். பெரும்பாலான மக்கள் இன்று நகரங்களில்தான் வசிக்கின்றனர். ஜப்பானியர்கள் அழகு உணர்ச்சி உள்ளவர்கள். எளிமையாக வாழ்வதில் விருப்பம் கொண்டவர்கள். இவர்களுடைய இல்லம் எளிமையாகவும் தூய்மையாகவும், அழகாகவும் இருக்கும். எவ்வளவு சிறிய வீடாக இருந்தாலும் அதில் ஒரு சிறு மலர்த் தோட்டம் இருக்கும். புல பூக்களை விதம் விதமாக அடுக்கும் கலையில் ஜப்பானியர்கள் கைதேர்ந்தவர்கள். "இக்கேபானா" என அழைக்கப்படும் இக்கலை இப்போது உலகெங்கும் பரவி வருகிறது. ஜப்பானியர் தேநீர் வழங்கி விருந்தோம்பும் பண்பாடு புகழ்பெற்றது. இவ்வழக்கம் ஒரு தனிக் கலையாகவே போற்றி வளர்க்கப்படுகிறது.



**'இக்கேபானா' என்னும் பூக்களால் அலங்கரிக்கும் கலை**

உடை அணிவதில் இங்கு மேல்நாட்டு முறை இப்போது பரவி வந்தாலுங்கூட, ''கிமோனா'' என்ற பண்டைக்கால ஆடைகளை இவர்கள் கைவிடவில்லை.

ஜப்பானிய மொழி, சீன மொழியைப் போல ஓவிய எழுத்து வடிவம் கொண்டது. இதைக் கற்பது எளிதல்ல. இந்தியாவிலிருந்து பரவிய பௌத்தமும், இயற்கையைத் தெய்வமாக வழிபடும் ஷின்டோ மதமும் இந்நாட்டின் முக்கிய சமயங்கள். ஜப்பான் ஒரு முடியாட்சி நாடு. எனினும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட நாடாளுமன்றமே அதிகாரம் பெற்றது.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது தென்கிழக்கு ஆசியாவில் பல நாடுகளை ஜப்பான் வென்றது. ஆனால் ஹிரோஷிமா (த.க.), நாகசாகி என்ற இரு ஜப்பானிய நகரங்கள்மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசி அழித்தவுடன் ஜப்பான் தோல்வியுற்றுச் சரணடைந்தது. எனினும் ஜப்பானியர்கள் தங்கள் உழைப்பாலும் விடா முயற்சியாலும் போரில் இழந்தவற்றையெல்லாம் ஈடுசெய்து, இன்று தொழில் முன்னேற்றத்தில் மிகச் சிறந்து விளங்குகின்றனர்.

**ஜம்மு-காச்மீரம் :** இந்தியாவிலுள்ள மாநிலங்களுள் ஒன்று ஜம்மு-காச்மீரம்.




**ஜம்மு-காச்மீரம்**

இது நாட்டின் வடபகுதியில் உள்ளது. இதன் தெற்கில் இமாசலப் பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களும் மேற்கில் பாக்கிஸ்தானும் வடக்கிலும் கிழக்கிலும் சீனாவும் உள்ளன. இம்மாநிலத்தின் பரப்பு 2,22,200 சதுர கிலோமீட்டர். மக்கள் தொகை 59,87,389 (1981).

ஜம்மு-காச்மீரம் இயற்கை வளம் மிகுந்த மிக அழகிய மலைப்பிரதேசம். இமய மலையின் உயரமான சிகரங்கள் பல இங்கு உள்ளன. இவற்றுள் நங்கபர்வதம் (8,126 மீட்டர்) முக்கியமானது. நீர்வீழ்ச்சிகளும் ஏரிகளும் பூங்காக்களும் இங்கு ஏராளமாக உள்ளன. பனியாறுகள் பலவற்றை இங்கு காணலாம். குளிர்காலத்தில் பனிமழை பெய்யும். இத்தகைய சிறந்த இயற்கைக் காட்சிகளைக் கொண்ட இம் மாநிலம், ஈடு இணையற்ற உல்லாசப் பயண இடமாகவும் சுகவாசத் தலமாகவும், விளங்குகிறது.

காச்மீரத்தில் சாலை, மரங்கள், வீடுகள் மீது பனி படிந்திருப்பதைக் காணலாம்.





**காச்மீரத்தில் ஒரு காட்சி**

சிந்துநதியின் துணையாறுகள் சில இங்கு தோன்றுகின்றன. இவற்றுள் ஜீலம் முக்கிய மானது. இம்மாநிலத்தில் பெரிய ஏரிகள் பல உள்ளன. இவை மிக அழகானவை. உலார் (Wular) ஏரி இந்தியாவிலே மிகப் பெரிய நன்னீர் ஏரி. தால் (Dal), நாகின் (Nagin), மனஸ்பால் (Manasbal) ஆகியவை மற்ற முக்கிய ஏரிகள். படகுகளில் மரத்தால் சிறு வீடுகளைக் கட்டி ஏரிகளிலும் ஜீலம் ஆற்றிலும் மிதக்கவிட்டிருக்கிறார்கள். இப் படகுகளில் செல்வதும் மீன்பிடிப்பதும் நல்ல பொழுதுபோக்காகும். ஏரிகளைப் போன்றே இம்மாநிலத்திலுள்ள பூங்காக் களும் புகழ்பெற்றவை. அக்பர், ஜகாங்கீர், ஷாஜகான் முதலிய மொகலாய மன்னர்கள் அமைத்த அழகிய பூங்காக்கள் பல இங்கு உள்ளன. இயற்கை நீரூற்றுகளும் இம் மாநிலத்தில் பல இருக்கின்றன. இவற்றுக்கு உடல்நோயைத் தீர்க்கும் அரிய மருத்துவத் தன்மை உண்டு. மிக உயரமாக வளரும் பர், பைன் மரங்களை இங்குக் காணலாம். பனிக்கரடி, சிறுத்தை, கஸ்தூரிமான், ஓநாய் முதலியன இங்குக் காணப்படும் முக்கியக் காட்டுவிலங்குகள்.

ஜீலம் ஆற்றுப் பள்ளத்தாக்கு செழிப் பானது. கோதுமை, பார்லி, சோளம் முதலியன முக்கிய விளைபொருள்கள். பழங்களும் காய்கறிகளும் இங்கு மிகுதி. காச்மீர ஆப்பிளும் மாதுளையும் சிறந்தவை. கோடைகாலத்தில் இம்மாநிலமெங்கும் அழகிய வண்ண மலர்கள் பெருமளவில் பூக்கும். அழகிய வாதுமை மலர்கள் பூத்துக் குலுங்கும் இளவேனிற் காலத்தில்தான் காச் மீரத்தில் கோந்த் என்னும் விழா கொண் டாடுகின்றனர். ரோஜா, மல்லிகை முதலிய மலர்களிலிருந்து அத்தர் என்னும் வாசனைத் தைலம் தயாரிக்கின்றனர்.

மக்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள். ஜம்மு பகுதியில் இந்துக்கள் அதிகம். இம் மாநிலத்தின் முக்கிய மொழி காச்மீரி. தலை நகர் ஸ்ரீநகர். இது ஜீலம் ஆற்றின் கரையில் அமைந்துள்ள அழகிய நகரம். ஜம்மு மற்றொரு முக்கிய நகரம். இது குளிர்காலத் தலைநகரமாகும். குல்மார்க் ஒரு சிறந்த மலைவாசத்தலம். இங்குள்ள பெரிய பள்ளத்தாக்கு பலவிதமான விளையாட்டு களுக்கு ஏற்றதாக இருக்கிறது. பனிச்சறுக்கு போன்ற குளிர்கால விளையாட்டுகளுக்கு இது புகழ்பெற்ற இடம். அமர்நாத், வைஷ்ணதேவி ஆகிய குகைக்கோயில்கள் இந்துக்களின் புனிதத் தலங்கள். இமய மலையில் 3,880 மீட்டர் உயரத்தில் அமைந் துள்ளது அமர்நாத் குகை. இதனுள் இயற்கையாக உருவாகிய பனிச் சிவலிங்கம் உள்ளது. இது வளர்பிறையின்போது வளர் வதும், தேய்பிறையின்போது தேய்வதுமாக உள்ளது. ஆண்டுதோறும் சிரவணப் பௌர்ணமியன்று ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வந்து இச்சிவலிங்கத்தை வழி படுகின்றனர். ஸ்ரீநகருக்கு அருகேயுள்ள சங்கராச்சார்யா என்ற மலை உச்சியின் மீதும் ஒரு சிவன் கோயில் உள்ளது. இது கி.மு. 200-ல் அசோகருடைய புதல்வர் ஜலுக்கா என்பவரால் கட்டப்பட்டதாகும். இதன் சிற்பவேலைப்பாடு மனத்தைக் கவர் வதாக உள்ளது. ஹஜ்ரத்பால் என்பது முஸ்லிம்களின் புனிதத் தலம். இங்குள்ள மசூதியில் முகம்மது நபியின் (த.க.) ரோமம் ஒன்றைப் பாதுகாத்துப் போற்றிவரு கின்றனர்.



காச்மீரப் பெண் — உலகப் புகழ்பெற்ற காச்மீர சால்வையும் பலவகை அணிகலங்களையும் அணிந் திருக்கிறாள்.

கலைநுட்பம் கொண்ட கைவினைப் பொருள்களைச் செய்வதில் காச்மீர மக்கள் தேர்ந்தவர்கள். இங்கு தயாரிக்கப்படும் அழகான கம்மியப் பொருள்களும் சித்திர வேலைப்பாடு கொண்ட மரச்சாமான்களும் எவருடைய உள்ளத்தையும் கவரக்கூடி யவை. சித்திரத் தையல் வேலை இம் மாநிலத்தின் தொன்மையான கலைகளில் ஒன்று. காச்மீரக் கம்பளம், சால்வை, பட்டு ஆடைகள் முதலியவற்றுக்கு உலகெங்கும் பெரும் மதிப்பு உண்டு.

காஷ்யபா என்னும் முனிவரால் உரு வாக்கப்பட்டதால் காச்மீரம் எனப் பெயர் பெற்றது என்பர். தொன்றுதொட்டு இந்தி யாவின் ஒரு பகுதியாக விளங்கிவந்த காச்மீரம், வெள்ளையர் ஆட்சியின்போது ஒரு சுதேச சமஸ்தானமாக இருந்துவந்தது. இந்தியா 1947-ல் விடுதலை அடைந்த போது, காச்மீரம் ஒரு தனிச் சுதந்தர நாடாக இருக்க விரும்பியது. ஆனால் சில நாட்களிலேயே பாக்கிஸ்தானியர் இதன்மீது படையெடுத்தனர். இந்திய உதவியைச் காச்மீர மன்னர் நாடினார். உடனே இந்தியா அப்படையெடுப்பை முறி யடித்தது. இந்திய மாநிலங்களுள் ஒன்றாக காச்மீரம் இணைந்தது. எனினும் ஒரு பகுதி இன்னும் பாக்கிஸ்தான் வசமே உள்ளது.

**ஜமேக்கா** (Jamaica): 1494-ல் கொலம் பஸ் இதைக் கண்டு பிடித்தார். மேற்கிந்தியத்




ஜமேக்கா

தீவுகளுள் ஒன்று. இது ஒரு சுதந்தர நாடு. டர்க்ஸ், கேக்கஸ், கேமான், மொரான்ட், பேட்ரோகேஸ் ஆகிய சிறு தீவுக் கூட்டங் களும் இதனுள் அடங்கும். மலைகளும் ஆழ்ந்த பள்ளத்தாக்குகளும் இத்தீவில் உள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றாறு கள் ஓடுகின்றன. கரும்பு, காப்பி, வாழை, கோக்கோ, திராட்சை, ஆரஞ்சு, நெல், தென்னை முதலியன பயிரிடப்படுகின்றன. பாக்சைட்டு தாது ஏராளமாக இத் தீவிலுள்ளது. கிங்ஸ்ட்டன் இத்தீவின் தலை நகரும் முக்கிய துறைமுகப்பட்டினமும் ஆகும். இங்கு நீக்கிரோக்கள், வெள்ளை யர், மேற்கிந்தியர், சீனர், இந்தியர் முதலி யோர் வாழ்கின்றனர். பரப்பு 10,991 சதுர கிலோமீட்டர். மக்கள்தொகை 22 லட்சம் (1981). சர்க்கரை, வாழைப்பழம், காப்பி, தேங்காய், ரம் என்னும் சாராய வகை முதலியன ஏற்றுமதியாகின்றன.

**ஜலதரங்கம்:** ஒரு கிண்ணத்தில் சிறி தளவு நீரைவிட்டு, அதன் விளிம்பில் ஒரு கரண்டியால் தட்டுங்கள். 'டங்' என்று இனிய ஒலி பிறக்கிறதல்லவா? இனி, அந்தக் கிண்ணத்தில் மேலும் சிறிது நீரை ஊற்றிய பின் தட்டுங்கள். மீண்டும் ஒலி எழும்பும்; ஆனால் ஒலியில் சிறிது வேறுபாடு இருக் கும். முதல் ஒலியின் சுரமும், இரண்டாவது ஒலியின் சுரமும் வெவ்வேறாக இருக்கும். ஒரு கிண்ணத்தைத் தட்டினால் எழும்பும் ஒலி, அதிலிருக்கும் நீரின் அளவைப் பொறுத்து வேறுபடும். இவ்வாறு பலவேறு சுரங்களை ஒலிக்கும் வகையில் நீர் உள்ள பல கிண்ணங்களை வைத்துக் கொண்டு ஒரு பாடலையே இசைக்கலாம்! அதுதான் ஜலதரங்கம். ஜலதரங்கத்திற்கு 'உதக வாத்தியம்' என்னும் பெயரும் உண்டு. அறு பத்து நான்கு கலைகளில் ஜலதரங்கம் வாசிப்பதும் ஒன்றாகும்.



ஜலதரங்கம்

வயலின், மிருதங்கம் ஆகிய இசைக் கருவிகளைத் துணைக்கருவிகளாகக் கொண்டு ஜலதரங்க இசைக் கச்சேரிகள் நடைபெறுகின்றன. இதில் எழும் ஒலி மிக இனிமையாக இருக்கும்.

பண்டைக்காலத்தில் ஜலதரங்கத்திற்கு வெண்கலக் கிண்ணங்களைப் பயன்படுத்தினர். இன்று பீங்கான் கோப்பைகளைப் பயன்படுத்துகிறார்கள். இதை வாசிப்பவர், வெவ்வேறு சுரங்களை உண்டாக்கும் பீங்கான் கோப்பைகளைத் தம் முன்னால் அரைவட்டமாக வைத்துக் கொள்வார். இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாகக் கோப்பைகளின் சுருதி உயர்ந்துகொண்டே போகும். இவ்வாறு 16 கோப்பைகள் இருக்கும். குறிப்பிட்ட இராகத்திற்கு வேண்டியவாறு கோப்பைகளின் சுருதியைக் கூட்டுவார்கள். அதில் வராத சுரங்களுக்கும் கோப்பைகளைச் சுருதி சேர்த்து, அவற்றை அரைவட்டத்திற்கு வெளியே அந்தந்தக் கிண்ணத்திற்கு அருகில் வைப்பார்கள். வாசிக்கும் இராகத்திற்கு ஏற்ப, வேண்டிய கோப்பைகளை வெளிப்புறத்திலிருந்து உட்புறம் அரைவட்டத்தில் வைத்து, வேண்டாத கோப்பைகளை வெளியே நகர்த்தி விடுவார்கள். இவ்வாறு செய்வதால் விரைவில் வெவ்வேறு இராகங்களில் பாடல்களை வாசிக்க முடிகின்றது.

கோப்பையிலுள்ள நீர் பல வழிகளில் பயன்படுகிறது. சீராக சுருதி சேர்த்துக் கொள்வதற்கும், இனிய நாதத்தை உண்டாக்குவதற்கும் இது உதவுகிறது. நீர்மட்டத்தின் மேல் இலேசாகத் தட்டினால் இசைக்கு வேண்டிய கமகங்கள் உண்டாகும். மிக வேகமாகக் கோப்பைகளைத் தட்டி வாசிக்கும்போது, அவை புரண்டுவிடாமல் இருக்கவும் அவற்றிலுள்ள நீர் உதவுகிறது.

**ஜனநாயகம் (Democracy):** இந்தியாவில் குடிமக்கள் தங்கள் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கும், மாநிலச் சட்டமன்றங்களுக்கும் தேர்ந்தெடுக்கிறார்கள். மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இம் மன்றங்கள் சட்டங்களை இயற்றுகின்றன; அதே பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படும் அமைச்சரவைகளுக்கு மக்களின் சார்பில் ஆட்சியை நடத்தும் அதிகாரங்களை இம் மன்றங்கள் அளிக்கின்றன. இவ்விதம் ஒரு நாட்டின் குடிமக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களின்மூலம் தங்களைத் தாங்களே ஆளும் முறைக்கு ஜனநாயகம் என்று பெயர். ஜனநாயகத்தை மக்களாட்சி என்றும் வழங்குவர்.

பண்டைக்காலத்தில் பல இடங்களில் மக்களாட்சி நிலவி வந்திருக்கின்றது. தமிழ் நாட்டில் பழங்காலத்தில் ஊராட்சிமுறை, மக்களாட்சியின் அடிப்படையில் அமைந்திருந்தது. திருமணமான ஆண்கள் அனைவரும் ஊராட்சியில் நேர்முகமாகப் பங்கு கொண்டனர். பண்டைய கிரேக்கர்களும், ரோமானியர்களும் நடத்திய நகர ஆட்சியிலும் (City State) மக்களாட்சியே நடந்தது வந்தது.

இன்று பெரும்பாலான நாடுகள் விரிந்த நிலப் பரப்பும், மிகுந்த மக்கள் தொகையும் கொண்டிருக்கின்றன. எனவே, நாட்டு மக்கள் அனைவரும் நேர்முகமாக ஆட்சியை நடத்துவது என்பது இயலாத காரியம். ஆகவே, வயதுவந்த ஆண்களும் பெண்களும் வாக்குரிமை (த.க.) மூலம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் மூலம் ஆட்சியில் பங்குகொள்ளும் முறைதான் இப்பொழுது பெரும்பாலும் காணப்படுகிறது. இதற்குப் 'பிரதிநிதித்துவ ஜனநாயகம்' என்று பெயர். ஆட்சி மன்றங்களுக்கு நாட்டுமக்கள் வாக்குரிமை மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையே 'தேர்தல்' (த.க.) ஆகும்.

மக்களாட்சி நடைபெறும் பெரும்பாலான நாடுகள் குடியரசுகளாக (த.க.) உள்ளன. குடியரசில் அரசரோ அரசியோ ஆட்சித் தலைவராக இருப்பதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவரே ஆட்சித் தலைவராக இருக்கிறார். அமெரிக்காவில் குடியரசுத் தலைவரை மக்கள் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இது 'மறைமுகத் தேர்தல்' எனப்படும். பிரிட்டனில் ஜனநாயக ஆட்சி முறையே நிலவுகிறது. எனினும் அங்கு அரசர் அல்லது அரசியே ஆட்சித் தலைவராக இருக்கிறார். இவ்

வாறு, ஒரு நாட்டில் ஆட்சித்தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப் படாமலேயே அந்நாட்டின் அரசு, மக்களாட்சி முறையில் நடந்து வரலாம்.

ஜனநாயகத்தில் தனி மனிதரின் உரிமை களைக் காப்பாற்றுவது அரசின் கடமை யாகும். இந்த உரிமைகள் 'அடிப்படை உரிமைகள்' (த.க.) எனப்படும். அடிப்படை உரிமைகள் எவை எவை என்பதும், அவற்றை எவ்வாறு காப்பாற்ற வேண்டும் என்பதும் ஒவ்வொரு நாட்டின் அரசியலமைப்பிலும் விவரிக்கப்பட்டிருக் கும்.

மக்களாட்சியில் குறைகள் சில உள்ளன. நாட்டில் போர், பொருளாதார நெருக்கடி போன்றவை ஏற்பட்டால், அதைச் சமாளிக்க மக்களாட்சியில் உடனடியாக முடிவெடுக்க முடிவதில்லை. இச்சமயங் களில், மக்களின் பிரதிநிதிகள் கூடி முடி வெடுப் பதைவிட, ஒருவரே முடிவெடுப்பது எளிதாக இருக்கும். நெருக்கடி ஏற்படும் போது மக்களாட்சி அரசுகள் பல வீழ்ச்சி யடைந்திருக்கின்றன. இத்தகைய குறைகள் இருப்பினும், ஏனைய ஆட்சிகளைவிட மக்களாட்சியே பலவிதங்களில் மேலான தாக இருக்கிறது. பார்க்க: அரசாங்கம்; குடி யரசு; தேர்தல்.

**ஜாகிர் ஹுசேன்** (1897-1969): இந்தி யாவின் மூன்றாவது குடியரசுத் தலைவராக இருந்தவர் டாக்டர் ஜாகிர் ஹுசேன்.

ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரான ஐதராபாத்தில் 1897 பிப்ரவரி 8-ல் ஜாகிர் ஹுசேன் பிறந்தார். உத்தரப் பிரதேசத்தி லுள்ள எடவா என்ற ஊரில் உயர்நிலைக் கல்வி கற்றார். அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்றார். பின் ஜெர்மனியிலுள்ள பெர்லின் பல்கலைக்கழகத்திலும் பயின்று 'டாக்டர்' பட்டம் பெற்றார்.

அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தபோது, காந்தியடி களின் தீவிர ஆதரவாளரானார். காந்தி யடிகள் வகுத்த ஆதாரக்கல்வி முறை இவரை மிகவும் கவர்ந்தது. கல்வித்துறை யில் தாம் பணியாற்றியபோது, ஆதாரக் கல்வி முறையை நாடெங்கும் பரப்ப அரும் பாடுபட்டார்.

டெல்லியிலுள்ள ஜமியா மில்லியா என்னும் பல்கலைக்கழகத்தின் துணைவேந் தராக 1926 முதல் 1948 வரை ஜாகிர் ஹுசேன் பணியாற்றினார். பின்னர்



ஜாகிர் ஹுசேன்

அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத் துணை வேந்தராக எட்டு ஆண்டுகள் பணிபுரிந் தார். பீகார் மாநிலத்தின் ஆளுநராகவும் பணிபுரிந்தார். 1962 மே மாதத்தில் இந்தி யாவின் குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்வு பெற்றார். 1967 ஆம் ஆண்டில் இந்தியாவின் குடியரசுத் தலைவராக ஜாகிர் ஹுசேன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டு ஆண்டுகள் பதவி வகித்த இவர் 1969 மே 3-ல் காலமானார்.

ஜாகிர் ஹுசேன் கல்வித்துறையில் சிறந்த அறிஞராக விளங்கினார். இந்திய அரசின் உயர்நிலைக் கல்வி வாரியத்தின் தலைவராக இருந்து, உயர்நிலைக் கல்விச் சீர்திருத்தத்திற்கான பல திட்டங்களை வகுத்துக் கொடுத்தார். பீகார், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் கல்விச் சீர்திருத்த ஆலோ சனைக் குழுக்களில் உறுப்பினராயிருந்து தம் ஆலோசனைகளைக் கூறினார். பன்னாட்டுக் கல்வி நிறுவனங்கள் பலவற்று டன் தொடர்புகொண்டிருந்தார். யுனெஸ்கோ நிருவாக வாரியத்தின் உறுப் பினராகப் பணியாற்றினார்.

ஆங்கிலம், இந்தி, உருது ஆகிய மொழி களில் ஜாகிர் ஹுசேன் சிறந்த பேச்சாள ராகவும் எழுத்தாளராகவும் விளங்கினார்.

இம்மூன்று மொழிகளிலும் ஆதாரக்கல்வி முறை குறித்தும், கல்வி வளர்ச்சி பற்றியும் பல நூல்கள் எழுதியுள்ளார். பிளேட்டோ வின் 'குடியரசு' என்ற நூலை உருதுமொழி யில் மொழிபெயர்த்திருக்கிறார்.

கல்வித்துறையில் இவர் ஆற்றிய அருந் தொண்டினைப் பாராட்டி, இந்திய அரசு இவருக்கு 1954-ல் 'பத்ம விபூஷண்' என்னும் விருதை வழங்கிச் சிறப்பித்தது. மீண்டும் இந்திய அரசின் மிக உயர்ந்த விரு தாகிய 'பாரத ரத்னா' விருது இவருக்கு 1963-ல் வழங்கப்பட்டது. டெல்லி, கல்கத்தா, அலகாபாத், அலிகார், கைரோ ஆகிய பல்கலைக்கழகங்கள் இவருக்கு 'இலக்கிய மேதை' (D. Litt.) பட்டம் வழங்கிச் சிறப்பித்தன.

**ஜான்சி ராணி** (1835-1858): இந்தியா 1947-ல் சுதந்தரம் அடைந்தது. ஆனால் அதற்கு முன்னரே ஆங்கிலேயரை எதிர்த்துப் பல போர்கள் நடந்தன. 1857-ல் நடந்த போர் இவற்றுள் முக்கியமானது. இதனைச் சிப்பாய்க் கலகம் என்று கூறுவர். ஆனால் உண்மையில் இது ஒரு சுதந்தரப் போராட்டமாகும். இப்போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களுள் ஒருவர் ஜான்சி ராணி.

ஜான்சி ராணி 1835-ல் பிறந்தார். இவரது இயற்பெயர் இலட்சுமிபாய். ஜான்சி என்பது இவருடைய கணவர் ஆண்ட சுதேச சமஸ்தானத்தின் பெயர். இன்று இது உத்தரப்பிரதேச மாநிலத்தில் அடங்கியுள்ளது.

ஜான்சி சமஸ்தானத்தின் மன்னர் கங்கா தரராவ் 1853-ல் இறந்தபோது அவருக்கு வாரிசு இல்லை. எனவே இலட்சுமிபாய் தம் கணவர் பெயரில் நாட்டை ஆளத்தொடங் கினார். அப்போது இவருக்கு வயது 18 தான்! இலட்சுமிபாய் பின்னர் தம் கணவரு டைய வாரிசாக ஒரு மகவைத் தத்து எடுத்துக்கொண்டார். ஆனால் இந்த ஏற் பாட்டை ஆங்கிலேயர் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். ஒரு மன்னர் வாரிசு இல்லாமல் இறந்தால் அந்த சமஸ்தானம் ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்படும் என்பது அப்போதைய சட்டம். அச்சட்டத் தின்படி ஜான்சியைத் தம் ஆட்சியின்கீழ் ஆங்கிலேயர் கொண்டுவந்தனர். அதனால் ஆங்கிலேயர்மீது இலட்சுமிபாய் வெறுப்புக் கொண்டார். இதுபோலவே தம் சமஸ் தானங்களை இழந்த வேறு சில மன்னர் களும் அவர்களுடைய குடிமக்களும் ஆங்கிலேயர்மீது கோபம் கொண்டிருந் தனர். இந்திய ராணுவத்தில் பணியாற்றி வந்த வீரர்களுக்கும் ஆங்கிலேயர்மீது வெறுப்பு ஏற்பட்டிருந்தது. இவ்வாறு பலரும் ஆங்கிலேயரை வெறுத்து, அவர் களை இந்தியாவிலிருந்து விரட்டியடிக்க வேண்டுமென்று உறுதிகொண்டிருந்தனர். இத்தகைய பகைமையின் விளைவாக 1857-ல் ஆங்கிலேயரை எதிர்த்து இந்தியாவில் பல இடங்களில் போர் மூண்டது. இலட்சுமி பாயும் இப்போரில் தீவிரமாக ஈடுபட லானார். ஜான்சியில் ஆங்கிலேயரின் படை முறியடிக்கப்பட்டது. இலட்சுமிபாய் அரசி யாக முடிசூட்டிக் கொண்டார்.

ஆனால் இவர் அதிக நாட்கள் ஆள வில்லை. ஆங்கிலேயர் புதிய படையை அனுப்பினர். ஜான்சி நாட்டு வீரர்கள் தீரத்துடன் போரிட்டபோதிலும் ஜான்சி விரைவில் ஆங்கிலேயர் வசமாகியது. இலட் சுமிபாய் உடனே அருகிலிருந்த குவாலியர் நாட்டைக் கைப்பற்றி அங்கிருந்து ஆங்கிலே யரை எதிர்த்தார். ஆண்போல உடை உடுத்துக் கொண்டு தாமே முன்னின்று போரை நடத்திவந்தார். அப்போது ஆங்கிலேயரின் துப்பாக்கிக் குண்டு ஒன்று இலட்சுமிபாய்மீது பாய்ந்தது. போர்க் களத்திலேயே இவர் இறந்தார்.

**ஜிப்ரால்ட்டர்** (Gibraltar): ஸ்பெயினின் தெற்கேயுள்ளது. இது ஒரு பிரிட்டிஷ் குடி யேற்றப் பகுதி; பரப்பு 5.8 ச.கி.மீ.; மக்கள் தொகை 30,000 (1984). இது ஒரு தீப கற்பம். ஜிப்ரால்ட்டர் பாறை என்றும் வழங்கும். பட்டணம் மலையடிவாரத்தில் கடலோரத்திலுள்ளது. 1400 அடி உயர முள்ள மலைசூழ்ந்த சிறந்த அரணமைந்தது. பிரிட்டிஷ் அரசின் முக்கிய கடற்படைத் தளம். மலையினுள் சுரங்கங்களிலும் குகை களிலும் பாதுகாப்புச் சாதனங்கள், நீர்த் தொட்டி, உணவு சேமிப்புகள், மருத்துவ விடுதி முதலியன உள்ளன. கி.பி. 711-ல்




ஜிப்ரால்ட்டர்

மூர் இனத்து 'டாரிக்' (Tariq) என்பவர் இதை வென்றார். ஸ்பானியர்கள் 1462லும் பிரிட்டிஷார் 1704லும் இதைக் கைப்பற்றினர். அதிலிருந்து பிரிட்டிஷ் அரசின்கீழ் இருந்துவருகிறது. ஜிப்ரால்ட்டர் ஜலசந்தி ஸ்பெயினுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையில் மத்தியதரைக் கடலையும் அட்லாண்டிக் சமுத்திரத்தையும் இணைக்கிறது. இதன் வழியாக உலகின் காற்பகுதி கப்பல்கள் செல்கின்றன.

**ஜீலம் ஆறு** பஞ்சாபில் பாயும் 5 ஆறுகளில் மிகவும் மேற்கிலுள்ளது. இதன் நீளம் சுமார் 720 கி.மீ. காச்மீரின் மேற்கே தொடங்கி ஸ்ரீநகர் உலார் (Wular) ஏரி வழியாகச் செல்கிறது. இது பஞ்சாபின் குறுக்கே ஓடிச் சீனாப் ஆறுடன் கலக்கிறது. இதன் தென்கரையில்தான் போரஸுக்கும் அலெக்சாந்தருக்கும் இடையே புகழ்வாய்ந்த கடும்போர் நடந்தது.

**ஜீன்:** பாரம்பரிய குணங்களைக் கட்டுப்படுத்தும் காரணியலகு ஜீன் எனப்படும். இது உயிரணுக்களின் உட்கருவில் (Cell Nucleus) உள்ள குரோமோசோம்கள் என்ற நிறக்கோல்களிலே மணிகோத்தது போல அமைந்திருக்கும். ஓர் உயிர் (செடி அல்லது பிராணி) பிறந்தவுடனே தாய் தந்தையரை ஒத்திருக்காது. ஆனால் வளர வளர தாய் அல்லது தந்தை அல்லது இருவருடைய பாரம்பரியத்தையும் ஒத்து வருவதைக் காணலாம். இவ்வொப்புமைக் குணத்தை நிலைத்திருக்கச் செய்வது ஜீன் ஆகும்.

**ஜுலூக்கள்** (Zules): இவர்கள் நெட்டால் என்ற ஆப்பிரிக்கப் பகுதியில் கி.பி. 1400 ஆண்டு முதல் 1800 ஆண்டு வரை வாழ்ந்துவந்த நிகோனி (Ngoni) பழங்குடிகளுள் ஒருவகையினர் ஆவர். 1840 ஆம் ஆண்டில் ஜுலூ நாட்டின் பெரும் பகுதி போயர் ஆதிக்கத்தின்கீழ் வந்து சேர்ந்தது. ஆனால் 1887 ஆம் ஆண்டில் பிரிட்டிஷார் அவர்களுடைய அரசன் சொல்லைக் கேளாமல் இந்நாட்டைத் தங்களுடையதாக்கிக் கொண்டனர். இப்போது ஜுலூ மக்கள் ஓர் அரசனைத் தேர்ந்தெடுக்கின்றனர். பிறகு தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தார் அரசனை அங்கீகரிக்கிறார்கள். இவர்களில் பலர் இப்போது கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் சுரங்கங்களிலும் பண்ணைகளிலும் வேலை செய்து பிழைக்கிறார்கள். ஜுலூலாந்து 1897-ல் நெட்டாலுடன் இணைக்கப்பட்டது. இது தென் ஆப்பிரிக்காவில் கிழக்குக் கடற்கரை ஓரத்தில் சுவாஸிலாந்துக்கும் டுகேலா நதிக்கும் இடையில் இருக்கிறது.

**ஜெர்மனி:** ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஒரு நாடு ஜெர்மனி. இதன் கிழக்கில் போலந்து, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளும், தெற்கில் ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளும், மேற்கில் பிரான்ஸ், லக்செம்பர்கு, பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகளும், வடக்கில் டென்மார்க் நாட்டுடன் வடகடல், பால்ட்டிக் கடல் ஆகியனவும் எல்லைகளாக உள்ளன. ஜெர்மனி இரண்டாம் உலக யுத்தத்திற்குமுன் ஒரே நாடாக இருந்தது. இப்போது மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி என இருநாடுகளாகப் பிரிந்துள்ளது.

மேற்கு ஜெர்மனியின் பரப்பு 2,48;651 சதுர கிலோமீட்டர். மக்கள் தொகை 6,17,00,000 (1981). தலைநகரம் பான் (Bonn). கிழக்கு ஜெர்மனியின் பரப்பு 1,08,200 சதுர கிலோமீட்டர். மக்கள் தொகை 1,67,00,000 (1981). இங்குள்ள பெர்லின் நகரத்தின் கிழக்குப் பகுதி இதன் தலைநகரம் ஆகும். மேற்கு பெர்லின், மேற்கு ஜெர்மனியின் ஒரு பகுதியாக விளங்கி வருகிறது. பார்க்க: பெர்லின்.




ஜெர்மனி

கோதுமை — உருளைக்கிழங்கு — ரசாயனப் பொருள்கள்
பார்லி — பீட் கிழங்கு — நிலக்கரி
ரை — இரும்பு — எந்திரங்கள்

ஹாம்பர்க், மூனிக், கொலோன், பிராங்க்பர்ட், ஹானோவர் ஆகியவை மேற்கு ஜெர்மனியிலுள்ள பிற முக்கிய நகரங்கள், லைப்சிக், டிரேஸ்டென், கார்ல் மார்க்ஸ்-ஸ்டாட், மாக்டெபர்கு ஆகியவை கிழக்கு ஜெர்மனியிலுள்ள பிற முக்கிய நகரங்கள்.

ஜெர்மனியின் வடபகுதி தாழ்ந்த சமவெளி. இது மிகவும் செழிப்பானது. கோதுமை, ரை, பார்லி முதலிய தானியங்களும், உருளைக்கிழங்கு, சர்க்கரை தயாரிக்கப் பயன்படும் பீட் கிழங்கு, திராட்சை முதலியனவும் விளைகின்றன. தென் பகுதியில் ஆல்ப்ஸ் (த.க.) மலைத்தொடர் உள்ளது. இங்குள்ள கறுப்புக் காடு (**Black Forest**), பொஹீமியன் காடு ஆகியவை இயற்கை எழில் மிகுந்தவை. இங்கு உடல் நலத்திற்குப் பெரிதும் உகந்த இதமான வெப்பநிலை நிலவுகிறது. ரைன், எம்ஸ், வேசர், எல்பெ, ஓடர், டான்யூப் முதலியன இந்நாட்டில் பாயும் ஆறுகள். இவை யாவும் பல கால்வாய்களால் இணைக்கப்பட்டுள்ளன. எனவே இவை கப்பல் போக்குவரத்துக்கு மிக உதவியாக இருக்கின்றன. இந்நாட்டில் தாது நீர் ஊற்றுகள் பல உள்ளன. இவை உடல்நலத்திற்கு மிக ஏற்றவை. இந்த ஊற்றுகளில் குளிப்பதற்காக வெளிநாட்டினர் பலர் இங்கு வருகின்றனர்.

**ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் நகரின் ஒரு தோற்றம்**



இரும்பு, நிலக்கரி, சோடாக் காரம் முதலியன இந்நாட்டில் மிகுதி. எனவே இங்குத் தொழிற்சாலைகள் பெருகியுள்ளன. இரும்பு, எஃகு ஆலைகளும் எந்திரங்கள், கார், மின்சாரக் கருவிகள், கண்ணாடி — காமிராக்கள், இரசாயனப் பொருள்கள், பீங்கான் சாமான்கள் முதலியன தயாரிக்கும் தொழிற்சாலைகளும் பல உள்ளன. அச்சுக்கலையில் ஜெர்மனி சிறந்து விளங்குகிறது. அச்சு எழுத்துகளையும் அச்சிடும் எந்திரத்தையும் முதன் முதலில் கண்டுபிடித்தவர் கூட்டன்பர்க் என்ற ஜெர்மானியரே.

கிழக்கு ஜெர்மனியில் பழுப்பு நிலக்கரி அதிகம். இது மின்சக்தி உற்பத்திக்குப் பெரிதும் உதவுகிறது. கிழக்கு ஜெர்மனியில் பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சி நடைபெறுவதால் தொழில்கள் யாவும் அரசாங்க நிருவாகத்தில் உள்ளன. வேளாண்மையும் கூட்டுறவுப்பண்ணை முறையில் நடைபெறுகிறது.

ஜெர்மானியர் கலை ஆர்வம் மிக்கவர்கள். இசை, நடனம் ஆகியவற்றில் மிகுந்த விருப்பம் உள்ளவர்கள். ஜெர்மனி பல சிறந்த இசை மேதைகளை உருவாக்கிய நாடு. பேத்தோவன் (த.க.), பாக், ஹாண்டெல், வாக்னர் முதலியோர் இவர்களுள் முக்கியமானவர்கள். ஜெர்மன் மொழி இலக்கிய வளமுள்ளது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த கோதே (Goethe) ஒரு சிறந்த எழுத்தாளர். இவர் எழுதிய கவிதைகளும் நாடகங்களும் உலகப்புகழ்பெற்றவை.

*1914*-ல் முதல் உலக யுத்தத்தைத் தோற்றுவித்தது ஜெர்மனியே. எனினும் இது தோற்றது. பிறகு இது ஒரு குடியரசாகியது. ஹிட்லர் (த.க.) ஆட்சியைக் கைப்பற்றி *1939*-ல் இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடங்கினார். இதிலும் ஜெர்மனி தோல்வியடைந்தது. ஜெர்மனியின் கிழக்குப் பகுதியை ரஷ்யா கைப்பற்றியது. மேற்குப் பகுதியை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நேச நாடுகள் தம் வசப்படுத்திக் கொண்டன. எனினும் *1955*-ல் இரு பகுதிகளுக்குமே சுதந்தரம் வழங்கப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தம் நடந்தபோது ஜெர்மனியின் தொழிற்சாலைகள் யாவும் அழிந்துவிட்டன. எனினும் ஜெர்மானியர் தம் சலியாத உழைப்பாலும் திறமையாலும் உலகமே வியப்படையும் விதத்தில் இப்போது முன்னேறியிருக்கிறார்கள்.

**ஜென்னர்** (Edward Jenner 1747-1823): மனிதரைப் பீடிக்கும் கொடிய தொற்று நோய்களில் ஒன்று அம்மை (த.க.). இது வராமல் தடுக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் எட்வர்டு ஜென்னர்.

இங்கிலாந்தில் கிளஸ்டர்ஷயரிலுள்ள ஒரு சிற்றூரில் ஜென்னர் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு பாதிரியார். பள்ளிப் படிப்பு முடிந்ததும் ஜென்னர் மருத்துவக் கல்வி பயின்று பட்டம் பெற்றார். அக்காலத்தில் லண்டனில் தலைசிறந்த மருத்துவராக விளங்கிய ஜான் ஹன்டர் என்பவரிடம் ஜென்னர் சில ஆண்டுகள் பயிற்சி பெற்றார். அவரைத் தம் ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டியாகவும், ஆருயிர் நண்பராகவும் கொண்டார்.

ஹன்டரின் அறிவுரைப்படி ஜென்னர் 1773-ல் தம் சொந்த ஊருக்கே திரும்பி அங்கு கிராம மக்களுக்குத் தொண்டு செய்துவந்தார்.

அக்காலத்தில் உலகமெங்கும் அம்மை நோயினால் ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்தார்கள். இந்நோய் கண்டு பிழைத்தவர்களும் அம்மைத் தழும்புகளினால் தம் அழகை இழந்தார்கள். இந்நோய் பரவுவதற்கான காரணம் யாருக்கும் தெரியாமலே இருந்தது. ஜென்னர் வாழ்ந்த ஊரில், மாடு வளர்க்கும் மக்கள் மிகுதியாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு மாடுகளின் மூலமாக மாட்டம்மை (Cow Pox) என்ற நோய் அடிக்கடி வந்தது. ஆனால், அந்நோய் எளிதில் குணமாகிவிடும்; உடலில் வடுக்களை உண்டாக்கவுமில்லை. இந்த நோய் ஒருமுறை கண்டவர்களுக்குப் பெரியம்மை வராது என அவ்வூர் மக்கள் நம்பி வந்தனர். ஜென்னர் நன்கு ஆராய்ந்து இது உண்மைதான் எனக் கண்டார். இதனை 1796 மே 14-ல் ஒரு சோதனை மூலம் நிருபித்தார். மாட்டம்மை கண்டிருந்த ஒரு பால்காரப் பெண்ணின் அம்மைப் புண்ணிலிருந்து பாலை எடுத்தார். நல்ல உடல் நிலையுடனிருந்த எட்டு வயதுச் சிறுவனுக்கு அந்தப் பாலைக் கொண்டு அம்மை குத்தினார். இரண்டு மாதங்கள் கழித்து, அவனுக்குப் பெரியம்மைப் பாலை எடுத்து அம்மை குத்தினார். ஆனால் அவனுக்குப் பெரியம்மை உண்டாகவில்லை. இதிலிருந்து, பெரியம்மையும் மாட்டம்மையும் நெருங்கிய உறவுடையவை; ஒருமுறை மாட்டம்மை கண்டவர்களின் உடலுக்கு மீண்டும் எவ்வகையான அம்மை நோயும் பீடிக்காதபடி 'எதிர்ப்புச் சக்தி' உண்டாகிவிடுகிறது; எனவேதான் மாட்டம்மை கண்டவர்களுக்குப் பெரியம்மை வார்ப்பதில்லை என ஜென்னர் விளக்கினார்.

ஜென்னர்



ஜென்னரின் இந்த முறையை மற்ற மருத்துவர்களும் பின்பற்றினார்கள். விரைவில் உலகெங்கும் இம்முறை பரவியது. பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இவருக்கு விருதும் மானியமும் வழங்கியது. ரஷ்ய அரசரும், பிரெஞ்சு மன்னர் நெப்போலியனும் (த.க.) இவரைச் சிறப்பித்துப் பரிசளித்தனர். இவர் பெரும் புகழ் பெற்றார். எனினும், இவர் தம்முடைய சிற்றூரிலேயே இருந்துகொண்டு கிராம மக்களுக்குத் தொண்டு செய்து வந்தார்.

மருத்துவத் துறையில் மட்டுமின்றி இசையிலும் ஜென்னர் ஈடுபாடு உடையவர். இவர் நன்றாகப் பாடுவார்; கவிதை இயற்றுவார். பறவைகளைப் பற்றியும் இவர் ஆராய்ந்து வந்தார். அமைதியான வாழ்க்கை நடத்திவந்த இவர் 1823-ல் காலமானார்.

**ஜெனீவா:** சுவிட்ஸர்லாந்து நாட்டிலுள்ள புகழ்பெற்ற நகரம் ஜெனீவா. இது ஜெனீவா என்ற ஏரியின் கரை மீது உள்ளது. இந்த ஏரியில் கலக்கும் ரோன் ஆறு, பிறகு ஜெனீவா நகர் வழியே சென்று பிரான்ஸ் நாட்டில் பாய்கிறது. ஜெனீவா ஏரி பெரியது. இதன் கரையில் பல நகரங்கள் உள்ளன. இந்நகரங்களுக்கும் ஜெனீவா நகரத்திற்குமிடையே கப்பல் போக்குவரத்து நடைபெறுகிறது.

ஜெனீவா மிகத் தொன்மையான நகரம். இங்குள்ள தேவாலயமும் பல்கலைக் கழகமும் பழமையானவை. ஆனால் 1850 லிருந்து இந்நகரைத் திருத்திப் புதுமுறையில் அமைத்து வந்துள்ளனர். இந்நகரின் மக்கள் தொகை சுமார் இரண்டு லட்சம். கடிகாரங் கள், நகைகள், இசைக்கருவிகள், மின்சார சாதனங்கள், நுட்பமான விஞ்ஞானக் கருவி கள், ரசாயனப் பொருள்கள் முதலியன இங்கு தயாரிக்கப்படுகின்றன. இங்கு தயாரிக்கப்படும் சாக்கலேட் புகழ்பெற்றது.

சுகவாசத்துக்குச் சிறந்த இடம் ஜெனீவா, ஆல்ப்ஸ் மலையின் அழகிய இயற்கை காட்சிகளுக்கிடையே இது அமைந் துள்ளது. ஆல்ப்ஸ் மலையின் அழகிய சிகரங்கள் பலவற்றை இங்கிருந்து காண லாம். ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக் கான உல்லாசப் பயணிகள் உலகெங்கு மிருந்து இங்கு வருகின்றனர். அழகிய அருங் கலைக்கூடமும் நாடக அரங்குகளும் பொருட்காட்சிசாலைகளும் இங்கு உள்ளன. அழகான பல பூங்காக்களும் உள்ளன.

உலக மாநாடுகள் பல இந்நகரில் நடை பெற்றுள்ளன. பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் 1863-ல் இங்குதான் தொடங்கப் பட்டது. முதல் உலக யுத்தத்திற்குப் பின் அமைக்கப்பட்ட சர்வதேச சங்கம் (த.க.) இங்குதான் இருந்தது. பிறகு பன்னாட்டு தொழிலாளர் சங்கமும் இங்கு அமைக்கப் பட்டது. இன்று, ஐக்கிய நாடுகள் சபையின் (த.க.) ஓர் உறுப்பாகிய உலக சுகாதார நிறு வனமும் (World Health Organisation) மற்றும் சில அமைப்புகளும் இங்கு உள்ளன.

தொடக்க காலத்தில் பர்கண்டி அரச வமிசத்தினருக்குத் தலைநகராக இருந்த இந் நகரம் பிறகு ஒரு தனிச் சுதந்திர நகரமாக விளங்கியது. 1798-ல் இந்நகரை பிரான்ஸ் கைப்பற்றியது. ஆனால், நெப்போலி யனுக்குப் பிறகு 1815-ல் இது சுவிட்ஸர் லாந்தின் ஒரு பகுதியாகியது. பிரெஞ்சுப் புரட்சி (த.க.) தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்களுள் ஒருவரும், பிரபல எழுத் தாளருமான ரூசோ (Rousseau) இந்நகரில் பிறந்தவரே. அவர் எழுதிய புகழ்பெற்ற நூல்களின் பெயரையே இந்நகரில் பல தெருக்களுக்கு வைத்துள்ளனர்.

**ஜைராஸ்கோப்** (Gyroscope): எப்படித் திருப்பினாலும் அச்சின் திசை மாறாமல் சுழலக்கூடிய ஒரு கனமான சக்கரத்தைக் கொண்ட எந்திர அமைப்புதான் ஜைராஸ் கோப். இது விமானம், கப்பல் மற்றும் பல எந்திர சாதனங்களில் பயன் படுகிறது.

படத்தைப் பாருங்கள். கனமான சக்கரம் (X) ஒன்று, AB என்ற அச்சில் சுழலக்கூடிய வகையில் ஒரு வளையத்தில் பொருத்தப் பட்டுள்ளது. இந்த வளையம், CD என்ற அச்சில் திரும்பக்கூடிய வகையில் பொருத் தப்பட்டுள்ளது. இந்த வளையம், EF என்ற செங்குத்தான அச்சில் திரும்பக்கூடிய வகை யிலும் அமைந்துள்ளது. இந்த வளையங் களுக்கு ஜிம்பல்கள் (Gimbals) என்று பெயர். இந்த அமைப்பு எல்லாப் பக்கமும் திரும்பக்கூடிய் வகையில் உள்ளது.

ஒரு நீளமான நூலைச் சக்கரத்துடன் இணைந்த தண்டில் (Y) சுற்றி, பின்னர் வேக மாக இழுத்துவிட்டால் சக்கரம் வேகமாகச் சுழலும். இப்போது சக்கரத்தின் அச்சு ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கியே இருக்கும். ஜைராஸ்கோப்பை எப்படித் திருப்பினா லும், தலைகீழாகக் கவிழ்த்தாலுங்கூட, சக்கரம் சுழன்றுகொண்டிருக்கும் வரை அதன் திசை மாறவே மாறாது.

ஜைரோ-திசைகாட்டி (Gyro-Compass) என்பது இதன் அடிப்படையில் அமைந்த ஒரு சாதனம். ஜைரோ திசைகாட்டியில் காந்தமே இல்லாததால் இது காந்த மண்ட லத்தாலோ, உலோகங்களாலோ பாதிக்கப் படுவதில்லை. இது திசைமாற்றங்களை விரைவாகவும் சரியாகவும் காட்டக்கூடியது.

**ஜைராஸ்கோப்**



மேலும், இது வடக்குத் திசையைச் சரியாகக் காட்டும். இதிலுள்ள சக்கரம் ஒரு மின்சார மோட்டாரினால் சுழல்கிறது.

விமானங்களிலுள்ள சில கருவிகள் ஜைராஸ்கோப்பின் தத்துவத்தைக் கொண்டவை. இவை தாமாகவே விமானத்தின் போக்கைக் கட்டுப்படுத்துகின்றன. கடலினுள் தானாகவே இயங்கிச் சென்று, எதிரிகளின் கப்பல்களைத் தாக்கி அழிக்கக் கூடிய டார்ப்பிடோ (Torpedo) என்னும் சாதனம், ஏவுப்படைக்கலம் (த.க.) போன்றவை ஒழுங்காக இலக்கை நோக்கிச் செல்வதற்கும் ஜைராஸ்கோப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

எண்ணெய்க் கிணறுகள் தோண்டும்போது பூமியினடியில் இறக்கப்படும் நீளமான தண்டு, கோணாமல் ஒரே நேராக இறங்குவதற்கும், வானத்தில் வெகு உயரம் வேகமாகப் பறந்து சென்றுகொண்டிருக்கும் ஓர் இலக்கை நோக்கிச் சுடும்போது குறி தவறாமல் பீரங்கியின் திசையைத் துல்லியமாகத் திருப்புவதற்கும் ஜைராஸ்கோப் உதவுகிறது.

எளிய முறையில் அமைந்த ஜைராஸ்கோப்புகள் விளையாட்டுக் கருவிகளாகவும் இன்று தயாரிக்கப்படுகின்றன.

**ஜைன மதம் :** இந்தியாவில் வழங்கிவரும் மிகப் பழைய மதங்களுள் ஒன்று ஜைன மதம். நல்லொழுக்கத்திற்கு முதலிடம் கொடுத்து வலியுறுத்துவது இந்த மதம். ரிஷபதேவர் முதல் மகாவீரர் (த.க.) வரை 24 தீர்த்தங்கரர்கள் (த.க.) ஜைன மதத்தை இந்தியாவெங்கும் பரப்பினார்கள். இம்மதத்தைப் பின்பற்றுவோர் ஜைனர் அல்லது சமணர் எனப்படுவர். இந்த மதத்தைச் சமண மதம் என்றும் வழங்குவர். பார்க்க: சமண மதம்.

**ஜோக் நீர்வீழ்ச்சி (Jog Falls):** இந்தியாவிலுள்ள முக்கியமான நீர் வீழ்ச்சிகளுள் ஒன்று ஜோக் நீர்வீழ்ச்சி. இதற்கு ஜெர்சாப்பா நீர்வீழ்ச்சி என்றும் பெயர். இது கருநாடக மாநிலத்தில் பெங்களூருக்கு மேற்கில் சுமார் 370 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

மேற்கு மலைத்தொடர்ச்சியில் அடர்ந்த காடுகளிடையே உற்பத்தியாகும் ஷராவதி ஆறு, 250 மீட்டர் அகலமுள்ள பாறைப்படுகையின்மீது மெதுவாக ஓடி ஜோக் என்ற இடத்தில் நான்காகப் பிரிந்து 250 மீட்டர் ஆழத்தில் அருவியாக விழுகின்றது. இந்த நான்கு அருவிகளுக்கும் ராஜா, ரோரர்



ஜோக் நீர்வீழ்ச்சி

(Roarer), ராக்கெட், ராணி என்று பெயர். இந்த அருவிகள் மிக உயரத்திலிருந்து விழுவதால் நீர்த்திவலைகள் சிதறி, வெண்ணிற மேகம்போலத் தோன்றுகின்றன. நீர்த்திவலைகளில் சூரிய ஒளி படும்போது வானவில்லின் வடிவில் அதன் வண்ணங்கள் தோன்றுகின்றன. வானவில்கள் தொங்குவதுபோலத் தோன்றும் இக்காட்சி நீர்வீழ்ச்சியின் இயற்கை எழிலுக்கு மேலும் அழகு சேர்க்கிறது. பகலில் மட்டுமல்லாமல், இரவில் சந்திரனின் நிலவொளியிலும் இந்நீர்வீழ்ச்சி மிக அழகாக இருக்கும். இதன் காரணமாகவே உலகிலுள்ள மிக அழகிய நீர்வீழ்ச்சிகளுள் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்த நீர்வீழ்ச்சியில் நீர்விழும் வேகத்தைப் பயன்படுத்தி மின்சக்தி உற்பத்தி செய்கின்றனர். இங்குள்ள மின்னாக்க நிலையத்திற்கு 'மகாத்மா காந்தி மின்னாக்க நிலையம்' என்று பெயர். இது கருநாடக மாநிலத்தின் முக்கியமானதொரு மின் நிலையமாகும். இது நீர்வீழ்ச்சியிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவிலிருப்பதால் நீர்வீழ்ச்சியின் இயற்கை அழகு பாதிக்கப்படவில்லை. ஜோக் நீர்வீழ்ச்சியின் அழகைக் காண நாடெங்குமிருந்து பலர் இங்கு வருகின்றனர்.

**ஜோன் (Joan of Arc, *1412-1431*):** பிரான்ஸ் நாட்டின் தேசிய வீராங்கனை ஆர்க் நகர ஜோன். 15 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து

பிரான்ஸ் விடுதலை பெற்றதற்கு இவரது முயற்சியே காரணம்.

கிழக்கு பிரான்ஸில் மஸ் (Meuse) என்னும் ஆற்றின் கரையிலிருந்த டான்ரமி (Donremy) என்னும் கிராமத்தில் ஜோன் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு குடியான வர். ஜோன் பள்ளிக்குச் செல்லவில்லை; எனவே, இவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. வீட்டிலும் வயலிலும் தாய்தந்தையருக்கு உதவிசெய்து வந்தார். வீட்டுவேலைகளைச் செய்யும்போது, தம் தாய் சொல்லும் தெய்விகக் கதைகளை ஆர்வத்துடன் கேட்டு மிகுந்த தெய்வபக்தி உடையவரானார். பெரும்பாலும் தனியாகப் பிரார்த்தனை செய்வதிலும், தெய்விகச் சிந்தனையிலும் காலங்கழித்து வந்தார்.

தம் 13 ஆம் வயதில் கேதரின், மார்கரெட், மைக்கேல் ஆகிய புனிதர்களின் தெய்விகக் குரல்கள் தம்முடைய செவிகளில் அடிக்கடி ஒலித்ததாக இவர் கூறுவார். இவர் பிரெஞ்சு அரசவைக்குச் செல்லவேண்டும் என்றும், ஆங்கிலேயருக்கு எதிராக பிரெஞ்சுப்படைக்கு இவர் தலைமைதாங்க வேண்டும் என்றும் அக்குரல்கள் இவருக்குக் கட்டளையிட்டன. சிறுவயதினரான இவருக்கு அக்கட்டளைகளினால் முதலில் அச்சமும், ஐயமும், தயக்கமும் தோன்றின. எனினும் இறுதியில் அக்கட்டளைகளை நிறைவேற்றுவதில் இவர் முனைந்தார்.

ஆர்க் நகர ஜோன்



அந்தச் சமயத்தில் பிரான்ஸுக்கும் பிரிட்டனுக்குமிடையே நூறாண்டுப் போர் நடந்து கொண்டிருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் ஒன்றுபட்டு ஆங்கிலேயரை எதிர்க்காமல், தமக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். பர்கண்டியர் என்னும் பிரெஞ்சுப் பிரபுக்கள் ஆங்கிலேயருக்குத் துணையாகவும் இருந்தனர். பிரெஞ்சு இளவரசன் டாபின் (Dauphin) முடிசூடத் துணிவின்றி, ஷினான் (Chinon) என்ற சிறு நகரில் ஒடுங்கி வாழ்ந்து வந்தான். இத்தகைய இருண்ட நேரத்தில், வீரக்குரல் எழுப்பி, பிரெஞ்சு மக்களுடைய தேசிய உணர்ச்சியைத் தூண்டி, அவர்களை வீறுகொண்டு எழச் செய்யும் பொறுப்பை 16 வயதே நிரம்பிய ஜோன் ஏற்றார்.

ஆண்டவன் கட்டளையை நிறைவேற்றும் பணியின் முதற்படியாக, 1428-ல் ஜோன், இளவரசனைக் காணப் புறப்பட்டார். ஆண் உடையணிந்து, பகைவர்களிடம் சிக்காமல் ஷினான் சேர்ந்தார். தம்மைக் கடவுள் அனுப்பியுள்ளதாக ஜோன் கூறியதை அங்குள்ளவர்கள் முதலில் நம்பவில்லை. முன்பின் பார்த்தறியாத இளவரசனை ஒரு கூட்டத்தின் மத்தியில், தம் தெய்விக உணர்வினால் ஜோன் அடையாளம் காட்டினார். ''நீங்கள்தான் பிரான்ஸ் நாட்டு அரியணையின் சட்டபூர்வமான வாரிசு; உங்கள் உரிமையை நிலைநாட்டப் புறப்படுங்கள்'' என்று வீரவுரை மொழிந்தார். அதைக் கேட்ட இளவரசன் டாபின் புதிய ஊக்கமும், வீரமும், தன்மான உணர்வும் பெற்றான்.

அப்பொழுது ஆர்லியன்ஸ் நகரை ஆங்கிலேயர் முற்றுகையிட்டிருந்தனர். ஜோன் ஒரு படைக்குத் தலைமைதாங்கிச் சென்று ஆர்லியன்ஸை மீட்டார். இந்த வெற்றி பிரெஞ்சுப் படைகளின் வீர உணர்வை மேன்மேலும் தூண்டிவிட்டது. இதற்கிடையில், ஜோனின் ஆலோசனைப்படி இளவரசன் டாபினுக்கு ஏழாம் சார்லஸ் என்ற பெயருடன் பிரான்ஸின் அரசராக முடிசூட்டு விழா நடந்தது. முடிசூட்டு விழாவுடன் தம் பணி முடிந்துவிட்டதாக ஜோன் கருதி, தம் ஊர் திரும்ப விரும்பினார். ஆனால் அரசன் அதற்கு இசையவில்லை. அரசனுடைய வற்புறுத்தலுக்கு இணங்கி, இவர் தொடர்ந்து போரை நடத்தலானார்.

பிறகு, பர்கண்டியரின் தாக்குதலுக்குள்ளான காம்ப்பியன் (Compeigne) நகருக்கு உதவ ஜோன் படையுடன் சென்றார். ஆனால் போரில் காயமடைந்து பர்கண்டியரிடம் சிறைப்பட்டார். அவர்கள் இவரை ஆங்கிலேயருக்கு விற்றுவிட்டனர். ஆங்கிலேயர் இவருக்கு மரண தண்டனை விதித்து, 1431 மே 30-ல் ஒரு நாற்சந்தியில் ஜோனை ஒரு கம்பத்துடன் கட்டித் தீயிட்டு எரித்துக் கொன்றனர். அப்போது இவருக்கு வயது 19.

பிரெஞ்சு மன்னன், தன் பதவியைக் காப்பதிலேயே கவனம் செலுத்தியதால் ஜோனைக் காப்பாற்ற ஒரு முயற்சியும் செய்யவில்லை. எனினும், தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, 25 ஆண்டுகளுக்குப் பிறகு 1455-ல் ஜோன்மீது மறு விசாரணை நடத்த ஏற்பாடு செய்தான். இவ்விசாரணையில் ஜோன்மீது கூறப்பட்ட பழைய தீர்ப்பைப் போப்பாண்டவர் ரத்து செய்தார். 1920 மே 16-ல் ஜோன், புனிதர்களுள் ஒருவராக அறிவிக்கப்பட்டார். 'ஆர்லியன்ஸ் கன்னி' என்று அன்புடன் அழைக்கப்படும் ஜோனை பிரெஞ்சு மக்கள் இன்று தேச பக்தி, தெய்வபக்தி, வீரம் ஆகியவற்றின் சின்னமாகப் போற்றி வருகிறார்கள்.

**ஸ்ரீரங்கம் :** தமிழகத்திலுள்ள புகழ்பெற்ற வைணவத் தலமான திருவரங்கத்திற்கு ஸ்ரீரங்கம் என்றும் பெயர். பார்க்க: திருவரங்கம்.

**ஸ்ரீலங்கா :** இலங்கை நாட்டின் புதிய பெயர் ஸ்ரீலங்கா. 1972 ஆம் ஆண்டில் இந்நாடு ஒரு குடியரசாகியபோது இப்புதிய பெயர் சூட்டப்பெற்றது. பார்க்க: இலங்கை.

**ஷராவதி** கருநாடக மாநிலத்தில் ஓடும் ஆறுகளில் ஒன்று ஷராவதி. இது ஷிமோகா (ஷிவமொக்கா) மாவட்டத்தில் 104 கிலோ மீட்டர் தொலைவு ஓடி ஜோக் என்ற இடத்

ஷராவதி நீர்மின் நிலையம்


நீர் வரும் குழாய்கள்


லிங்கனமக்கி அணை


மினனுக்கிகள்


மின் இணைப்புக்களம்

தில் 250 மீட்டர் உயரத்திலிருந்து அருவியாக விழுகிறது. இந்த அருவிக்கு ஜோக் நீர்வீழ்ச்சி (த.க.) என்று பெயர். ஷராவதி ஆற்றின் மொத்த நீளம் 133 கிலோ மீட்டர்.

ஜோக் நீர்வீழ்ச்சிக்கு அருகில் மகாத்மா காந்தி நீர்மின் நிலையம் உள்ளது. ஷராவதி நீர்மின் திட்டத்தின்கீழ் இருபெரும் நீர்த் தேக்கங்கள் உள்ளன. ஒன்று ஷராவதியின் மேல், லிங்கனமக்கி என்ற இடத்தில் அமைந்துள்ளது. மற்றொன்று ஷராவதியின் துணையாறாகிய தலக்களலேயின்மேல் கட்டப்பட்டிருக்கின்றது.

**ஷா, ஜார்ஜ் பெர்னார்டு** (George Bernard Shaw, *1856-1950*): ஆங்கில இலக்கியத் துறையில் உலகப் புகழ்பெற்ற எழுத்தாளராக விளங்கியவர் ஜார்ஜ் பெர்னார்டு ஷா. இவர் சிறந்த நாடகாசிரியர்; நாவலாசிரியர்; திறனாய்வாளர்.

அயர்லாந்தின் தலைநகராகிய டப்ளின் (Dublin) நகரத்தில் ஜார்ஜ் பெர்னார்டு ஷா பிறந்தார். பள்ளிக் கல்வி இவரைக் கவரவில்லை. ஆனால், வீட்டில் தாமாக நூல்களைப் படித்து இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார். 15 ஆம் வயதில் ஓர் அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தார். இவருடைய தாய் இசையாசிரியராகப் பணியாற்றி வந்தார். இவருக்கும் இயல்பாகவே இசையில் ஆர்வம் இருந்ததால் தாயிடமிருந்து இசைக்கலை பற்றிய நுட்பங்களை அறிந்துகொண்டார். ஓர் எழுத்தாளராக வேண்டும் என்ற முடிவோடு 1876-ல் ஷா லண்டனுக்குச் சென்றார். இசை நாடகம் பற்றிய திறனாய்வுகளைப் பத்திரிகைகளில் எழுதி வந்தார். விரைவில் லண்டனிலுள்ள சிறந்த இசை, நாடக, இலக்கியத் திறனாய்வாளர்களில் ஒருவராகப் புகழ்பெற்றார். 1879 முதல் 1883 வரை நான்கு நாவல்களை எழுதினார். இவற்றில் இவருடைய உயர்ந்த சிந்தனைகள் இடம்பெற்றிருந்தன. எனினும் இந்த நாவல்கள் போதிய வெற்றி பெறவில்லை.

இதற்கிடையில், காரல் மார்க்ஸின் (த.க.) சோஷலிசக் கொள்கை இவரைக் கவர்ந்தது. வன்முறையைத் தவிர்த்து, அமைதி வழியில் சோஷலிசக் கொள்கைகளைப் பரப்புவதற்காக நிறுவப்பட்டிருந்த பேபியன் கழகத்தில் (Fabian Society) 1884-ல் சேர்ந்தார். விரைவில் அதன் முக்கியத் தலைவர்களுள் ஒருவரானார்.

ஆங்கில மொழியில் சிறந்த நாடகங்கள் இல்லை எனக் கருதி இவர் தாமே நாடகங்கள் எழுதலானார். இவர் 50க்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுதியுள்ளார். அவை இலக்கிய உலகில் இவருக்குச் சிறந்த ஓர் இடத்தைத் தேடித்தந்தன. இவர் தம் நாடகங்களில் சமூகத்தில் காணப்படும் தீமைகளையும், மனித வாழ்வில் உண்மையாக ஏற்படும் சிக்கல்களையும் பற்றி எழுதினார். இது ஆங்கில நாடக உலகில் ஒரு புரட்சியாகத் தோன்றியது. 'கருத்துகள் அடங்கிய நாடகம்' (Drama of Ideas) என்ற நாடக இனத்தை இவர் துவக்கிவைத்தார். கருத்துகள் நிறைந்திருப்பினும் நாடகம் சுவையாக இருக்க முடியும் என்பதை இவர் மெய்ப்பித்தார்.



ஷா ஜார்ஜ் பெர்னார்டு

ஷா எழுதிய நாடகங்களுள் வாரன் அம்மையார் தொழில் (Mrs. Warren's Profession), ஆயுதங்களும் மனிதனும் (Arms and the Man), பிக்மேலியன் (Pygmalion), ஆப்பிள் வண்டி (The Apple Cart), புனித ஜோன் (St. Joan) முதலியவை முக்கியமானவை. இவர் எழுதிய நாடகங்களுள் சிறந்தது புனித ஜோன் என்பர்.

இவர், தம் நாடகங்கள் ஒவ்வொன்றுக்கும் நீண்ட முகவுரை எழுதினார். இம் முகவுரைகள் ஆங்கில மொழியில் சிறந்த உரைநடை இலக்கியமாக மதிக்கப் பெறுகின்றன. எள்ளித் திருத்தும் போக்கில் (Satire) நகைச்

சுவை ததும்ப எழுதுவது இவருடைய நடையின் தனிச் சிறப்பாகும். எப்பொருள் பற்றி இவர் எழுதினாலும் அதை மக்கள் விரும்பியதற்கு இவருடைய இந்த நடையே காரணம்.

இலக்கியத்திற்கு இவர் செய்த தொண்டிற்காக இவருக்கு 1925-ல் நோபெல் பரிசு (த.க.) வழங்கப்பட்டது. இவர் 94 ஆண்டுகள் வாழ்ந்தார். இறுதிவரை எழுதிக் கொண்டே இருந்தார்.

**ஷாங்கை :** சீன நாட்டின் பெரிய நகரம் ஷாங்கை. இது உலகின் பெரிய நகரங்களுள் ஒன்று. இங்கு சுமார் 63 இலட்சம் (1982) மக்கள் வாழ்கிறார்கள்.

யாங்ட்ஸி ஆற்றின் துணை ஆறான ஹுவாங்பூ ஆற்றின் கரைமீது ஷாங்கை நகர் அமைந்துள்ளது. கடற்கரையிலிருந்து சுமார் 20 கிலோமீட்டர் தொலைவில் இந் நகர் அமைந்திருந்தாலும் இது சீனாவின் மிகப் பெரிய துறைமுகமாக விளங்குகிறது.

தொழிற்சாலைகள் நிறைந்த நகரம் ஷாங்கை. பருத்தி இப்பகுதியில் மிகுதியாக விளைவதால் இங்கு நூற்பும் நெசவும் மிக முக்கியமானவை. பட்டு உற்பத்தியும் பெருமளவில் நடைபெறுகிறது. கப்பல் கட்டுதல் மற்றொரு முக்கியமான தொழில். எஃகு—இரும்பு, இயந்திரங்கள், காகிதம், இரசாயனப் பொருள்கள் முதலியன இங்கு தயாரிக்கப்படுகின்றன. உணவுப் பொருள்களைப் பக்குவப்படுத்துதலும் நூல்கள் அச்சிட்டு வெளியிடுதலும் மற்ற முக்கியத் தொழில்கள்.

இந்நகர் 11ஆம் நூற்றாண்டுக்குமுன் தோன்றியதென்றாலும், நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை இது ஒரு சிறு நகரமாகத் தானிருந்தது. 1842-ல் இங்கு வந்திறங்கிய பிரிட்டிஷார் இங்கு தங்களுக்கு வாணிகம் செய்யும் உரிமையை அளிக்க வேண்டுமென்று சீன அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தினர். சீன அரசாங்கமும் இணங்கியது. அதன் பிறகு, பிரெஞ்சுக்காரர்களும் அமெரிக்கர்களும் இது போலவே தனிச்சலுகைகள் பெற்று இங்குக் குடியேறினர். இத்தனிச் சலுகைகளின் காரணமாக இது ஒரு தனிச் சுதந்தர நகரமாகவே விளங்கியது. இந்நகரத்திற்கெனத் தனிக் காவல் படையும் தொண்டர் படையும் இருந்தன.

வெளிநாட்டினரின் குடியேற்றத்தைத் தொடர்ந்து இந்நகரின் வாணிகம் செழித்தது. ஏற்றுமதி-இறக்குமதி பெருகியது. பெரிய கப்பல்களும் செல்லும் விதத்தில் ஆற்றுவழியை ஆழப்படுத்தினர். சீனாவின் மற்ற நகரங்களுடன் இணைக்கும் வகையில் இரெயில் பாதையும் அமைக்கப்பட்டது. மிகச் செழிப்பானதும் மக்கள் நெருக்கம் மிக்கதுமான யாங்ட்ஸீ சமவெளியின் வாயில்போல் இருந்ததால் இந்நகரம் மிக விரைவாக வளர்ச்சி அடைந்தது. வாணிக நிலையங்களும் தொழிற்சாலைகளும் பெருகி, உலகின் பெரிய துறைமுகங்களுள் ஒன்றாக இது ஆயிற்று.

இரண்டாம் உலக யுத்தம் மூளுவதற்கு முன்பு 1937-ல் ஜப்பானியர் இந்நகரைத் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டனர். 1945-ல் யுத்தம் முடிந்து, தோல்வியுற்ற ஜப்பானியர் வெளியேறியபோது மற்ற வெளிநாட்டினரும் இதைவிட்டுச் சென்றனர். ஷாங்கை மீண்டும் சீனாவுடன் இணைந்தது.

**ஷாமா :** இது ஒரு காட்டுக்குருவி. கருங்குருவி வம்சத்தைச் சார்ந்தது. வெள்ளைக் கரைகொண்ட நீண்ட கருவாலும், கருந் தலையும், முதுகும், சிவந்த மார்பும், வயிறும் உள்ளது. இது அடர்ந்த காடுகளில்தான் குடியிருக்கும். பாட்டின் இனிமைக்கு மிகவும் புகழ்பெற்றது. அதிகாலையிலும் மாலையிலும் நடுக்காட்டில் நீண்டநேரம் பாடும். இதன் இசை பரபரப்பும், மனோரம்மியமும் இனிமையும் ஆர்வமும் கொண்டது.

**ஷாஜகான்** (1592-1666): உலகப் புகழ் பெற்ற தாஜ் மகாலை (த.க.)க் கட்டியவர் ஷாஜகான். இந்தியாவைப் பெரும் புகழோடு ஆண்ட மொகலாயப் பேரரசர்களுள் இவரும் ஒருவர். 1628 முதல் 1658 வரை இவர் ஆட்சி நடத்தினார்.

பேரரசர் ஜகாங்கீருடைய மூன்றாவது மகன் ஷாஜகான். இவருடைய இயற்பெயர் குர்ரம். இவர் 1616-ல் அகமது நகரைக் கைப்பற்றித் தக்காணத்தில் மொகலாயர் ஆட்சியை நிலைநாட்டினார். இதைப் பாராட்டி இவருடைய தந்தை இவருக்கு 'ஷாஜகான்' (உலக மன்னர்) என்னும் பட்டத்தை வழங்கினார். இந்தப் பெயருடனேயே இவர் ஆட்சி நடத்தினார்.

ஷாஜகான் சிறந்த போர்வீரர். இராஜபுதனத்திலிருந்து மேவார் அரசரை இவர் மொகலாய ஆட்சிக்குப் பணியவைத்தார். ஜகாங்கீரின் மற்றொரு மகனாகிய ஷாரியரை ஜகாங்கீருக்குப் பிறகு பேரரசராக்க இவருடைய மாற்றாந்தாயான நூர்ஜகான் முயன்று வந்தார். அதனால் இவர் சினங்

கொண்டார். அச்சமயத்தில் வடமேற்கு எல்லையில் உள்ள காண்டகாரில் கலகம் ஏற்பட்டது. அதை அடக்குமாறு இவரைத் தந்தை கேட்டுக்கொண்டார். ஆனால் அதற்கு இவர் மறுத்துவிட்டார். அத்துடன், 1623-ல் இவர் தந்தையை எதிர்த்துப் போரிட்டார். அதில் தோற்று இவர் தக்காணத்திற்கும், பின் வங்காளத்திற்கும் ஓடினார். சிறிது காலத்திற்குப் பின் தக்காணம் திரும்பினார். 1625-ல் இவருக்கும் ஜகாங்கீருக்கும் சமரசம் ஏற்பட்டது.

1627-ல் ஜகாங்கீர் இறந்தார். டெல்லியில் அரசுரிமைக்குப் போட்டி ஏற்பட்டது. ஷாரியரைப் பேரரசராக்க நூர் ஜகான் ஆணையிட்டார். நாசிக்கில் வாழ்ந்துவந்த ஷாஜகான் டெல்லிக்கு விரைந்து சென்று பேரரசர் பதவியைக் கைப்பற்றினார்.

இவர் தம் பாட்டனார் அக்பர் (த.க.) வழியில் ஆட்சியை நடத்தினார். பிஜாப்பூர் சுல்தானை மொகலாய ஆட்சிக்கு அடிபணியவைத்தார். தக்காணத்தில் அரசியல் நிலைமையைச் சீர்திருத்தினார். அங்குத் தம் மகன் ஔரங்கசீபுவை அரசப் பிரதிநிதியாக நியமித்தார்.

ஷாஜகானுடைய மனைவி மும்தாஜ் மகால். அவள்மீது இவர் பேரன்பு கொண்டிருந்தார். இவர்களுக்கு 14 குழந்தைகள். கடைசிக் குழந்தை பிறந்தவுடன் மும்தாஜ் இறந்துவிட்டாள். இவளுடைய நினைவுச் சின்னமாகவும், கல்லறையாகவும் புகழ் பெற்ற தாஜ்மகாலை ஷாஜகான் எழுப்பினார். இது உலகிலுள்ள அழகான கட்டடங்களுள் ஒன்று. மற்றும் டெல்லியிலும், ஆக்ராவிலும் இவர் நிறுவிய பல கட்டடங்களும், ஷாஜகானாபாத் என்ற நகரும் இவரது கட்டடக்கலை ஆர்வத்தையும் திறனையும் கலையுணர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றன.

**ஷாஜகானும் அவர்கட்டிய தாஜ்மகாலும்**



ஷாஜகான் 1657-ல் நோயுற்றார். இவருடைய புதல்வர்களிடையே அரசுரிமைப் போர் மூண்டது. இவருடைய மூத்த மகன் தாரா என்பவர் அரசைக் கைப் பற்றிக் கொண்டார். வெளியூரிலிருந்த மற்றோரு மகன் ஔரங்கசீபு (த.க.) டெல்லிக்கு விரைந்து, தாராவையும் மற்ற சகோதரர்களையும் சூழ்ச்சியால் கொன்று, அரசரானார்; ஷாஜகானைச் சிறையிலடைத்துத் துன்புறுத்தினார். சிறையிலடைந்திருந்தபோது ஷாஜகானுடைய மகளான ஜகனாரா இவருக்குப் பணிவிடை செய்துவந்தாள். 1666-ல் சிறையிலேயே ஷாஜகான் காலமானார்.

**ஷில்லாங் :** இந்தியாவின் வடகிழக்கிலுள்ள மேகாலயா மாநிலத்தின் தலைநகரம் ஷில்லாங். அருணாசலப் பிரதேசம் என அழைக்கப்படும் வடகிழக்கு எல்லைப் பிரதேசத்திற்கும் (NEFA) இது தாற்காலிகமாகத் தலைநகராக உள்ளது. மக்கள் தொகை 1,74,703 (1981).

மேகாலயா மாநிலம் முதலில் ஆசாம் மாநிலத்துடன் இணைந்திருந்தபோது ஆசாம் மாநிலத்தின் தலைநகராக ஷில்லாங் இருந்தது. 1970-ல் மேகாலயா மாநிலம் அமைக்கப்பட்டபின் இது புதிய மாநிலத்தின் தலைநகராயிற்று. திஸ்பூர் (Dispur) என்பது ஆசாம் மாநிலத்தின் புதிய தலைநகரம்.

ஷில்லாங் நகரம் சுமார் 1,500 மீட்டர் உயரத்தில் காசி (Khasi) என்ற மலைமீது அமைந்துள்ளது. இது நன்கு திட்டமிட்டு அழகாக அமைக்கப்பட்டுள்ள ஒரு நகரம். இந்நகரிலும் சுற்றுப்புறத்திலும் இதமான தட்பவெப்பம் நிலவுகிறது. எனவே இது சிறந்ததொரு சுகவாசத் தலமாகும். உயரமாக வளரும் பைன் மரங்களடர்ந்த அழகிய காடுகளும், வனப்புமிக்க சோலைகளும் இந்நகரைச் சுற்றிலும் உள்ளன. இங்கு இயற்கைக் காட்சிகள் மிக அழகானவை.

இந்நகரில் வெறிநாய்க்கடி சிகிச்சை ஆராய்ச்சி நிலையம் ஒன்று உள்ளது. ஷில்லாங் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டது. ஆசாம் மாநிலம் அமைக்கப்பட்டபோது இது அம்மாநிலத்தின் தலைநகராகியது. 1897-ல் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தினால் இந்நகரின் பெரும்பகுதி அழிந்தது. எனினும் பின்னர் மீண்டும் புதிதாக உருவாக்கப்பட்டது.

இந்தியாவிலே அதிக மழை பெய்யும் செரபுஞ்சி என்னுமிடம் இந்நகருக்குத் தெற்கில் உள்ளது. இரு நகரங்களுக்குமிடையே நல்ல சாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

**ஷேக்ஸ்பியர், வில்லியம்** (William Shakespeare, *1564-1616*): உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாடகாசிரியராகவும் கவிஞராகவும் விளங்கியவர் வில்லியம் ஷேக்ஸ்பியர்.

லண்டனிலிருந்து 160 கிலோமீட்டர் தொலைவில் ஏவன் ஆற்றங்கரையிலுள்ள ஸ்ட்ராட்போர்டு(Stratford-on-Avon) என்ற சிற்றூரில் ஷேக்ஸ்பியர் பிறந்தார். இவருடைய தந்தை ஜான் ஷேக்ஸ்பியர். கையுறைகள் தயாரித்து விற்கும் ஒரு வணிகர். ஷேக்ஸ்பியர் 12 வயதுவரை தம் ஊரிலிருந்து இலக்கணப் பள்ளியில் லத்தீன் மொழியில் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். வரலாற்று நூல்களைத் தாமே கற்றுத் தேர்ந்தார். இவருடைய தந்தை வாணிகத்தில் நட்ட மடைந்ததால் இவர் பள்ளிப்படிப்பைத் தொடரமுடியவில்லை. அதன்பின் இவர் தம் தந்தைக்கு உதவியாக வேலைபார்த்து வந்ததாகவும், சிறிது காலம் ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்ததாகவும் கூறுவர். ஷேக்ஸ்பியர் தம் 19 ஆம் வயதில் 27 வயதுடைய ஒரு பெண்ணை மணந்துகொண்டார். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தனர்.

ஷேக்ஸ்பியர் 1587-ல் லண்டன் சென்றார். அங்கு முதலில் நாடகங்களில் சிறு வேடங்களில் நடித்து வந்தார். பின்னர் தாமே நாடகங்கள் எழுதுவதில் ஈடுபட்டார். இவருடைய நாடகங்கள் யாவும் செய்யுள் வடிவிலேயே இருந்தன.

லண்டனில் 1592-ல் பிளேகு (த.க.) என்னும் கொடிய நோய் பரவி, மக்கள் பெருமளவில் இறந்தனர். அப்பொழுது இரண்டு ஆண்டுகள் நாடக அரங்குகள் யாவும் மூடப்பட்டிருந்தன. இக்காலத்தில் ஷேக்ஸ்பியர் பல பெரிய கவிதைகளையும் நூற்றுக்கு மேற்பட்ட 'சானட்' (Sonnet)



வில்லியம் ஷேக்ஸ்பியர்

என்ற கவிதைகளையும் இயற்றினார். ஒரு குறிப்பிட்ட ஒழுங்கும் ஒலி நயமும் அமைந்து, 14 அடி கொண்ட கவிதையே சானட் என்பதாகும். இவை ஷேக்ஸ்பியரின் சொந்த வாழ்க்கையைப் பிரதிபலிப்பவை எனக் கூறுவர்.

பிளேகு நோய் அடங்கியதும், மீண்டும் நாடக அரங்குகள் திறக்கப்பட்டன. நடிகர்கள் கூட்டுச் சேர்ந்து பல புதிய நாடகக் குழுக்களைத் தொடங்கினார்கள். அத்தகைய குழு ஒன்றில் ஷேக்ஸ்பியரும் பங்குதாரராகச் சேர்ந்தார். பல நாடகங்களை எழுதினார். விரைவில் இவரே அந்தக் குழுவின் முழு உரிமையாளரானார். அரண்மனையில் அரச குடும்பத்தினருக்காக அடிக்கடி நாடகங்களை நடத்தினார்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்களுக்குப் பொது மக்களின் ஆதரவு பெருமளவில் கிடைத்தது. இவருக்குப் புகழும் பொருளும் சேர்ந்தன. 1594 முதல் இவருடைய நாடகங்கள் நூல்களாகவும் வெளிவரலாயின. 1597-ல் தம் சொந்த ஊரில் பெரிய வீடு ஒன்றைக் கட்டினார். பிறகு சில நிலங்களையும் வாங்கினார். தம் 46 ஆம் வயதில் இவர் நாடகம் எழுதுவதைத் துறந்து ஐந்து ஆண்டுகள் ஓய்வாகச் சுகவாழ்க்கை நடத்தினார். 1616-ல் 52 ஆம் வயதில் காலமானார்.

ஷேக்ஸ்பியர் மொத்தம் 37 நாடகங்கள் எழுதியுள்ளார். அவற்றை இன்பியல் நாட

கங்கள் (Comedies), துன்பியல் நாடகங்கள் (Tragedies), வரலாற்று நாடகங்கள் (Historicals) என மூவகையாகப் பிரிப்பர். இன்பியல் நாடகங்களுள் நடுவேனில் கனவு (A Midsummer Night's Dream), அடங்காப் பிடாரியை அடக்குதல் (The Taming of the Shrew), வெனிஸ் வணிகள் (The Merchant of Venice) முதலியவை புகழ்பெற்றவை. துன்பியல் நாடகங்களில் புகழ்பெற்றது 'ரோமியோவும் ஜூலியட்டும்' (Romeo and Juliet) என்பதாகும். 'ஹாம்லெட்' (Hamlet), 'மக்பெத்' (Macbeth), 'ஒத்தெல்லோ' (Cethello), 'லியர் அரசன்' (King Lear), 'ஜூலியஸ் சீசர்' (Julius Caesar) என்பனவும் துன்பியல் நாட்கங்களுள் குறிப்பிடத் தக்கன. வரலாற்று நாடகங்கள், வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றுள் ஆங்கில மன்னர்களைப் பற்றிய நான்காம் ஹென்ரி, ஐந்தாம் ஹென்ரி, மூன்றாம் ரிச்சர்டு என்ற நாடகங்கள் பெரும் புகழ்பெற்றவை; இவருடைய நாடகங்களில் எல்லாம் சிறந்தது ஹாம்லெட் என்பர்.

ஷேக்ஸ்பியர் தம் நாடகங்கள் சிலவற்றிற்கு அன்று வழங்கிய கதைகளை எடுத்துக் கொண்டார். எனினும் அவற்றைக் கையாண்டுள்ள திறனும் நாடகமாக்கியுள்ள முறையுமே இவருக்கே உரிய தனித்தன்மையுடன் விளங்குகின்றன. உலகில் காணும் பலவகை மக்களையும், அவர்களிடம் எழும் பலதரப்பட்ட உணர்ச்சிகளையும் இவர்தம் நாடகங்களில் இயற்கையாகச் சித்தரித்துள்ளார். இசை, சட்டம், அரசியல், போரியல், கலை, வரலாறு, உளவியல், விளையாட்டு முதலிய பல துறைகளிலும் இவருக்கிருந்த ஆழ்ந்த புலமையை இவருடைய நாடகங்கள் புலப்படுத்துகின்றன. பல புதிய சொற்களையும், சொற்றொடர்களையும் உண்டாக்கி ஆங்கில மொழிக்கு இவர் வளம் சேர்த்திருக்கிறார். தவறான முறையில் கையாளப்பட்டு வந்த சொல்வழக்குகளைத் தம் நாடகங்களில் சரியான முறையில் கையாண்டு, அவற்றுக்கு இலக்கண வரைமுறை வகுத்துத் தந்தார்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் என்றும் அழியாத புகழுடன் விளங்குகின்றன. உலகின் பெரும்பாலான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**ஸ்காட், ராபர்ட்** (Robert Scott, *1868-1912*): பனி உறைந்து கடுங்குளிராக உள்ள தென் துருவத்திற்குச் (த.க.) செல்லவேண்டுமென்பது ஸ்காட் மேற்கொண்ட முயற்சி. அதில் இவர் வெற்றிபெற்றாரென்றாலும் உயிருடன் திரும்பவில்லை. இவருடைய துணிவையும் ஊக்கத்தையும் உலகமே பாராட்டுகிறது.

ஸ்காட் 1868-ல் பிறந்தார். பள்ளிப் படிப்புக்குப்பின் இவர் கடற்படையில் சேர்ந்து பணியாற்றினார். 1901-ல் பிரிட்டன் தென் துருவப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தபோது, ஸ்காட்டின் உழைப்பையும் விடாமுயற்சியையும் பாராட்டி, அப்பயணத்திற்கு இவரையே தலைவராக நியமித்தது.

ஸ்காட் சில உதவியாளர்களுடன் ஒரு கப்பலில் புறப்பட்டார். நியூஜீலாந்துக்குத் தெற்கே 3,000 கிலோமீட்டர் தொலைவில், பனிக்கட்டியாக உறைந்திருந்த கடல்பகுதியைக் கடந்து, அன்டார்க்டிக்கா (த.க.) கண்டத்தை ஸ்காட் அடைந்தார். ஆனால், தகுந்த முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ளாததால், அதற்கு மேலும் தொடர்ந்து சென்று தென் துருவத்தை அடைய முடியவில்லை. எனினும் அப்பகுதி பற்றிய பல உண்மைகளை ஸ்காட் எழுதி வெளியிட்டார். அதனால் இவருடைய புகழ் பரவியது.

ஸ்காட் 1910-ல் மீண்டும் தென் துருவத்திற்குப் பயணமானார். அன்டார்க்டிகா கண்டத்தை அடைந்ததும், தம்முடன் நான்கு

**ராபர்ட் ஸ்காட்**



உதவியாளர்களை அழைத்துக் கொண்டு, தென் துருவத்தை நோக்கி நடக்கலானார். பனி உறைந்த இப்பகுதியில் பல இன்னல்களைக் கடந்து 1912 ஜனவரி 17-ல் ஸ்காட் தென் துருவத்தை அடைந்தார். ஆனால் அங்கு இவர் பெரிதும் ஏமாற்றமடைய நேரிட்டது. ஏனெனில், அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே, நார்வே நாட்டைச் சேர்ந்த ஆமுண்ட்சென் (Amundsen) என்பவர் தென் துருவத்தை அடைந்துவிட்டார். ஆமுண்ட்சென் நாட்டிவிட்டுச் சென்ற நார்வே நாட்டுக் கொடியைக் கண்ட ஸ்காட், போட்டியில் தோல்வியுற்ற வருத்தத்துடன் திரும்பலானார். திரும்பும்போது இவர் பட்ட தொல்லைகள் பல. காலநிலை மோசமடைந்துகொண்டிருந்தது. அதனுடன், தோல்வியால் ஏற்பட்ட மனச்சோர்வும் சேர்ந்தது. மேலும், போதிய சத்துள்ள உணவு இல்லாததால் 'ஸ்கர்வி' என்னும் நோயும் பற்றிக்கொண்டது.

அன்டார்க்டிகா கண்டத்தை விட்டு இறங்கும்போது ஈவான்ஸ் என்பவர் கால் இடறி விழுந்து இறந்தார். ஓட்ஸ் என்பவர் நோயுற்று, நடக்க இயலாததால் தற்கொலை செய்துகொண்டார். ஸ்காட்டும் மற்றுமிருவரும் சிரமப்பட்டு மேலும் சிறிது தூரம் நடந்தனர். ஆனால் அப்போது கடுமையான பனிப்புயல் (த.க.) வீசத் தொடங்கியது. எனவே அந்த இடத்திலேயே ஒரு கூடாரத்தை அமைத்துக் கொண்டு தங்கினர். பனிப்புயல் வீசிக்கொண்டேயிருந்ததால், அவர்களால் வெளியேற முடியவில்லை. உண்பதற்கு உணவும் இல்லை. பரிதாபமான இந்த நிலையில் அக்கூடாரத்திலேயே அவர்கள் மூவரும் இறந்தனர்.

எட்டு மாதங்களுக்குப் பிறகு இவர்களைத் தேடிப் புறப்பட்ட ஒரு குழு கூடாரத்தையும் உடல்களையும் கண்டுபிடித்தது. ஸ்காட் எழுதிய கடிதங்களும் குறிப்புகளும் கருவிகளும் கிடைத்தன. இவற்றிலிருந்து ஸ்காட் அடைந்த இன்னல்களும் பட்ட துன்பங்களும் அவற்றுக்கிடையே போராடிய அவருடைய தீரமும் தெரியவந்தன.

**ஸ்காட்லாந்து :** பிரிட்டன் நாட்டின் வடபகுதி ஸ்காட்லாந்து. இதன் கடற்கரையை ஒட்டியுள்ள சுமார் 800 தீவுகளும் இதனைச் சேர்ந்தவை. ஸ்காட்லாந்துக்குத் தெற்கில் கிரேட் பிரிட்டனின் மற்றொரு பகுதியான இங்கிலாந்து உள்ளது. மற்ற மூன்று பக்கங்களிலும் கடல்களே எல்லைகள். ஸ்காட்லாந்தின் மக்கள்தொகை சுமார் 50 இலட்சம். தலைநகர் எடின்பரோ (Edinburgh).

ஸ்காட்லாந்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை, 1. மலைப்பாங்கான வடபகுதி; 2. மத்தியிலுள்ள தாழ்வான சமவெளி; 3. தெற்கிலுள்ள மேட்டு நிலம் என்பன. வடபகுதியிலுள்ள மலைத்தொடர்களுக்கிடையே குறுகிய சமவெளிகள் உள்ளன. இச் சமவெளிகளினூடே ஓடும் ஆறுகள் வேகமானவை. இந்த ஆறுகளால் உண்டாகிய பெரிய ஏரிகள் பல உள்ளன. இத்தகைய இயற்கைக் காட்சிகளால் அழகு பெற்று விளங்கும் இப்பகுதியைக் காண உல்லாசப் பயணிகள் பெருமளவில் வருகின்றனர்.

மத்தியப் பகுதியான சமவெளி மிகச் செழிப்பானது. பயிரிடத்தக்க நிலங்கள் இங்குதான் அதிகம். தாதுப்பொருள்களும் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. எனவே இங்கு மக்கள் நெருக்கம் அதிகம். ஸ்காட்லாந்தின் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் இங்குதான் வாழ்கின்றனர். தலைநகரான எடின்பரோவும் மற்ற பெரிய நகரங்களான கிளாஸ்கோ, டண்டீ, பேஸ்லி (Paiseley), கிரீனாக் (Greenock) முதலயனவும் இங்குதான் அமைந்துள்ளன.

தென்பகுதியான மேட்டு நிலத்தில் புல்வெளிகளும் மேய்ச்சல் நிலங்களும் அதிகம்.




ஸ்காட்லாங்கு

எனவே இங்குக் கால்நடைகளும் நல்ல கம்பளி ரோமம் தரும் ஆடுகளும் மிகுதியாக வளர்க்கப்படுகின்றன. ஸ்காட்லாந்தின் மக்கள்தொகையைக் காட்டிலும் அங்குள்ள ஆடுகளின் எண்ணிக்கை மிக அதிகம்! ஸ்காட்லாந்துக் குதிரைகள் புகழ்பெற்றவை.

ஸ்காட்லாந்தின் கரையோரத்தில் பல இடங்களில் கடல் உட்புகுந்துள்ளது. கிழக்குக்கரையிலும் மேற்குக் கரையிலும் உள்ள இத்தகைய சில கடற்கழிகளைக் கால்வாய் மூலம் இணைத்துள்ளனர். இதனால் ஒரு கரையிலிருந்து எதிர்க்கரைக்குக் கப்பல் மூலம் செல்லலாம்.

ஸ்காட்லாந்தில் விளைநிலம் அதிகமில்லை. ஓட்ஸ், பார்லி முதலியவையே பயிரிடப்படுகின்றன. பழத்தோட்டங்கள் உள்ளன. நிலக்கரி, இரும்பு, எண்ணெய் முதலியன கிடைக்கின்றன. இவற்றைப் பயன்படுத்திப் பெரிய எஃகு ஆலைகளை அமைத்துள்ளனர். இங்கு தயாரிக்கப்படும் இரும்பு பெரும்பாலும் கப்பல் கட்டுவதற்கே பயன்படுத்தப்படுகிறது. கப்பல்கட்டுவது ஸ்காட்லாந்தின் மிக முக்கியமான தொழில். நூற்பும் நெசவும் இந்நாட்டின் மிகத் தொன்மையான தொழில்கள். ஸ்காட்லாந்துக் கம்பள ஆடைகள் உலகப் புகழ் பெற்றவை. வடகிழக்குப் பகுதியில் மீன் பிடித்தல் முக்கியத் தொழிலாக நடைபெறுகிறது.

ஸ்காட்லாந்து மக்களில் பெரும்பாலோர் ஆங்கிலமே பேசுகின்றனர். மலைப் பகுதிகளில் வாழ்வோர் சிலர் ஸ்காட்லாந்தின் தொன்மை மொழியான கேலிக் (Gaelic) மொழி பேசுகின்றனர். பெரும்பாலான மக்கள் பிராட்டெஸ்டென்ட் கிறிஸ்தவர்களாவர்.

ஸ்காட்லாந்து ஒரு காலத்தில் தனி நாடாக இருந்தது. இதற்கும் இங்கிலாந்திற்குமிடையே பல போர்கள் நடந்தன. 1707ல் இங்கிலாந்துடன் ஸ்காட்லாந்து இணைக்கப்பட்டது. இன்று ஸ்காட்லாந்தின் நலன்களைப் பாதுகாப்பதற்கெனத் தனி அமைச்சர் ஒருவர் இருக்கிறார். இதற்காக அரசுத் துறையின் தலைமை அலுவலகங்கள் பல ஸ்காட்லாந்திலேயே உள்ளன.

**ஸ்ட்டாலின்** *(1879-1953)*: சோவியத் ரஷ்யாவின் தலைமை அமைச்சராகவும், பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்து சுமார் 30 ஆண்டுகள் ஆட்சி நடத்தியவர் ஸ்ட்டாலின். ஓர் ஏழைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து ஒரு பெரிய நாட்டை எல்லா அதிகாரங்களுடனும் ஆளும் சர்வாதிகாரியாக உயர்ந்தவர் இவர்.

இவருடைய முழுப் பெயர் ஜோசப் விசரியானவிச் ஸ்ட்டாலின். இவர் ஜார்ஜியா குடியரசிலுள்ள காரி (Gori) என்ற ஊரில் ஓர் ஏழைக் குடும்பத்தில் 1879 டிசம்பர் 21-ல் பிறந்தார். இவருடைய தந்தை செருப்புத் தைக்கும் தொழில் செய்து வந்தார். தாய் சலவைத் தொழிலாளி. குழந்தைப் பருவத்தில் இடது கையில் ஏற்பட்ட ஒரு புண் காரணமாக, ஸ்ட்டாலினுடைய ஒரு கை வளர்ச்சியின்றி ஊனமடைந்தது. இவருடைய பெற்றோர் இவரைப் பாதிரியாக்க விரும்பி, 1893-ல் ஒரு சமயப் பள்ளியில் சேர்த்தனர். அங்கு இவர் பொதுவுடைமை (த.க.)க் கட்சியினருடன் சேர்ந்து புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அதனால் 1898-ல் அந்தப் பள்ளியிலிருந்து விலக்கப்பட்டார். அதன்பின் இவர் ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில்(Russian Social Democratic Workers' Party) சேர்ந்தார். அக்கட்சி அப்பொழுதிருந்த சார் (Tsar) பேரரசரின் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. இவரும் அம்முயற்சியில் பங்கு

ஸ்ட்டாலின்



கொண்டு பல முறை கைதாகி நாடு கடத்தப் பட்டார். ஒவ்வொரு முறையும் தந்திரமாகத் தப்பினார்.

ரஷ்யாவில் பொதுவுடைமை ஆட்சியை நிறுவுவதற்கு முயன்று வந்த தலைவராகிய லெனினை (த.க.) 1905-ல் ஸ்ட்டாலின் சந்தித்தார். கிளர்ச்சிகளை உண்டாக்கி, வெற்றியுடன் நடத்தும் இவருடைய திறமை லெனினை மிகவும் கவர்ந்தது. அதுமுதல் இவர் லெனினின் அன்புக்கும் நம்பிக்கைக் கும் உரிய சீடரானார். அதே ஆண்டில் திரு மணம் செய்துகொண்டார்.

1917-ல் லெனின் தலைமையில் ரஷ்யா வில் புரட்சி ஏற்பட்டது. சார் அரசு வீழ்ந்தது. லெனின் பொதுவுடைமை அரசை ஏற்படுத்தினார். அப்பொழுது நாடு கடத்தப்பட்டு சைபீரியாவில் இருந்து வந்த ஸ்ட்டாலினை வரவழைத்து, லெனின் தம் அமைச்சருள் ஒருவராக நியமித்தார். 1922-ல் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் ஆக்கப் பட்டார். ரஷ்யாவில் இது மிகவும் செல் வாக்கு மிக்க உயர்ந்த பதவியாகும். ஸ்ட்டா லின் இப்பதவியைப் பயன்படுத்தித் தம் அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டார்.

லெனின் 1924-ல் காலமானதும், ஸ்ட்டாலினுக்கும், லியான் டிராட்ஸ்கி என்பவருக்குமிடையே பதவிப் போட்டி ஏற்பட்டது. போட்டியில் ஸ்ட்டாலின் வென்றார். 1929-ல் டிராட்ஸ்கி நாடு கடத்தப்பட்டார். அதுமுதல் எல்லா அதி காரங்களுடன் ஸ்ட்டாலின் ரஷ்யாவை ஆளலானார்.

ஸ்ட்டாலின் ரஷ்யாவைத் தொழில் மய மாக்க எண்ணினார். இதற்கெனப் பல திட்டங்களை வகுத்தார். தனிப்பட்டவர்கள் நடத்திவந்த பல தொழில்களை அரசுடை மையாக்கினார். இவ்வாறு நாட்டின் பொரு ளாதாரம் விரைவாக வளர அடிகோலி னார். எனினும், இவருடைய கொள்கை களுக்கு எதிர்ப்புத் தோன்றியது. 1930 முதல் 1938 வரை இவர் கடும் அடக்கு முறையைக் கையாண்டு, தம்மை எதிர்த்தவர் களை ஒழித்துக் கட்டினார். தம்மிடம் பற்று மிகுந்த பொதுவுடைமை இளைஞர்களைக் கொண்ட அதிகார வர்க்கத்தை ஏற்படுத்தித் தமக்குத் துணையாக வைத்துக்கொண்டார்.

இதற்கிடையில், ஜெர்மனியில் ஹிட்லர் (த.க.) ஆட்சியைக் கைப்பற்றிப் படை பலத் தைப் பெருக்கி வந்தார். ரஷ்யாவை ஜெர்மனி தாக்கக்கூடும் என ஸ்ட்டாலின் கருதினார். ஜெர்மனிக்கு எதிராக மேற்கு ஐரோப்பிய நாடுகளைக் கூட்டணி சேர்க்க முயன்றார். ஆனால் அந்நாடுகள் இவரு டைய முயற்சிக்கு இணங்கவில்லை. அதனால் இவர் 1939-ல் ஆகஸ்டில் ஹிட்லருடன் நட்பு உடன்படிக்கை செய்து கொண்டார். அதற்கு அடுத்த மாதமே இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியது. 1941-ல் நட்பு உடன்படிக்கையை மீறி ரஷ்யா மீது ஜெர்மனி தாக்குதல் தொடுத் தது. ரஷ்யாவுக்கு ஆதரவாக பிரிட்டனும் அமெரிக்காவும் சேர்ந்தன. ஜெர்மனி தோற்றது.

1945-ல் உலக யுத்தம் நின்றது. தோல்வி யுற்ற ஜெர்மனியைப் பங்கு போட்டுக் கொள்வதில் மேலைநாடுகளுடன் இவரு க்குக் கருத்துவேறுபாடு ஏற்பட்டது. இதய நோய் காரணமாக இவர் அரசியல் அலு வல்களை குறைத்துக்கொண்டு எழுதுவதில் ஈடுபட்டிருந்தார். 1953 மார்ச் 5-ல் மூளை இரத்தக்குழாய் வெடித்து ஸ்ட்டாலின் இறந்தார்.

**ஸ்ட்டிரிக்னீன்** (Strychnine): எட்டிக்கா யிலும் இதைப்போன்ற வேறு காய்களிலும் உள்ள ஓர் ஆல்கலாயிடு. இது படிக வடிவ மான திண்ம கரிமப்பொருள்; மிகவும் கசப் பானது. உட்கொண்டால் மத்திய நரம்பு மண்டலத்தைச் செயலிழக்கச் செய்து சாவை விளைவிக்கும். இது சிறிய அளவில் சேர்ந்தால் மூளையை ஊக்கிவித்து, புலன் களின் உணர்வை அதிகமாக்குகிறது. இதன் வாய்பாடு $C_{21}H_{22}N_2O_2$.

**ஸ்ட்டீவன்சன், ராபர்ட் லூயி** (Stevenson, *1850-1894*): ஆங்கில மொழியின் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர் ராபர்ட் லூயி ஸ்ட்டீவன்சன். துணிகரச் செயல்கள் கொண்ட நாவல்களை எழுதுவதில் இவர் திறமைபெற்றவர். இவர் எழுதிய 'புதையல் தீவு' (Treasure Island) என்னும் நூல் பெரும் புகழ்பெற்றது.

எடின்பரோ நகரில் 1850-ல் ஸ்ட்டீவன் சன் பிறந்தார். தம் தந்தையைப் போலவே ஒரு பொறியியல் வல்லுநராக விளங்க வேண்டுமென்பது ஸ்ட்டீவன்சனின் விருப் பம். ஆனால் அதற்கு இவர் போதிய உடல் நலம் இல்லாதிருந்தார். எனவே எடின் பரோ பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து கல்வி பயின்று வழக்குறைஞரானார்.

ஆனால் வழக்குரைஞர் தொழிலிலும் ஸ்ட்டீவன்சனுக்கு நாட்டமில்லை. ஓர் எழுத்தாளராக விளங்க விரும்பினார். பல நாடுகளுக்கும் சென்று தம் அனுபவங்களை

எழுதத் திட்டமிட்டார். சயரோகம் என்னும் கொடிய நோய் இவரை வருத்தியது. எனவே, உடல்நலம் பெறும்பொருட்டும் இவர் தம் சுற்றுப் பயணத்தைத் தொடங்கினார். இச்சுற்றுப்பயணங்களே இவருடைய புகழ்பெற்ற நூல்களுக்கு அடிப்படையாக அமைந்தன.

ஸ்ட்டீவன்சன் முதலில் ஐரோப்பாவுக்கும் பின்னர் அமெரிக்காவுக்கும் சென்றார். அமெரிக்காவில் ஆஸ்போர்ன் என்னும் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு பிரிட்டனுக்குத் திரும்பினார். மனைவியுடன் அழைத்துவந்த லாயிடு என்ற ஒரு சிறுவனுக்கு மகிழ்ச்சியூட்டவே முதன்முதலில் 'புதையல் தீவு' என்ற நூலை ஸ்ட்டீவன்சன் எழுதினார். இது பெரும் புகழ்பெற்றது. அதைத் தொடர்ந்து பலவிதமான இலக்கியங்களையும் இவர் எழுதலானார்.

இவர் அடிக்கடி நோய்வாய்ப்பட்டாலும் எழுதுவதை நிறுத்தவில்லை. குழந்தைகளுக்கான பாடல்களும்; துணிகரச் செயல்கள் மிகுந்த நாவல்களும் நாடகங்களும் இலக்கியக் கட்டுரைகளும் இவர் எழுதியவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

அமெரிக்காவில் சிறிதுகாலம் தங்கியிருந்தபின், *1888*-ல் ஸ்ட்டீவன்சன் தம் குடும்பத்தினருடன் ஒரு கப்பலில் தென் கடல் தீவுகளுக்குப் புறப்பட்டார். அத்தீவுகளின் இயற்கை அழகைக் கண்டு மகிழ்ந்த இவர், சமோவா என்னும் தீவில் நிரந்தரமாகத் தங்கி வாழ முடிவுசெய்தார். அங்கு மேலும் பல நூல்களை எழுதினார். அத்தீவின் மக்கள் காட்டிய அன்பைக் கண்டு வியந்து, அவர்களுக்குத் தம்மால் இயன்ற வரை பொதுத் தொண்டு செய்து வரலானார். அவர்களும் இவரைப் போற்றிப் புகழ்ந்து தங்களுடைய தலைவராகவே கொண்டாடினர்.

**ராபர்ட் லூயி ஸ்ட்டீவன்சன்**



*1894*-ல் ஸ்ட்டீவன்சன் காலமானார். இவருடைய உடலை அத்தீவு மக்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்று, ஏற்கெனவே இவர் விரும்பிய ஒரு மலை உச்சியில் அடக்கம் செய்தனர்.

**ஸ்ட்டீவன்சன், ஜார்ஜ்** (Stephenson, *1781-1848*): உலகெங்கும் பலவகை ரெயில் வண்டிகள் இன்று சிறந்த போக்குவரத்து சாதனமாக உள்ளன. இன்றைய ரெயில்வேயின் வளர்ச்சிக்கு மூலகாரணமாக இருந்தவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜார்ஜ் ஸ்ட்டீவன்சன்.

இங்கிலாந்தில் நியூகாசில் நகருக்கு அருகிலுள்ள வைலம் என்னுமிடத்தில் ஸ்ட்டீவன்சன் பிறந்தார். தந்தை ஒரு நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி. சுரங்கத்தினுள் ஊறும் நீரை வெளியேற்றுவதற்கான எந்திரங்களை இயக்குவது அவருடைய வேலை.

இளமையில் பள்ளிக்குச் செல்ல ஸ்ட்டீவன்சனுக்கு இயலவில்லை. எட்டாம் வயதில் ஒரு பண்ணையில் இவர் வேலைக்கு அமர்ந்தார். பிறகு, தந்தைக்கு உதவியாக இருந்து நீராவி எந்திரங்களை இயக்கி வரலானார். இப்போது, அந்த எந்திரங்களைப் பற்றி நுணுக்கமாக அறியும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. ஓய்வு நேரத்தில் எந்திரங்களைப் பிரித்து, ஒவ்வொரு பாகத்தையும் இவர் ஆராய்வார். அது தவிர, சிறு எந்திரங்கள், கடிகாரங்கள் முதலியவற்றைப் பழுது பார்த்துத் தம் வருவாய்க்கு வழிதேடிக்கொள்வார். இவற்றுடன், இரவுப் பள்ளியில் சேர்ந்து இவர் கல்வியும் கற்றுவந்தார்.

நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து 15 கிலோமீட்டர் தொலைவிலுள்ள துறைமுகத்திற்கு நிலக்கரிப் பெட்டிகளை இழுத்துச் செல்ல நீராவி எந்திரத்தைப் பயன்படுத்தலாம் என்று ஸ்ட்டீவன்சன் கூறினார். சுரங்கத்தின் உரிமையாளர்களும் உடன்பட்டனர். தாம் தயாரித்த ஒரு நீராவி எந்திரத்தைக் கொண்டே ஸ்ட்டீவன்சன் இத்திட்டத்தை நிறைவேற்றிக் காட்டினார்.



ஜார்ஜ் ஸ்ட்டீவன்சன்

1822-ல் ஸ்டாக்ட்டன், டார்லிங்க்ட்டன் என்னும் இரு இடங்களுக்கிடையில் ரெயில்பாதை அமைக்கப்பட்டது. ரெயில் பெட்டிகளை இழுக்கக் குதிரைகளுக்குப் பதில் எந்திரத்தைப் பயன்படுத்தலாம் என்று அதிகாரிகளிடம் ஸ்ட்டீவன்சன் கூறினார். ரெயில்வே அதிகாரிகளும் சம்மதித்தனர். தாம் தயாரித்த எஞ்சினை இணைத்து 1825 செப்டெம்பர் 27 ஆம்

ஸ்ட்டீவன்சன் அமைத்த 'ராக்கெட்' என்ற பெயரில் எஞ்சின்



நாள் தாமே அந்த ரெயிலை ஓட்டினார். இதுவே முதன்முதலாக மக்களை ஏற்றிக் கொண்டு சென்ற ரெயிலாகும். பின்னர் லிவர்பூல் மான்செஸ்ட்டர் நகரங்களுக்கிடையே இணைக்கப்பட்ட பாதையிலும் ஸ்ட்டீவன்சன் தயாரித்த எஞ்சினைப் பொருத்தியே ரெயில் ஓட்டப்பட்டது. இதற்காக இவருக்கு 500 பவுன் பரிசும் கிடைத்தது.

நியூகாசில் நகரில் ஸ்ட்டீவன்சன் தம்முடைய எஞ்சின் உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவிப் பல புதிய வகை எஞ்சின்களைத் தயாரித்தார். இதனால் இங்கிலாந்தில் மட்டுமின்றி உலகெங்கும் இவர் புகழ் பரவியது. பெல்ஜியம், ஸ்பெயின் முதலிய நாடுகள் இவர் கூறிய கருத்தை ஏற்றுக்கொண்டுதான் ரெயில் பாதைகளை அமைத்தன.

ஸ்ட்டீவன்சன் எளிய வாழ்வையே விரும்பினார். தமக்கு அளிக்கப்பட்ட விருதுகளையெல்லாம் ஏற்க மறுத்து, அமைதியான வாழ்க்கை நடத்தினார். இவர் 1848-ல் காலமானார்.

**ஸ்புட்னிக் :** நாம் வாழும் பூமியும், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலியவையும் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவற்றைச் சூரியனின் கிரகங்கள் என்பர். இவை இயற்கைக் கிரகங்கள் ஆகும். பூமியையோ அல்லது வேறொரு கிரகத்தையோ சுற்றி வருவதற்காக விஞ்ஞானிகள் சிறு கிரகங்களைத் தயாரித்து விண்வெளிக்கு அனுப்புகின்றனர். இவற்றுக்குச் 'செயற்கைக் கிரகங்கள்' (த.க.) என்று பெயர். விண்வெளியில் அனுப்பப்பட்ட முதல் செயற்கைக் கிரகம் 'ஸ்புட்னிக்' ஆகும்.

விண்வெளி ஆராய்ச்சிகளைத் தீவிரமாக நடத்துவதற்கென 1957 ஆம் ஆண்டைச் 'சர்வதேச பூபௌதிக ஆண்டு' (International Geophysical Year) என ஐக்கிய நாடுகள் சபை (த.க.) நிருணயித்தது. அவ்வாண்டில் பூமியைச் சுற்றி வருவதற்குச் செயற்கைக் கிரகங்களை விண்வெளியில் ஏவிவிடவேண்டும் என்றும், அவற்றுள் நுண்கருவிகளை வைத்து அனுப்பவேண்டும் என்றும் கூறப்பட்ட ஆலோசனையை ரஷ்யாவும், அமெரிக்காவும் ஏற்றுக்கொண்டு சோதனைகள் நடத்தலாயின.

விண்வெளியில் செயற்கைக் கிரகத்தைச் செலுத்துவதில் முதல் வெற்றி ரஷ்யாவுக்குக் கிடைத்தது. 1957 அக்டோபர் 4-ல்



ஸ்புட்னிக்-2 என்ற ரஷ்ய செயற்கை கிரகத்தில் விண்வெளிக்கு சென்று வந்த 'லைக்கா' என்ற நாய்.

ஸ்புட்னிக்-1 என்னும் முதலாவது செயற்கைக் கிரகத்தை ரஷ்யா விண்வெளியில் ஏவியது. இதன் விட்டம் 58 சென்டி மீட்டர்; எடை 83.6 கிலோகிராம். இது ஒரு முறை பூமியைச் சுற்றிவர 90 நிமிடங்கள் ஆயின. 225 முதல் 900 கிலோமீட்டர் உயரத்தில் இது பூமியைச் சுற்றி வந்தது.

1957 நவம்பர் 3-ல் 'ஸ்புட்னிக்-2' என்ற மற்றொரு செயற்கைக் கிரகத்தை ரஷ்யா விண்வெளியில் அனுப்பியது. இதன் எடை 508.3 கிலோகிராம் இதில் 'லைக்கா' என்ற நாய் ஒன்றையும் வைத்து அனுப்பினர். விண்வெளியைச் சுற்றி வரும்போதே, நாயின் இதயத் துடிப்பையும் மூச்சையும் பதிவு செய்தார்கள். இச்சோதனையின் மூலம் விண்வெளிப் பயணத்திற்கு மனித உடல் ஏற்றதுதான் என்பது தெரியவந்தது.

அடுத்து, ஸ்புட்னிக்-3 என்னும் செயற்கைக் கிரகத்தை 1958 மே 15-ல் ரஷ்யா ஏவியது. இதன் எடை 1327 கிலோகிராம். இதில் விண்வெளி ஆராய்ச்சிக்கான நுண் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. இதனை முதலாவது 'விண்வெளி ஆய்வுக்கூடம்' **(Space Laboratory)** என அழைத்தனர்.

ராக்கெட்டில் விண்வெளிக் கலத்தைப் பொருத்தி, அதில் மனிதனை வைத்து விண்வெளிக்கு அனுப்பி, மீண்டும் பத்திரமாகப் பூமியில் இறக்குவதற்கு ஸ்புட்னிக் செயற்கைக் கிரகங்கள் மூலம் கிடைத்த தகவல்கள் பெரிதும் உதவின.

**ஸ்பெயின் :** ஐரோப்பாக் கண்டத்தின் தென்மேற்கிலுள்ள நாடு ஸ்பெயின். இந்நாடும் இதற்கு மேற்கிலுள்ள போர்ச்சுகல் நாடும் சேர்ந்து ஒரு தீபகற்பமாக உள்ளன. இதற்கு ஐபீரியன் தீபகற்பம் என்று பெயர். இந்நாட்டின் பரப்பளவு சுமார் 5 இலட்சம் சதுர கிலோமீட்டர். மக்கள்தொகை 3.8 கோடி. தலைநகர் 'மட்ரீடு' **(Madrid).**

இந்நாட்டின் பெரும்பகுதி பீடபூமியாகும். கடற்கரையையொட்டிச் சமவெளிகள் உள்ளன. ஈப்ரோ, டேகஸ், குவாதியானா, குவாதால்கிவீர் முதலியன இங்கு பாயும் முக்கிய ஆறுகள். இந்நாட்டில் வேளாண்மையே முக்கியத் தொழில். கோதுமை, பார்லி, சோளம் முதலியன முக்கிய தானியங்கள். கடற்கரையோரச் சமவெளிகளில் சிறிது நெல்லும் பயிராகிறது. உயர்ந்த திராட்சை இங்கு மிகுதியாக விளைகிறது. ஐரோப்பாவிலே இங்குதான் ஒலிவ மரங்களும் ஆரஞ்சுப்பழத்தோட்டங்களும் அதிகம். கார்க் என்ற தக்கை கொடுக்கும் ஒக் மரங்கள் இந்நாட்டில் மிகுதி.

நாட்டின் வடபகுதியில் கால்நடைகளும் குதிரைகளும் மிகுதியாக வளர்க்கப்படுகின்றன. மிக உயர்ந்த ரகக் கம்பளி ரோமம் கொடுக்கும் மெரினோ ஆடுகள் இங்கு அதிகம். மீன்பிடித்தல் இந்நாட்டின் மற்றொரு முக்கியத் தொழில்.

நிலக்கரி, இரும்பு, செம்பு, காரீயம், பாதரசம் முதலியன இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. கப்பல் கட்டுதல் இந்நாட்டின் மற்றொரு பெரிய தொழில். பார்சலோனா மிகச் சிறந்த துறைமுகம். இந்நகரைச் சுற்றிலும் பெரிய தொழிற்சாலைகள் உள்ளன. இந்நாட்டில் தயாரிக்கப்படும் தோல் பொருள்கள் உலகப் புகழ் பெற்றவை.



ஸ்பெயின் நாட்டின் ஆதிக்குடிகள் ஐபீரியர்கள். பிறகு ஐரோப்பாவிலிருந்தும் ஆப்பிரிக்காவிலிருந்தும் பல இனத்தவர்கள் இங்கு குடியேறினர். இன்றுங்கூட இவர்களிடையே பல வேறுபாடுகளைக் காணலாம். எனினும் எல்லாரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இசையிலும் நடனத்திலும் ஸ்பானியர்கள் அதிக விருப்பமுள்ளவர்கள். காளைமாட்டுச் சண்டை இந்நாட்டின் தேசீய விளையாட்டு. கட்டுக்கடங்காத முரட்டுக் காளையை அடக்குவதே இவ்விளையாட்டின் குறிக்கோள். இவ்விளையாட்டைக் காண உலகெங்குமிருந்து மக்கள் இங்கு வருகிறார்கள்.

ஸ்பானிய மொழியே நாட்டின் பொது மொழி. இது மிக இனிமையான மொழி. இதன் இலக்கணமும் உச்சரிப்பும் ஒழுங்கான முறையில் அமைந்தவை. எனவே இதனை எளிதாகக் கற்க முடியும். இம்மொழி இலக்கிய வளமும் மிக்கது. 16 ஆம் நூற்றாண்டில் ஏழுதப்பட்ட 'டான் குவிக்சட்' (Don Quixote) என்னும் நாவல் உலகப் புகழ்பெற்றது. இன்று ஸ்பெயினில் மட்டுமல்லாமல் ஸ்பானியர்கள் குடியேறி வாழ்ந்த மெக்சிக்கோவிலும், மத்திய அமெரிக்க நாடுகளிலும் பிரேசில் தவிர்த்த மற்ற தென் அமெரிக்க நாடுகளிலும் இம்மொழி வழங்குகிறது. மக்களுள் பெரும்பாலோர் ரோமன் கத்தோலிக்கர்கள். பள்ளிகளில் சமய போதனை ஒரு கட்டாய பாடமாக உள்ளது.

ஸ்பெயின் நாட்டு வரலாறு புகழ்மிக்கது. சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவிலே வலிமை மிகுந்த நாடாக இது விளங்கியது. அமெரிக்காவைக் கொலம்பஸ் (த.க.) கண்டுபிடிப்பதற்கு ஸ்பெயின் நாட்டு அரசு அளித்த உதவியே காரணம். அது முதல் சுமார் 100 ஆண்டுகள் ஸ்பெயினுக்குப் பொற்காலமாகும். வட அமெரிக்கக் கண்டத்தில் தென்பாகத்திலுள்ள மெக்சிக்கோவும் மத்திய, தென் அமெரிக்க நாடுகள் பலவும் ஸ்பெயினுக்குச் சொந்தமாயின. அங்கிருந்து ஸ்பானியக் கப்பல்கள் பொன்னையும் பொருளையும் கொண்டுவந்து குவித்தன. ஐரோப்பாவிலும் சில பகுதிகளை ஸ்பெயின் வென்று, ஒரு பேரரசாகவே விளங்கிவந்தது.

ஆனால் பிறகு இதன் செல்வாக்கு படிப்படியாகக் குறையத் தொடங்கிற்று. குடியேற்றப் பகுதிகளெல்லாம் ஸ்பெயினுடன் போரிட்டுச் சுதந்திரம் பெற்றன. 1936-ல் உள்நாட்டுப் போர் மூண்டபோது அரசர் பதவி ஒழிந்தது. தளபதி பிராங்க்கோ என்பவர் இந்நாட்டின் சர்வாதிகாரியாக ஆனார். அவர் நவம்பர் 1975-ல் இறந்த பிறகு அவர் விருப்பப்படி, அரசனின் பேரரான முதலாவது ஜீவான் கார்லோ (Juan Carlos I) என்பவர் அரசரானார். அவருக்குக் கீழ் 1978-ல் பொதுமக்களின் ஓட்டெடுப்பின்மூலம் ஒப்புக்கொள்ளப் பட்ட ஜனநாயக அமைப்பு அமலுக்கு வந்தது.

**ஹங்கேரி :** ஐரோப்பாக் கண்டத்தின் மத்தியப் பகுதியிலுள்ள ஒரு குடியரசு நாடு ஹங்கேரி. இதன் வடக்கில் செக்கோஸ்லோவாக்கியுரவும் கிழக்கில் ரஷ்யா, ருமேனியா ஆகிய நாடுகளும் தெற்கில் யூகோஸ்லாவியாவும் மேற்கில் ஆஸ்திரியாவும் எல்லைகளாக உள்ளன. இந்நாட்டின் பரப்பு 93,400 சதுர கிலோமீட்டர். மக்கள்தொகை சுமார் ஒரு கோடி. தலைநகர் பூடப்பெஸ்ட்.

நாட்டின் பெரும்பகுதி சமவெளியாகும். வடபகுதி மலைப்பாங்கானது. இம்மலைகளில் காடுகள் அடர்ந்து வளர்ந்துள்ளன. டான்யூப் (த.க.) ஆறும் அதன் கிளையாறுகளான டிசா, ராபா, டிராவா முதலியனவும் இந்நாட்டை வளமுறச் செய்கின்றன. டான்யூப், டிசா ஆகியவை போக்குவரத்துக்கும் பயன்படுகின்றன. இந்நாட்டின் மேற்குப் பகுதியில் பாலட்டான் (Balaton) என்னும் ஏரி உள்ளது. மத்திய ஐரோப்பாவில் இதுதான் மிகப் பெரிய ஏரி. இதன் சுற்றுப்புறத்தில் அழகிய இயற்கைக் காட்சிகள் நிறைந்துள்ளன. இங்கு உல்லாசமாகப் பொழுது போக்குவதற்குப் பல நாடுகளிலிருந்தும் மக்கள் வருகிறார்கள்.

வேளாண்மையே இந்நாட்டின் முக்கியத் தொழில்; கோதுமையும் சோளமும் முக்கிய




ஹங்கேரி



பூடப்பெஸ்ட் நகரின் ஒரு தோற்றம்

தானியங்கள். சர்க்கரை செய்யப் பயன்படும் பீட் கிழங்கு, உருளைக்கிழங்கு, காய்கறிகள் முதலியன விளைகின்றன. திராட்சை, புகையிலை முதலியன மற்ற விளை பொருள்கள். சூரியகாந்திப் பூக்கள் இங்கு ஏராளம். கால்நடைகள், குதிரை முதலியவற்றுடன் பன்றிகளும் இங்கு பெருமளவில் வளர்க்கப்படுகின்றன. ஹங்கேரியக் குதிரைகள் புகழ்பெற்றவை.

நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, அலுமினியம், மாங்கனீஸ் முதலியன இந்நாட்டில் கிடைக்கின்றன. சில இடங்களில் பெட்ரோலியமும் கிடைக்கிறது. சர்க்கரை, மதுபானங்கள், மிட்டாய், சாக்கலேட், சுருட்டு, சிகரெட் முதலியன தயாரிக்கும் தொழிற்சாலைகளே முன்பு இங்கு அதிகமிருந்தன. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு எந்திரங்கள், இரசாயனப் பொருள்கள், மின்சாரக்கருவிகள் முதலியன தயாரிக்கும் தொழிற்சாலைகளும் உருவாகியுள்ளன.

ஹங்கேரிய மக்களில் பெரும்பாலோர் மாகியார் (Magyar) எனப்படுவர். இவர்கள் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆசியாவிலிருந்து குடியேறியவர்கள். இவர்கள் தங்களுக்கென ஒரு நாட்டை உருவாக்கி ஆண்டபொழுது, துருக்கியர்கள் படையெடுத்துக் கிழக்குப் பகுதியைப் பிடித்துக் கொண்டனர். எனவே, மேற்கிலிருந்த ஆஸ்திரியர்களுடன் மாகியர்கள் இணையலாயினர். இருவரும் சேர்ந்து துருக்கியரை விரட்டினர். ஆஸ்திரியாவும் ஹங்கேரியும் இணைந்தன. ஆனால் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு இவை பிரிந்து மீண்டும் தனித்தனி நாடுகளாயின.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு ஹங்கேரியில் பொதுவுடைமை ஆட்சி ஏற்பட்டது.

**ஹட்ஸன், ஹென்றி** : ஆசியநாடுகளுக்குப் புது வழி கண்டுபிடிக்க முயன்ற ஆங்கில மாலுமி ஹென்ரி ஹட்ஸன். இவருடைய இளமைப் பருவம் பற்றி எதுவும் தெரியவில்லை. இவர் 1611-ல் மறைந்தார். மறைவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்தான் இவருடைய புகழ் பரவியது. அதற்கு இவர் மேற்கொண்ட கடல் பயணங்களே காரணம். வட அமெரிக்காவிலுள்ள ஹட்ஸன் ஆறு, ஹட்ஸன் விரிகுடா, ஹட்ஸன் ஜலசந்தி ஆகியவை இவர் பெயரால் அழைக்கப்படுபவை.

வட துருவத்தின் வழியாக ஜப்பானுக்கும் சீனாவுக்கும் செல்ல முடியுமென்று ஹட்ஸன் கருதினார். இதற்காக 1607-ல் இவர் ஒரு கப்பலில் புறப்பட்டார். கிரீன்லாந்தைத் தாண்டிச் சென்றபோது, கடல் உறைந்து இவருடைய வழியை மறைத்தது. எனவே இவர் திரும்பிவிட்டார். அடுத்த ஆண்டும் இவர் புறப்பட்டுச் சென்றபோது, இவ்விதமே தோல்வியுற்றுத் திரும்பினார்.

ஹாலந்திலிருந்த டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவனத்திற்காக ஹட்ஸன் 1609-ல் தம் மூன்றாவது பயணத்தை மேற்கொண்டார். முன்போலவே, கடல் உறைந்து இவருடைய பாதையை மறைத்தது. இவர் தாயகம் திரும்பாமல், மேற்குத் திசை வழியாகச் சீனாவுக்குச் செல்ல நினைத்து, வட அமெரிக்கக் கரையோரமாகச் சென்றார். அங்கு, இப்போது நியூயார்க் நகரம் உள்ள விரிகுடாவை அடைந்து, ஆற்றின் வழியாக உட்பிரதேசத்திற்குச் சென்றார். அப் பிரதேசத்தைத் தாம் கண்டுபிடித்ததால், அது தம்மை அனுப்பிவைத்த டச்சுக்காரர்களுக்குச் சொந்தமென அறிவித்தார். டச்சுக்காரர்கள் பிறகு அங்குக் குடியேறினர். அதுவே பின்னர் நியூயார்க் நகரமாக வளர்ச்சி அடைந்தது.

ஹாலந்துக்கு ஹட்ஸன் திரும்பிச் செல்லும்போது லண்டனில் இவருடைய கப்பலை ஆங்கிலேயர் பறிமுதல் செய்தனர். இங்கிலாந்துக்கே இனி சேவை செய்வதாக ஹட்ஸன் வாக்குறுதி அளித்து, தம் நான்காவது கடல் பயணத்தை ஆங்கிலக் கப்பலொன்றில் மேற்கொண்டார். கிரீன்லாந்தைக் கடந்துசெல்லும்போது கடல் உறைந்துவிட்டது; கப்பலும் சிக்கிக்கொண்டது. உணவும் தீர்ந்துபோனதால் ஹட்ஸனும் அவருடன் சென்றவர்களும் மிகுந்த துன்பம் அடைந்தனர்.

கோடைக்காலம் வந்து கப்பல் புறப்பட்ட போது, கப்பலிலிருந்த சிலர் ஹட்ஸனுக்கு

எதிராகக் கிளர்ச்சி செய்தனர். ஹாட்ஸன்னையும் அவருடைய இளம் மகனையும் மற்றும் ஏழு பேர்களையும் பாதுகாப்பற்ற ஒரு சிறு படகில் ஏற்றி அனுப்பிவிட்டார்கள். படகு எங்கு சென்றதோ, தெரியவில்லை. ஹாட்ஸனைப் பற்றிய விவரமும் கிடைக்கவில்லை.

**ஹம்பெ :** விஜயநகரப் பேரரசின் புகழ்பெற்ற தலைநகரமாக விளங்கிய நகரம் ஹம்பெ. இது ஆந்திர மாநிலத்தில் பல்லாரி மாவட்டத்தில் ஹொாசப்பேட்டை அருகில் உள்ளது.

ஹரிஹரர், புக்கர் என்ற வீரர்கள 1336-ல் துங்கபத்திரை ஆற்றின் கரையில் ஹம்பெயைத் தலைநகராகக் கொண்டு விஜயநகர அரசை நிறுவினர். விஜயநகர அரசு வளர்ந்து பேரரசாக உருவாகவே ஹம்பெயும் கலைச்செல்வம் மிக்க தலைநகராகச் சிறப்படைந்தது. கலை அழகு மிக்க கோயில்களும், மண்டபங்களும் இங்கு கட்டப்பட்டன. விஜயநகர மரபுக் கட்டடச் சிற்ப முறைக்கு எடுத்துக்காட்டாக ஹம்பெ விளங்கியது.

16 ஆம் நூற்றாண்டில் விஜயநகர அரசர்களுக்கும், தக்காணத்தை ஆண்ட முகம்மதிய சுல்தான்களுக்குமிடையே அடிக்கடி போர் நடந்தது. 1556-ல் தலைக்கோட்டை என்னும் இடத்தில் நடந்த போரில் விஜயநகரப் படையைத் தக்காண சுல்தான்கள் தோற்கடித்தனர். அத்துடன் விஜயநகர ஆட்சி வீழ்ச்சியடைந்தது.

வெற்றிபெற்ற சுல்தான்கள் ஹம்பெ மாநகரைச் சூறையாடினார்கள். இந்நகரை அழிக்க அவர்களுக்கு ஆறு மாதம் பிடித்தது! அழிந்துபோன நிலையிலும் இந்நகரம் இன்றும் கலைச்சிறப்புடன் விளங்குகின்றது.

ஹம்பெயில் இன்று விஜயநகர அரசர்களுடைய குலதெய்வமான விருபாட்சகர் கோயிலும், இராமாயணக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ள ஹஜாரா இராமசானி கோயிலும் உள்ளன. விட்டலர் கோயிலிலுள்ள ஒரே கல்லில் செய்த தேரும், அழகான தூண்களுடன் கூடிய மண்டபங்களும் எழில்மிக்கவை. பேரரசர் கிருஷ்ணதேவ ராயர் (த.க.) உதயகிரியிலிருந்து வெற்றிச் சின்னமாகக் கொண்டுவந்த கிருஷ்ணன் சிலைக்காகக் கட்டிய கோயிலும் இங்கு உள்ளது. தாமரை மண்டபம் ஒன்றும், அரண்மனையும், செய்குளமும், யானைக் கூடமும், ஒரே கல்லால் செய்த யானை நீர்த் தொட்டியும், ஓலக்க மண்டபத்தின் வேலைப்பாடுகள் மிக்க தூண்களும் வியப்பூட்டும் கலையழகு வாய்ந்தவை. சமணக் கோயில்களின் எஞ்சிய பகுதிகளும், கட்டடங்களும் இங்கு உள்ளன. இவற்றினால் ஹம்பெ தொல்பொருளியல் சிறப்புமிக்கதாகத் திகழ்கின்றது.

**ஹம்பெ நகரிலுள்ள விட்டலர்கோயில்**



**ஹரப்பா :** இந்தியாவில் சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகத்தில் சிறந்த மக்கள் வாழ்ந்து வந்தனர். வட இந்தியாவில் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் சுமார் கி.மு. 3000 முதல் கி.மு. 1500 வரை மிக உயர்ந்த நாகரிகம் ஒன்று ஓங்கி வளர்ந்திருந்தது. இந்த உண்மையைச் சிந்துவெளிப் பகுதியில் (த.க.) அறிஞர்கள் அகழ்ந்தெடுத்த பண்டைய நகரங்களைக் கொண்டு நாம் அறிய முடிகிறது. சிந்துவெளியில் அவ்வாறு அகழ்ந்தெடுக்கப்பட்ட பண்டைய நகரங்களுள் ஒன்று ஹரப்பா.

இந்தியாவிலிருந்து பிரிந்து சென்ற இன்றைய பஞ்சாப் மாநிலத்தில், சட்லெஜ் ஆற்றின் கரையில் ஹரப்பா உள்ளது. இந்நகரை 1920-ல் தோண்டி எடுத்தனர். 1922-ல் மொகஞ்சதாரோ (த.க.) என்ற இடத்தில் ஒரு பழைய பௌத்த ஸ்தூபி கிடைத்தது. இதையும் ஹரப்பாவில் கிடைத்த புதைபொருள்களையும் ஆராய்ந்ததில், அவை வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டவை எனத் தெரியவந்தது. இதைத் தொடர்ந்து இந்திய, அயல்நாட்டு அறிஞர்கள் சிந்துவெளி நெடுகிலும் பல இடங்களில் அகழ்வாராய்ச்சி நடத்தி, வேறு சில நகரங்களையும் கண்டனர். இவற்றின் நகரமைப்பு, கட்டடச் சிற்பம் முதலியவை பல வகைகளிலும் ஒற்றுமையுடையனவாகக் காணப்பட்டன. எனவே, இவை ஒரு காலத்தில் சிந்துவெளி முழுதும் செழித்தோங்கியிருந்த ஓர் உயர்ந்த நாகரிகத்தின் சின்னங்கள் என்பது தெரியவந்தது. இந் நாகரிகத்திற்குச் 'சிந்துவெளி நாகரிகம்' (த.க.) எனப் பெயரிட்டனர்.

ஹரப்பா நகரம் நான்கு கிலோமீட்டர் சுற்றளவுடையதாக இருக்கிறது. இது எட்டு அடுக்குகளை உடையதாகக் காணப்படுகிறது; அதாவது, இது எட்டு முறை புதுப்பிக்கப்பட்ட நகரம் எனத் தெரிகிறது.

**ஹரப்பாவில் கிடைத்த சில மண்பாண்டங்கள்**





ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட செம்மணல் கற்சிலையின் ஒரு பகுதி.

ஹரப்பாவின் அமைப்பைக் கொண்டு, அது ஒரு பேரரசின் தலைநகராக இருந்திருக்க வேண்டுமெனக் கருதுகிறார்கள். இந்நகரின் புறம்பாகக் கோட்டையும, அதில் பல அரசாங்கக் கட்டடங்களும் காணப்படுகின்றன. இக்கோட்டை சுமார் 365 மீட்டர் நீளமும், 30 மீட்டர் அகலமும் உடையது. கோட்டையின் அடித்தளம் உறுதியான செங்கற்களால் ஆகியது. கோட்டைச் சுவர்கள் சாயாமல் பாதுகாக்க முட்டுச்சுவர்கள் (Ramparts) கட்டப்பட்டுள்ளன.

ஹரப்பாவில் காணப்படும் கட்டடங்கள் யாவும் நன்றாகச் சூளையிட்ட செங்கற்களைக் கொண்டு உறுதியாகக் கட்டப்பட்டுள்ளன. இங்குள்ள கட்டடங்கள் குடியிருப்பு இல்லங்களாகவும், பொதுக் கட்டடங்களாகவும் காணப்படுகின்றன. குடியிருப்பு இல்லங்கள் மாடிகள் உடையவை. இவற்றில் விருந்தினர் அறைகளும், பெண்களுக்குத் தனி அறைகளும், அகன்ற முற்றங்களும் உள்ளன. குப்பைத் தொட்டிகளும், கழிவு நீர்த் தேக்கங்களும், கால்வாய்களும் வடிகால்களும் சிறந்த நிலையில் அமைந்து ள்ளன.

ஹரப்பாவில் காணப்படும் சின்னங்களுள் சிறந்தது பெரியதொரு களஞ்சியமாகும். இது 52 மீட்டர் நீளமும் 41 மீட்டர் அகலமும் உடையது. இதன் சுவர் 3 மீட்டர் கனமும் 16 மீட்டர் உயரமும் உடையது. இது அரசினர் வரியாகத் திரட்டிய தானியங்களைச் சேமித்து வைக்கும் களஞ்சிய

மாக இருந்திருக்கக் கூடுமென அறிஞர்கள் கருதுகின்றனர். இக்களஞ்சியத்தை யொட்டித் தொழிலாளர் குடியிருப்புகள் உள்ளன.

ஹரப்பாவில் பலவகையான மண்பாண்டங்களும், அம்மி, குழவி, உரல், மாவரைக்கும் திரிகைகள் முதலியனவும் கிடைத்துள்ளன. பலவகைக் கல்மணிகளும் கோக்கப்பட்ட மாலைகளும், ஒட்டியாணங்களும், தங்கக் கடகங்களும், நெற்றிச் சுட்டிகளும் கிடைத்திருக்கின்றன.

ஹரப்பாவின் ஒரு பகுதியில் மனித மண்டை ஓடுகளும், எலும்புத் துண்டுகளும், தாழிகள் எனப்படும் பெரிய மண்பாண்டங்களுடன் கலந்து காணப்படுகின்றன. தாழிகளில் இறந்தவர் உடலை இட்டுப் புதைத்திருக்கிறார்கள். இந்த இடம் ஹரப்பாவின் இடுகாடாக இருந்திருக்கவேண்டுமெனக் கருதப்படுகிறது.

இவையெல்லாம் வரலாற்றுக்கு முந்திய காலத்தில் சிந்துவெளியில் வாழ்ந்த மக்களின் உயர்ந்த நாகரிகச் சிறப்பை விளக்குகின்றன.




ஹரியானா

**ஹரியானா :** இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்று ஹரியானா. இதன் பரப்பு 44,056 சதுர கிலோமீட்டர். மக்கள் தொகை 1,29,22,618 (1981). ஹரியானாவுக்குக் கிழக்கில் உத்தரப் பிரதேசமும், தெற்கிலும் மேற்கிலும் ராஜஸ்தானும், வடக்கில் பஞ்சாபும் எல்லைகளாக உள்ளன.

ஹரியானா 1966-ல் அமைக்கப்பட்ட ஒரு புதிய மாநிலம். அதற்கு முன் இது பஞ்சாபுடன் இணைந்திருந்தது. பழைய பஞ்சாப் மாநிலத்தில் பஞ்சாபி, இந்தி ஆகிய இரு மொழிகளும் வழங்கிவந்தன. பஞ்சாபி பேசும் மக்கள், மொழி அடிப்படையில் தங்களுக்குத் தனி மாநிலம் வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தனர். அதுபோலவே, இந்தி பேசும் மக்களும் தனி மாநிலம் கேட்டனர். இவர்களுடைய விருப்பத்திற்கிணங்க 1966-ல் பஞ்சாப், ஹரியானா என இரு மாநில்ங்கள் அமைக்கப்பட்டன. இந்தி பேசும் பகுதிகள் இணைந்து ஹரியானா மாநிலமாகியது. ஹரியானாவுக்குத் தனியாக ஒரு தலைநகர் உருவாக்கப்படும் வரையிலும், பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரான சண்டிகார் நகரமே இரு மாநிலங்களுக்கும் பொதுவான தலைநகராக இருந்துவரும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. 1953-ல் புதிதாக உருவாக்கப்பட்ட நகரம் சண்டிகார். மிக நவீன முறையில் எழுப்பப்பட்ட கட்டடங்கள் பல இந்நகரில் உள்ளன. சண்டிகார் இப்போதைக்கு இந்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சியிலிருந்து வருகிறது. இந்நகரிலுள்ள உயர்நீதி மன்றம், பல்கலைக்கழகம் ஆகியனவும் சில அரசாங்கப் பதவிகளும் இரு மாநிலங்களுக்கும் பொதுவாக இருந்துவரும்.

ஹரியானாவில் வேளாண்மையே முக்கியத் தொழில். கோதுமை, சோளம் ஆகியவை முக்கிய தானியங்கள். கரும்பு, எண்ணெய்வித்துகள், பருத்தி முதலியனவும் பயிரிடப்படுகின்றன. வேகமாகத் தொழில் வளர்ச்சியடைந்து வரும் மாநிலங்களில் ஹரியானாவும் ஒன்று. பருத்தி, கம்பள ஆடைகள், சிமெண்டு, காகிதம், சர்க்கரை, மோட்டார் சைக்கிள், சைக்கிள், டிராக்டர், கார், தையல் எந்திரம், வேளாண்மைக் கருவிகள், கண்ணாடி, பீங்கான் பொருள்கள் முதலியன தயாரிக்கும் தொழிற் சாலைகள் இங்கு உள்ளன. ஹிஸ்ஸார் என்னுமிடத்தில் ஒரு பெரிய கால்நடை வளர்ப்புப் பண்ணை உள்ளது. தரத்தில் உயர்ந்த ஆடு, மாடு, எருமை, பன்றி முதலியன கலப்பின (த.க.) முறையில் இங்கு உற்பத்தி செய்து வளர்க்கப்படுகின்றன. ஹிஸ்ஸாரில் ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகமும்

உள்ளது. இந்திய நாட்டின் கலை, மொழி, பண்பாடு ஆகியவற்றை வளர்க்கும் குறிக்கோளுடன் இங்குள்ள குரு க்ஷேத்திரம் என்னுமிடத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப் பட்டுள்ளது.

**ஹவையீ (Hawaii):** அமெரிக்கா என்று சுருக்கமாக நாம் அழைக்கும் நாட்டின் பெயர் அமெரிக்க ஐக்கிய நாடுகள் (த.க.) என்பதாகும். இந்நாட்டில் 50 மாநிலங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஹவையீ.

ஹவையீ மாநிலம் பல தீவுகளாலாகியது. அமெரிக்கக் கடற்கரைக்கு மேற்கே சுமார் 3,500 கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பால், பசிபிக் சமுத்திரத்தின் நடுவில் இத்தீவுகள் உள்ளன. இத்தீவுகளில் எட்டுத் தீவுகளே பெரியவை. இவற்றில் மட்டும் மக்கள் வாழ்கின்றனர். மற்றவை மிகச் சிறியவை. ஹவையீ தீவுகளின் மொத்தப் பரப்பு 16,700 சதுர கி.மீ. மக்கள்தொகை சுமார் ஏழு லட்சம்.

ஹவையீ தீவுகள் யாவும் சமுத்திரத்தின் அடியிலுள்ள மலைகளின் முகடுகளாகும். இவை ஒரு காலத்தில் எரிமலைகள்ாக இருந்தன. பவளம் (த.க.) என்ற பூச்சிகளின் கூடுகள் அடுக்கடுக்காக ஒன்று சேர்ந்து இம்முகடுகள் பெரிதாகித் தீவுகள் போலாகிவிட்டன. இத்தீவுகளில் இன்றும் முற்றும் அவிந்துபோகாத எரிமலைகள் உள்ளன.

எரிமலைக் குழம்பு படிந்திருப்பதால் இத்தீவுகளின் மண் மிகச் செழிப்பாக உள்ளது. கரும்பும் அன்னாசிப் பழமும் இங்கு பெருமளவில் விளைகின்றன. சர்க்கரை ஆலைகளும் அன்னாசிப் பழங்களைப் பக்குவப் படுத்தும் தொழிற்சாலைகளும் இங்கு பல உள்ளன. மீன்பிடித்தல் இங்கு மற்றொரு முக்கியத் தொழில். கால்நடைகளும் பன்றிகளும் வளர்க்கப்படுகின்றன. நிஹாவ் என்ற ஒரு தீவு முழுவதும் ஒரு பெரிய ஆட்டுப் பண்ணையாக விளங்குகிறது. மலைச்சரிவுகளில் காடுகள் வளர்ந்துள்ளன. அழகிய பல வண்ண மலர் பூக்கும் செடிகளும் மரங்களும் இங்கு ஏராளம்.




ஹவையீ

ஹவையீ தீவுகளில் ஆண்டு முழுவதும் இதமான வெப்பநிலை நிலவுகிறது. எனவே ஆயிரக்கணக்கான உல்லாசப் பயணிகள் இங்கு வருகிறார்கள். தலைநகர் ஹோனொலூலூ (Honolulu). இது ஒவாஹூ (Oahu) என்னும் தீவில் அமைந்துள்ளது. உல்லாசப் பயணிகளுக்காக இங்கு வசதிமிக்க பெரிய உணவு விடுதிகள் பல உள்ளன. இத்தீவிலேயே, அமெரிக்கக் கடற்படையின் முக்கிய துறைமுகமான பெர்ல் துறைமுகமும் (த.க.) உள்ளது.

ஹவையீ தீவுகளின் பூர்வ குடிகள் கனகர்கள் (Kanakas) எனப்படுவர். இவர்கள் இசையிலும் நடனத்திலும் மிகுந்த விருப்பமுள்ளவர்கள். தங்களுடைய அரசரின்கீழ் இவர்கள் சுதந்தரமாக வாழ்ந்து வந்தனர். ஆங்கிலேய நாடாய்வாளரான குக் (James Cook, த.க.) 1778-ல் இத்தீவுகளைக் கண்டுபிடித்தபின் ஐரோப்பியரும் பிற நாட்டினரும் இங்கு குடியேறத் தொடங்கினர். பிரிட்டனும் பிரான்ஸூம் இத்தீவுகளைக் கைப்பற்றிக்கொள்ளப் பலமுறை முயன்றன; முடியவில்லை. 1890-ல் அமெரிக்கா இத்தீவுகளின் நிருவாகத்தை மேற்கொண்டது. 1959-ல் இத்தீவுகள் அமெரிக்காவின் ஒரு மாநிலமாயின.

**ஹளேபீடு :** பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஹொய்சள அரசர்களின் தலைநகராயிருந்தது ஹளேபீடு. இது இன்று கருநாடக மாநிலத்தில் பெங்களூரிலிருந்து புனே செல்லும் ரெயில்பாதையில் பாணாவர ரெயில் நிலையத்திற்கு மேற்கே 32 கிலோமீட்டர் தொலைவில் ஒரு சிறு நகரமாக உள்ளது.

இந்நகரைப் பண்டைக்காலத்து மக்கள் துவாரசமுத்திரம் என்று அழைத்து வந்தார்கள். இராஷ்டிரகூடர்கள் 9ஆம் நூற்றாண்டில் துவார சமுத்திரம் என்ற குளத்தை அமைத்தனர். அதன் அருகில் 12ஆம் நூற்றாண்டில் ஹளேபீடு நகரை ஹொய்சளர்கள் நிறுவினர். இதனால் இந்நகரம் துவார சமுத்திரம் என மக்களால் அழைக்கப்பட்டதாகக் கூறுவர். 1310-ல் மாலிக் காபூர் என்னும் முஸ்லிம் தளபதி, இந்நகரைத் தாக்கிக் கொள்ளையடித்ததிலிருந்து இந்நகரம் நலிவடைந்தது.



ஹளேபீடுவிலுள்ள ஹொய்சளேசுவரர் கோயில் சிற்பம்.

இங்கு 'பெண்ணேகுட்டா' என்னும் குன்று இருக்கிறது. இது மன்னர் மாளிகை இருந்த இடம் எனக் கூறுகின்றனர். இக் குன்றின் அருகில் 'ஆனைகுந்தி' என்னும் ஓரிடம் உள்ளது. அங்கு அரசர்கள் தங் களுடைய யானைகளைக் கட்டிவைத்திருந் தார்கள் என்பர்.

கோயில்களுக்குப் பெயர்பெற்றது ஹளேபீடு. இங்கு ஹொய்சளேசுவரர் கோயில், கேதாரேசுவரர் கோயில்,

ஹொய்சளேசுவரர் கோயிலின் முழுத்தோற்றம்



சென்னக்கேசவர் கோயில் ஆகியனவும் மற்றும் மூன்று சமணக் கோயில்களும் உள்ளன. ஹொய்சளர் கட்டிய கோயில் களுள் சிறப்புமிக்கது ஹொய்சளேசுவரர் கோயிலேயாகும். விஷ்ணுவர்த்தன ஹொய் சளேசுவரர் என்ற மன்னர் 1121-ல் இக் கோயிலைக் கட்டினார். இக்கோயிலில் எங்கு திரும்பினாலும் அழகிய சிற்பங்கள் நிறைந்துள்ளன. சாளுக்கியக் கட்டடச் சிற்பத்தின் ஒரு கிளையான ஹோய்சள மர பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இக் கோயில் விளங்குகின்றது.

இங்குப் பல சமணக் கோயில்கள் சிதை ந்த நிலையில் உள்ளன. அவற்றுள் ஆதி நாத ஈசுவரர் — சாந்தேசுவரர், பார்சு வனாதேசுவரர் கோயில்கள் குறிப்பிடத் தக்கன. இவற்றிலுள்ள தூண்கள் கண் ணாடிபோல் பளபளவென்று மின்னும் படி விளங்குகின்றன. ஹளேபீடிலுள்ள கோயில்களும் சிற்பங்களும் உலகப் புகழ் பெற்று விளங்குகின்றன.

**ஹாக்கி :** ஒரு முனையில் சிறிது வளைந்த மட்டையைக் கொண்டு கிரிக்கெட் பந்து போன்ற ஒரு பந்தை அடித்து ஹாக்கி ஆடுவர்.

ஹாக்கி ஆட்டக்களம் 91 மீட்டர் நீள மும், 56 மீட்டர் அகலமும் உள்ள செவ்வக வடிவமான சமதரையாகும். அகலப் பக்கங் களின் நடுவில் 4 மீட்டர் இடைவெளியில் 2½ மீட்டர் உயரமுள்ள இரண்டிரண்டு கம் பங்கள் நடப்பட்டிருக்கும். இக்கம்பங்களின் மேல் முனைகள் மரத் தண்டினால் இணைக் கப்பட்டிருக்கும். இவற்றுக்குக் 'கோல்' கம் பங்கள் என்று பெயர். இக்கம்பங்களுக்கு இடையில் பந்தை அடித்துக் கோல் போட வேண்டும். ஹாக்கி பந்து வெண்மையாக இருக்கும்; பிளாஸ்ட்டிக்கினால் ஆனது; 23½ சென்டி மீட்டர் சுற்றளவும், சுமார் 160 கிராம் எடையும் உள்ளதாக இருக்கும். பந்தை அடிக்கப் பயன்படும் மட்டை 96 சென்டிமீட்டர் நீளமும் 3 சென்டிமீட்டர் விட்டமும் உடையது; இதன் ஒரு முனை வளைந்திருக்கும். வளைந்துள்ள பகுதியில் தட்டையான பக்கத்தினாலேயே பந்தை அடிக்கவேண்டும்.

இவ்விளையாட்டில் இரு கட்சிகள் உண்டு. ஒவ்வொரு கட்சியிலும் 11 ஆட்டக் காரர்கள் இருப்பார்கள். எதிர்க்கட்சியின் கோலினுள் பந்தை அடிப்பதும், தம் கட்சி யின்மேல் எதிர்க் கட்சியினர் கோல் போடாமல் பார்த்துக்கொள்வதும் ஆட்டத் தின் குறிக்கோள். பந்தை யாரும் காலால்



ஹாக்கி ஆட்டம்

உதைக்கக்கூடாது; கோல் வட்டத்திற்குள் கோல் காவலர் மட்டும் பந்தைக் காலால் உதைக்கலாம்; அடிக்கும் பந்து மேலே பறந்து வந்தால், அதை உள்ளங்கையால் தடுத்துத் தரையில் வீழ்த்தலாம்; ஆனால் கையால் பிடிக்கவோ, பிடித்து எறியவோ கூடாது. மட்டையை ஆட்டக்காரர்கள் தங்கள் தோள்மட்டத்திற்குமேல் உயர்த்தவும் கூடாது. ஆட்டக்காரர்கள் இந்த விதிகளை மீறாமல் பார்த்துக்கொள்ள நடுவர் ஒருவர் இருப்பார். குறித்த நேரத்திற்குள் அதிகமான கோல் போடும் கட்சியினர் வெற்றிபெற்றவர்களாவர்.

ஹாக்கி வேகம் மிகுந்த ஓர் ஆட்டம். வேகமாக ஓடும் திறமையும் பந்தை மட்டையால் தடுத்து நிறுத்தித் திருப்பி அடிக்கும் நுட்பமும், கட்சியிலுள்ள அனைவரும் ஒரு மனப்பட்டுப் பந்தை ஒருவருக்கொருவர் தட்டிக் கொடுத்து முன்னேறி கோல் போடுவதும் இந்த ஆட்டத்திற்கு மிகவும் தேவை. இந்த ஆட்டத்தை ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் ஆடுகின்றனர்.

ஹாக்கி ஒரு பழமையான ஆட்டம். ஆதியில் மட்டை கொண்டு ஆடும் ஆட்டத்தைப் பாரசீகர்கள் ஆடினார்கள். அதை ஆங்கிலேயர் கற்றுக்கொண்டதோடு அதைத் திருத்தியமைத்தனர். 1886-ல் இங்கிலாந்தில் இந்த ஆட்டத்திற்கான விதி முறைகள் நிருணயிக்கப்பட்டன. இந்த விதிகளே இன்றும் சிற்சில மாறுதல்களுடன் கையாளப்படுகின்றன. இங்கிலாந்திலிருந்து மற்ற நாடுகளுக்கு இவ்வாட்டம் பரவியது.

இந்தியாவில் ஆங்கிலேயர் இந்த ஆட்டத்தைப் புகுத்தினர். 1928-ல் ஹாக்கி ஆட்டம் முதன்முதலில் ஒலிம்ப்பிக் (த.க.) பந்தயங்களில் சேர்க்கப்பட்டது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் இந்த ஒலிம்பிக் பந்தயத்தில் 1928, 1932, 1936 ஆகிய ஆண்டுகளில் ஒலிம்ப்பிக் ஹாக்கி ஆட்டத்தில் இந்தியா முதன்மை பெற்றது. பாக்கிஸ்தான் பிரிந்த பிறகு 1948, 1952, 1956 ஆகிய ஆண்டுகளிலும் இந்தியாவே ஒலிம்ப்பிக் பந்தயத்தில் முதன்மை பெற்றது. பின்னர் சில முறை இப்பெருமையை இழந்தாலும் ஹாக்கி ஆட்டத்தில் சிறந்த நாடுகளுள் ஒன்றாக இந்தியா விளங்கி வருகிறது.

காலில் சறுக்குச் சக்கரத்தைக் (Skates) கட்டிக்கொண்டு பனி உறைந்த தரையிலும் ஹாக்கியை ஆடுவார்கள். இதற்குப் 'பனிக் கட்டி ஹாக்கி' (Ice Hockey) என்று பெயர். பனிமிகுந்த நாடுகளில் இதை ஆடுகின்றார்கள்.

**ஹாங்காங் :** (Hong Kong): சீனாவின் தென்கிழக்குக் கரையிலுள்ள ஒரு பிரிட்டிஷ் குடியேற்றப் பகுதி ஹாங்காங். சீனாவுடன் ஒட்டியுள்ள ஒரு சிறு தீபகற்பமும் ஹாங் காங் தீவும் மற்றும் சில தீவுகளும் இதில் அடங்கும். பரப்பு 1,040 சதுர கிலோ மீட்டர்; மக்கள்தொகை 49,86,560 (1981). தலைநகர் விக்டோரியா.

ஹாங்காங் ஒரு சிறு குடியேற்றப் பகுதி தான் என்றாலும் இங்குள்ள துறைமுகம் புகழ்பெற்றது. உலகிலுள்ள மிகப் பெரிய துறைமுகங்களுள் இதுவும் ஒன்று. இது ஹாங்காங் தீவுக்கும் தீபகற்பப் பகுதிக்குமிடையே அமைந்துள்ளது. இது ஓர்




ஹாங்காங்

இயற்கைத் துறைமுகமாகும். மிக ஆழமானது; எனவே மிகப்பெரிய கப்பல்களும் இங்கு வரமுடியும். துறைமுகத்தின் நுழைவாயிலில் வடகரையில் கௌலூன் நகரமும், தென்கரையில் தலைநகரான விக்டோரியாவும் அமைந்துள்ளன. இரு நகர்களுக்குமிடையே உள்ள தூரம் சுமார் 1½ கிலோ மீட்டர். படகுகள் மூலம் இவ்விரு நகர்களுக்கிடையே போக்குவரத்து நடைபெறுகிறது.

வாணிகமே ஹாங்காங்கின் முக்கியத் தொழிலாக உள்ளதால் இரு நகர்களிலும் ஏராளமான வாணிக நிலையங்களும் பண்டகசாலைகளும் வங்கிகளும் உள்ளன. துறைமுகத்தில் பண்டங்களை ஏற்றி இறக்கும் வேலைகளைச் செய்து பலர் வாழ்கின்றனர்; பலர் உல்லாசப் பயணிகளுக்கு வழிகாட்டிகளாகப் பணியாற்றுகின்றனர்.

ஹாங்காங் தீவு, தீபகற்பம் இரண்டுமே மலைப்பாங்கானவை; வேளாண்மைக்கு ஏற்ற நிலம் குறைவு. தீவுலுள்ளோருள் பலர் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தீபகற்பப் பகுதியில் வாழ்வோர் பலர் வேளாண்மை செய்கின்றனர். நெல், காய்கறி முதலியன பயிரிடப்படுகின்றன. கால்நடைகளும் பன்றிகளும் வளர்க்கப்படுகின்றன.

ஹாங்காங் தீவு 1842-ல் பிரிட்டன் வசமாகியது. அப்போது இத்தீவில் மக்கள் சிலரே வாழ்ந்தனர். கடல் கொள்ளையர்கள் ஒளிந்துகொள்ளும் இடமாகவே இது இருந்தது. பிரிட்டிஷார் இத்தீவை ஒரு பெரிய வாணிகத்தலமாக மாற்ற விரும்பினர். எனவே, எல்லா நாட்டுக் கப்பல்களையும் துறைமுகத்திற்குள் வர அனுமதித்தனர்; எந்நாட்டினரும் இங்கு வந்து வாணிகம் செய்யலாமென அழைத்தனர். இதன் விளைவாக, ஹாங்காங் வெகு விரைவில் வளர்ச்சியடைந்தது. ஏராளமான கப்பல்கள் இங்கு வந்ததால், முதலில் கப்பல் பழுது பார்க்கும் தொழிலும் பின்னர் கப்பல் கட்டும் தொழிலும் இங்கு வளர்ந்தன. இன்று மிகப் பெரிய கப்பல்களும் இங்கு கட்டப்படுகின்றன.

வாணிகத்தைத் தொடர்ந்து பல தொழிற்சாலைகளும் இங்கு தோன்றின. அவற்றுள் பஞ்சாலைகளும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் முக்கியமானவை. கயிறு, காலணி, கைவிளக்கு, பொம்மைகள், மின்சாரக்கருவிகள், பிளாஸ்ட்டிக் முதலியன தயாரிக்கும் தொழிற்சாலைகளும் இங்கு உள்ளன.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஹாங்காங்கை ஜப்பானியர் கைப்பற்றிக் கொண்டனர். பின்பு, யுத்த முடிவில் இது மீண்டும் பிரிட்டிஷார் வசமாயிற்று.

**ஹார்வி, வில்லியம்** (**William Harvey, 1578-1657**): நம் உடலின் எல்லா உறுப்புகளிலும் இரத்தம் பரவியுள்ளது. இதயத்திலிருந்து இரத்தக் குழாய்கள் மூலம் பல்வேறு உறுப்புகளுக்கும் இரத்தம் சென்று, பிறகு அங்கிருந்த வேறு சில இரத்தக் குழாய்கள் மூலம் இதயத்திற்குத் திரும்பிவருகிறது. இவ்வாறு இரத்தம் இதயத்திலிருந்து சுற்றோட்டமாக எல்லாப் பகுதிகளுக்கும் சென்று வந்து கொண்டிருப்பதை இரத்த ஓட்டம் என்கிறோம். இதனை முதன் முதலில் கண்டுபிடித்துக் கூறியவர் வில்லியம் ஹார்வி.

இங்கிலாந்தில் போல்க்ஸ்டோன் என்னும் இடத்தில் ஹார்வி பிறந்தார். இளமைக் கல்வியை முடித்துக்கொண்டபின் இவர் இத்தாலியில் புகழ்பெற்று விளங்கிய பதுவா (Padua) என்ற பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயிலச் சென்றார். அக்காலத்தில் இரத்த ஓட்டம் எவ்விதம் நடைபெறுகிறது என்பது பற்றிப் பல்வேறு விதமான கருத்துகள் நிலவிவந்தன. ஒன்றுக்கொன்று முரண்பாடாக உள்ள இக்கருத்துகளையெல்லாம் கேட்ட ஹார்வி தாமே உண்மையைக் கண்டுபிடிக்க உறுதி கொண்டார்.

ஹார்வி 1602-ல் லண்டனுக்குத் திரும்பி, மிகுந்த புகழுடன் மருத்துவத் தொழில் நடத்திவரலானார். அரசாங்க மருத்துவராகவும் மருத்துவக் கல்லூரியில் ஆசிரியராகவும்

**வில்லியம் ஹார்வி**



பணியாற்றினார். பின்னர், முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்லஸ் ஆகிய பிரிட்டிஷ் மன்னர்களுக்கு மருத்துவராக நியமனம் பெற்றார். தொழிலில் பெரும் வெற்றி கிடைத்தபோதும் இரத்த ஓட்டம் பற்றிய உண்மையைக் கண்டுபிடிப்பதி லேயே இவருடைய கவனம் இருந்துவந்தது. முதலில் விலங்குகளைக் கொண்டு சோதனை செய்தார். பின்னர் தம்மிடம் வந்த நோயாளிகளை நுட்பமாகப் பரி சோதித்து, இறுதியில் உண்மையைக் கண்டு பிடித்துக் கூறினார்.

ஆனால் அக்காலத்தில் வாழ்ந்த மருத்து வர்கள் இவருடைய கருத்தை ஏற்க மறுத் தனர்; பலர் பழி தூற்றினர். எனினும் காலம் செல்லச் செல்ல இவருடைய கருத்தே உண்மையெனத் தெரியலாயிற்று. இவருடைய புகழ் பரவியது; இவர் எழுதிய நூலுக்கு எங்கும் ஆதரவு கிடைத்தது. 300 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப் பட்ட தாயினும் இந்நூல் இன்றும் படிக்கத் தக்கது. இரத்த ஓட்டம் பற்றி மிகச் சரியாக இந் நூலில் ஹார்வி கூறியிருக்கிறார். மருத்து வத்துறையின் வளர்ச்சிக்கு இவருடைய கண்டுபிடிப்பு மிக உதவியாக இருந்தது. மிகச் சிறந்த உலக மருத்துவர்களுள் ஒரு வராக ஹார்வி போற்றப்படுகிறார்.

**ஹார்ன் முனை** (Cape Horn): இது தென் அமெரிக்காக் கண்டத்தின் தென் கோடி முனையாகும். ஹார்ன் தீவிலுள்ளது. இது தென் துருவத்தின் அண்மையிலிருப்ப தால் குளிர் அதிகம். தாவரங்கள் முளைப்ப தில்லை. பானமா கால்வாய் வெட்டுமுன் கப்பல்கள் இம்முனையைச் சுற்றிச் சென்றன. இங்கு பயங்கரமான புயல்கள் எழுகின்றன. முதலில் 1578-ல் சர் பிரான் சிஸ் டிரேக் இம்முனையை அடைந்தார். ஆயினும் 1615-ல் இங்கு சென்ற டச்சு மாலுமிகள் தங்கள் நாட்டிலுள்ள ஹோர்ன் (Hoorn) மாகாணத்தின் பெயரை வைத் தனர். இதுவே நாளடைவில் ஹார்ன் என்றாயிற்று.



ஹார்ன் முனை

**ஹாலந்து** : ஐரோப்பாக் கண்டத்தின் வட மேற்குப் பகுதியிலுள்ள நாடு ஹாலந்து. இதன் அதிகாரபூர்வமான பெயர் நெதர் லாந்து. ஆனால் ஹாலந்து என்றே பொது வாக இது அழைக்கப்படுகிறது.



ஹாலந்து

ஹாலந்து என்பது இந்நாட்டிலுள்ள ஒரு மாநிலத்தின் பெயர். முற்காலத்தில் இம் மாநிலம் மிகுந்த அரசியல் செல்வாக்குடன் விளங்கியது. மக்கள் தொகையும் அதிகம். அதனால் இம்மாநிலத்தின் பெயரே நாடு முழுவதற்கும் வழங்குவதாயிற்று. பார்க்க: நெதர்லாந்து.

**ஹிட்லர்** (Adolf Hitler, *1889-1945*): ஜெர்மனியை 1933 முதல் 12 ஆண்டுகள் சர்வாதிகாரியாக ஆண்டவர் அடால்ப் ஹிட்லர். உலகில் ஜெர்மானியரே மிக உயர்ந்த இனத்தினர் எனக் கருதிக் கொண்டு, உலகம் முழுவதையும் ஜெர்மனி யின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர முயன்றார்; அதனால் இரண்டாம் உலக யுத்தத்திற்குக் காரணமாக இருந்தவரும் இவரே.


அடால்ப் ஹிட்லர்

ஹிட்லர் வட ஆஸ்திரியாவில் 'இன்' (Inn) ஆற்றின் கரையிலுள்ள 'பிரானவ்' (Braunau) என்ற ஊரில் பிறந்தார். இவர் இளமையில் ஓவியராக விரும்பினார். பெற்றோர் இறந்ததால் இவர் 1907-ல் வியன்னா சென்று, அங்குள்ள கலைக்கழகத்தில் சேர முயன்று தோற்றார். அதனால் அஞ்சல் அட்டைகளையும், விளம்பரத் தாள்களையும் வரைந்து விற்று ஐந்தாண்டுகள் பிழைத்து வந்தார். ஆஸ்திரியாவில் கட்டாய ராணுவப் பணியிலிருந்து தப்புவதற்காக 1913-ல் இவர் ஆஸ்திரியாவைவிட்டு, ஜெர்மனியிலுள்ள மூனிக் நகரம் சென்றார். அது முதல் இவர் ஜெர்மனியையே தாயகமாகக் கொண்டார்.

முதல் உலக யுத்தத்தின்போது ஹிட்லர் ஜெர்மன் படையில் சேர்ந்து நான்கு ஆண்டுகள் பணியாற்றினார். 1918-ல் ஜெர்மனி போரில் தோற்றது. இத்தோல்விக்கு அன்று ஜெர்மனியிலிருந்த ஜனநாயகத்தை விரும்பிய அரசியல் தலைவர்களும், தொழிற் சங்கங்களும், யூதர்களுமே காரணம் என ஹிட்லர் கருதினார். இதேபோன்ற கருத்துடையவர்களால் நிறுவப்பட்ட தேசிய சோஷலிச ஜெர்மன் தொழிலாளர் கட்சியில் (National Socialist German Workers' Party) சேர்ந்தார். விரைவில் செல்வாக்குப் பெற்று, 1921-ல் அக்கட்சியின் தலைவரானார். ராணுவத் தலைமை என்ற கொள்கையின் அடிப்படையில் இக்கட்சியை மாற்றியமைத்தார். இதற்கு நாஜிக் கட்சி என்று பெயர். இக்கட்சியின் அங்கமாக இரகசியப் படை ஒன்றை அமைத்து, அதற்கு உள்நாட்டுப்போரை நடத்துவதற்குரிய பயிற்சியை அளித்தார்.

இந்தச் சமயத்தில் ஜெர்மனியில் அளவுக்கு மிகுதியாக விலைவாசிகள் உயர்ந்தன. வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்தது. பொருளாதார நெருக்கடியாலும் மக்கள் அல்லலுற்றனர். இச்சமயத்தில் ஜெர்மனியைச் சேர்ந்த 'ரூர்' (Ruhr) பகுதியை பிரான்ஸ் ஆக்கிரமித்துக் கொண்டது. இதனால் மக்கள் மனக்கொதிப்படைந்தனர். இந்நிலைமையைப் பயன்படுத்தி ஹிட்லர், உணர்ச்சியைத் தூண்டும் தம்முடைய பேச்சு வன்மையினால் மக்களிடம் தம் கட்சிக்குச் செல்வாக்குத் திரட்டலானார். தம்முடைய இரகசியப் படையின் துணைகொண்டு, 1923-ல் மூனிக்கிலிருந்த பவேரிய மாநில அரசைக் கைப்பற்றி பெர்லினைத் தாக்க முயன்றார். ஆனால் இந்த முயற்சி தோல்வியடைந்தது. இவ்ரையும் இவருடைய துணைவர்களையும் கைது செய்தனர். இவர் சிறையில் ஒன்பது மாதம் இருந்தபோது, 'என் போராட்டம்' என்ற நூலை எழுதினார். உலகம் முழுவதையும் ஜெர்மனியின் கீழ்க் கொண்டுவர வேண்டுமென இவர் கண்ட கனவை இந்நூல் விவரிக்கிறது. இந்நூல் நாஜிக் கட்சியினருக்கு வேதம்போல் அமைந்தது.

சிறையிலிருந்து வெளிவந்த ஹிட்லர், நாஜிக் கட்சியை வலிமைவாய்ந்த ஒரு கட்சியாக உருவாக்குவதில் முனைந்தார். அக்கட்சியைத் தம் சொந்த ராணுவம் போல் அமைத்துக்கொண்டார். அக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் சீருடை அணிந்தனர். இவர்கள் ஹிட்லரின் ஆணைக்கு அடிபணிந்தனர். ஹிட்லர் தம் நாவன்மையால் பொதுமக்களைப் போர்ப் பாதையில் தூண்டினார். ஜனநாயகத்திடமும் யூதர்களிடமும் அயல்நாடுகளிடமும் அவர்களுக்கு வெறுப்பு உண்டாகுமாறு செய்தார். 1932-ல் ஜெர்மன் நாடாளுமன்றத்திற்கு நடந்த தேர்தலில் இவருடைய கட்சி அதிக இடங்களைப் பெற்றுத் தனிப்பெருங்கட்சியாக விளங்கியது. அதனால் இவரை 1933 ஜனவரி 30-ல் தலைமை அமைச்சராகக் (Chancellor) குடியரசுத் தலைவர் நியமித்தார். 1934-ல் குடியரசுத் தலைவர் இறந்ததும், எவ்விதத் தேர்தலும் நடத்தாமல் குடியரசுத் தலைவர் பதவியையும் ஹிட்லர்

தாமே சேர்த்துக் கொண்டார். சில நாட்களில் போர் அமைச்சர் பதவியையும் ஏற்றார். நாஜிக் கட்சியில் இவருடைய போக்கை எதிர்த்தவர்களையெல்லாம் ஈவிரக்கமின்றி ஒழித்துக் கட்டினார். நாடாளுமன்றத்தைச் செயலற்றதாக்கித் தம் ஆணைகள் மூலமே நாட்டை ஆளும் அதிகாரமும் பெற்றார்.

இவ்வாறு எல்லா அதிகாரங்களையும் தம் வசப்படுத்திக் கொண்டு சர்வாதி காரம் செய்யத் தொடங்கியதும், பிற நாடுகளை வெல்லும் தமது நோக்கத்தைச் செயலாக்குவதில் முனைந்தார். ஐரோப்பாவிலேயே வலிமைவாய்ந்ததாக ஜெர்மன் படையை உருவாக்கினார். 1939 தொடக்கத்தில் ஆல்பேனியாவையும், செக்கோஸ்லாவாக்கியாவையும் கைப்பற்றினார். அடுத்து போலந்து நாட்டைத் தாக்கினார். அதனால் 1939 செப்டெம்பர் முதல் நாள் பிரிட்டனும், பிரான்ஸும் ஜெர்மனியின் மீது போர் தொடுத்தன. இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியது.

ஹிட்லர் மின்னல் வேகத்தில் தம் படைகளைச் செலுத்தி, ஐரோப்பிய நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றினார். பிரான்ஸும் தோற்றது. பிரிட்டனுக்கு அமெரிக்கா உதவியது. பிரிட்டனை அழிக்க ஹிட்லர் செய்த முயற்சி தோற்றது. ஹிட்லர், ரஷ்யாவுடன் போர்த் தவிர்ப்பு உடன்படிக்கை செய்துகொண்டிருந்தார். எனினும், 1941 ஜூன் 27-ல் இந்த உடன்படிக்கையை மீறி, முன்னறிவிப்பு இன்றி ரஷ்யாவைத் தாக்கினார். இத்தாக்குதலை ரஷ்யப்படைகள் முறியடித்தன. இத்தாலியும் ஜப்பானும் இவருக்கு உதவின. உலகின் பெரும்பாலான நாடுகள் இவருக்கு எதிரணியில் நின்றன. ஹிட்லரின் வலிமை வாய்ந்த ராணுவம் சீர்குலையலாயிற்று. எல்லா முனைகளிலும் ஜெர்மன் படைகள் தோற்கலாயின. அதனால் இவர்மீது வெறுப்படைந்த தளபதிகளில் சிலர் 1944 ஜூலையில் இவரைக் கொல்ல முயன்றனர். ஹிட்லர் உயிர்தப்பினார். 1945 ஏப்ரல் 30-ல் ரஷ்யப்படைகள் இவர் தங்கியிருந்த பெர்லின் நகரை முற்றுகையிட்டன. அதற்கு முதல் நாள் திருமணம் செய்துகொண்ட ஹிட்லர், தப்பிக்க வழியின்றித் தம் மனைவியுடன் தற்கொலை செய்துகொண்டார். உலகை ஆளும் பேராசையால் இவர் வீழ்ச்சியடைந்தார்.

உலக வரலாற்றில் நிலையானதொரு இடம்பெற்ற நகரம் ஹிரோஷிமா. முதன் முதலில் அணுகுண்டு வீச்சுக்குள்ளாகி அழிந்த நகரம் இது. ஜப்பான் நாட்டிலுள்ள இந்நகரம், இரண்டாம் உலக யுத்தத்தின்போது பேரழிவுக்குள்ளானதெனினும், இன்று மீண்டும் உருவாக்கப்பட்டு அழகிய நகரமாக விளங்குகிறது.



அணுகுண்டு தாக்குதலுக்குள்ளாகி நாசமான ஹிரோஷிமா நகரம்.

ஹான்ஷூ என்ற தீவின் வடபகுதியிலுள்ளது இந்நகரம். இங்கு 8,52,600 மக்கள் வாழ்கின்றனர்.

ஆட்டா (Ota) என்ற ஆற்றின் கழிமுகப் பகுதியில் 1589-ல் ஹிரோஷிமா நிறுவப்பட்டது. இந்த ஆறு இவ்விடத்தில் ஏழு கிளைகளாகப் பிரிந்து கடலில் கலக்கிறது. இக்கிளையாறுகள் இந்நகரை ஆறு - தீவுகளாகப் பிரிக்கின்றன. இத்தீவுகள் ஐம்பதுக்கும் அதிகமான பாலங்களினால் இணைக்கப்பட்டுள்ளன. ரெயில், ஆறு, கால்வாய் ஆகிய பல வழிகள் கொண்ட மிக அழகிய நகராக இது அமைக்கப்பட்டுள்ளது.

இங்குக் கப்பல் கட்டும் தளங்கள் பல உள்ளன. கடலிலிருந்து கிடைக்கும் மீன் முதலிய உணவுப்பொருள்களுக்கு இது முக்கிய வாணிக மையமாக விளங்குகிறது. மோட்டார் வண்டிகள் தயாரிப்பு, உணவுப்

ஹிரோஷிமா நகரின் இன்றைய தோற்றம்



பொருள்களைப் பக்குவம் செய்தல், தையல் ஊசிகள் தயாரித்தல் போன்ற தொழில்கள் இங்கு சிறப்பாக நடைபெறுகின்றன.

ஹிரோஷிமா 1894-95, 1900-05-ல் நடந்த போர்களின்போது ராணுவத்தள மாக இருந்தது. இரண்டாம் உலக யுத்தத் தின்போது ஜெர்மனிக்கு ஆதரவாக ஜப்பான் போரில் இறங்கியது. அமெரிக்கா வுக்குச் சொந்தமான பெர்ல் துறைமுகத்தை (த.க.) ஜப்பான் திடீரெனத் தாக்கியது. அதனால், அமெரிக்காவும் உலக யுத்தத்தில் ஈடுபட்டது. 1945 ஆகஸ்டு 6-ல் அமெ ரிக்கா ஓர் அணுகுண்டை ஹிரோஷிமாமீது வீசியது. அதனால் இந்நகரின் 10 சதுர கிலோமீட்டர் பகுதி முற்றிலும் அழிந்தது; 83,000 மக்கள் மாண்டனர். அடுத்து ஆகஸ்டு 9-ல் நாகசாகி என்ற மற்றொரு ஜப்பானிய நகரின்மீது அமெரிக்கா மற் றொரு அணுகுண்டை வீசியது. அணு குண்டுகளால் ஹிரோஷிமா, நாகசாகி இரண்டு நகரங்களும் எரிந்து சாம்பலாகி விட்டன. ஜப்பான் தோல்வியை ஒப்புக் கொண்டு அடிபணிந்தது.

அணுகுண்டின் தீய விளைவுகளால் இறந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு இங்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்கப் பட்டுள்ளது.

**ஹிஜிரா :** இஸ்லாமிய மதத்தை நிறுவிய முகம்மது நபி கி. பி. 622-ல் மக்கா என்ற தம் நகரத்திலிருந்து மதீனா என்ற மற்றொரு நகருக்கு தமது விரோதிகளால் ஓட்டப் பெற்றார். இந்நிகழ்ச்சி ஹிஜிரா என்று குறிப்பிடப்படுகிறது. முகம்மது மதீனாவில் வரவேற்கப்பட்டார். மதீனா மக்கள் இஸ்லாமிய மதத்தை ஏற்றுக்கொண்டனர். பிறகு முகம்மது மதீனா மக்கள் உதவியால் மக்கா நகரைக் கைப்பற்றி, அதைத் தம் மதத்தின் தலைநகராக்கினார். முகம் மதுக்குப் பிறகு கலீபா உமர் என்பவர் இஸ் லாமிய சகாப்தத்தை ஹிஜிரா நிகழ்ந்த கி.பி. 622 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கச் செய்தார். இவ்வாண்டு முகம்மதியரின் முதலாண்டு ஆயிற்று.

**ஹீராக்குட் அணை :** உலகிலே மிக நீளமான அணை ஹீராக்குட் அணை. இது இந்தியாவில் ஒரிஸ்ஸா மாநிலத்தில் மகா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. சாம்பல்பூர் என்னும் நகரிலிருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் இது உள்ளது.

மகாநதியிலும், அதன் துணையாறுகளி லும் மிகப் பழங்காலத்திலிருந்தே ஆண்டு தோறும் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற் பட்டுப் பெருஞ்சேதம் விளைந்து வந்தது. இவ்வாறு வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் தடுக்கவும், நீரை வீணாக்காமல் பாசனத் திற்கும் மின்சார உற்பத்திக்கும் பயன்படுத் தவும், கப்பல் போக்குவரத்துக்கு வழிசெய் யவும் மகாநதிப் பள்ளத்தாக்குத் திட்டம் ஒன்றை இந்திய அரசு வகுத்தது. இத்திட்டத் தின் ஒரு பகுதியாக ஹீராக்குட் அணை உருவாகியது.

ஹீராக்குட் அணை அமைந்துள்ள இடத்தில் மகாநதி மூன்று கிளைகளாகப் பிரிந்து மீண்டும் ஒன்றுகூடுகிறது. இவ்வாறு ஒன்றுகூடும் இடம், இரு குன்றுகளுக்கு இடையில் 3 கிலோமீட்டர் அகலம் உடைய தாக அமைந்திருக்கிறது. இந்த இரு குன்று களுக்கிடையே ஹீராக்குட் அணை கட்டப் பட்டுள்ளது.

மகாநதியின் கரைபுரண்டோடும் நீரை அடக்கி, அது மக்களுக்குப் பயன்படும் விதத்தில் ஹீராக்குட் அணை கட்டப்பட்டி ருக்கிறது. மண், கல், கான்கிரீட் மூன்றையுங் கொண்டு கட்டப்பட்டுள்ள இந்த அணை இந்தியாவில் மிகப் பெரிய அணையாகும். அத்துடன் உலகிலுள்ள மற்ற அணை களைக்காட்டிலும் நீர் தேங்கும் பரப்பும் இதில்தான் அதிகம். இந்த அணையின் நீர் நிற்கும் பரப்பு 740 சதுர கிலோமீட்டர்.

ஆற்றுப் படுகையின் ஆழமான பகுதி யிலிருந்து ஹீராக்குட் அணையின் உயரம் 60 மீட்டர்; நீளம் 4,800 மீட்டர். இதன் இருபுறங்களிலும் மொத்தம் 20 கிலோ மீட்டர் நீளமுடைய செய்கரைகள் (Dykes) அமைந்துள்ளன. அணை நெடுகிலும் 7½ மீட்டர் அகலம் உள்ள சாலை அமைந்திருக் கிறது.

ஒரிஸ்ஸாவில் கழிமுகப் பகுதிகளில் வெள்ளத்தினால் சேதங்கள் உண்டாகாமல் ஹீராக்குட் அணை பாதுகாக்கிறது. 10,28,000 ஹெக்டேர் நிலப் பரப்புக்குப் பாசன வசதி கிடைக்கிறது. அணையின்

ஹீராக்குட் அணை



காலடியிலுள்ள மின்னாக்க நிலையத்தில் 2,70,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடிகிறது. இந்த அணையிலிருந்து மகாநதியில் ஒரே சீரான அளவில் நீர்விடப் படுவதால், அந்நதியின் வழியாகக் கப்பல் போக்குவரத்து நடத்தவும் வழி ஏற் பட்டுள்ளது.

இந்தியாவில் இந்தியப் பொறியியல் வல்லுநர்களே திட்டமிட்டு நிறைவேற்றிய முதல் திட்டம் ஹீராக்குட் அணையே யாகும். இவ்வணையின் வலப்பக்கமுள்ள குன்றின் மீது 'ஜவாஹர் மினார்' (Jawahar Minar) என்னும் தூபி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

**ஹீலியம் :** வாயுக்களிலே மிகவும் குறை ந்த எடையுள்ளது ஹைடிரஜன். அதற்கு அடுத்து சற்று அதிக எடையுள்ளது. ஹீலியம். காற்றின் எடை ஹீலியத்தைப் போல சுமார் நான்கு மடங்கு ஆகும்.

ஹீலியம் ஒரு தனிமம் (த.க.). இது சூரியனின் வாயுமண்டலத்தில் இருப்பதை 1868-ல் கண்டுபிடித்தார்கள். எனினும் 1895-ல் தான் இதைத் தனியே பிரித் தெடுக்கும் வழியைக் கண்டார்கள்.

ஹீலியம் வாயுவுக்கு நிறமோ மணமோ கிடையாது. இது மற்றப் பொருள்களுடன் பெரும்பாலும் வினைப்படுவதேயில்லை. இது தானும் எரியாது, பிற பொருள்கள் எரிவதற்குத் துணை செய்யாது.

ஹீலியம் உலகில் பல இடங்களில் இருந்தாலும் மிகச் சிறிய அளவிலேயே உள்ளது. தாது ஊற்றுகள், எரிமலைகள் இவற்றிலிருந்து வரும் வாயுக்களில் ஹீலியம் உள்ளது. யுரேனியம், ரேடியம், தோரியம், ஆக்டீனியம் முதலிய தனி மங்களின் கதிரியக்க (த.க.) மாற்றங்களின் போதும் ஹீலியம் வாயு உண்டாகிறது.

ஹீலியம் மிகக் குறைந்த கொதிநிலை உடையது. எனவே இயற்கை வாயு விலிருந்து (த.க.) இதை எளிதில் தனியே பிரித்தெடுக்கலாம். இயற்கை வாயு என்பது பல்வேறு வாயுக்கள் அடங்கிய கலவை. இதன் வெப்பநிலையைக் குறைக்க இதைக் குளிர்வித்தால், இதிலுள்ள வாயுக்கள் ஒவ் வொன்றாகத் திரவமாக மாறும். அவ்வப் போது அவற்றை எடுத்துவிடலாம். ஹீலியம் குறைந்த கொதிநிலை உடைய தாகையால், இறுதியில் அதுமட்டும் எஞ்சி நிற்கும். எடை மிகக் குறைவாக இருப்பதால் பெரிய பலூன்களிலும் ஆகாயக்கப்பல்களிலும் (த.க.) ஹீலியம் வாயுநிரப்பப்படுகிறது. முதல் உலக யுத்தத்தின்போது இது மிகச் சிறப்பாகப் பயன்பட்டது. முதன் முதலில் ஹைடிரஜன் வாயுவைத்தான் இதற்குப் பயன்படுத்தினார்கள். ஆனால் ஹைடிரஜன் வாயு எளிதில் தீப்பற்றக் கூடியது. அதனால் பல ஆகாயக் கப்பல்கள் எரிந்துபோய்விட்டன. எனவே பின்னர் தீப் பற்றி எரியாத ஹீலியம் வாயுவைப் பயன் படுத்தினார்கள்.

மிகத் தாழ்ந்த வெப்பநிலைகளைப் பெறு வதற்கு ஹீலியம் உதவுகிறது. தாழ் வெப்ப நிலைகளை அளக்க உதவும் வாயு வெப்ப மானிகளில் (Gas Thermometers) இது சிறு அளவில் பயன்படுத்தப்படுகிறது. ஆக்சி ஜனுடன் சேர்ந்து, ஆழ்கடலில் சென்று ஆராய்வோரும், அழுத்தம் மிக்க சுரங்கம்

**ஹீலயத்தின் பயன்களில் சில**



போன்ற இடங்களில் பணிபுரிவோரும் சுவாசிப்பதற்குச் 'செயற்கைக்காற்று' என்ற பெயரில் பயன்படுகிறது. பாறைகளில் உள்ள ஹீலியத்தின் அளவைக் கொண்டு நாம் வாழும் பூமியின் வயதைப் புவியியலார் கணக்கிடுகிறார்கள்.

உலகில் பயன்படும் ஹீலியத்தின் பெரும்பகுதி அமெரிக்காவில்தான் கிடைக்கிறது.

**ஹுவாங் ஹோ ஆறு (Hwang Ho):** சீனாவில் பாயும் மிகப் பெரிய ஆறுகளுள் ஒன்று ஹுவாங் ஹோ. இதன் நீளம் சுமார் 4,300 கிலோமீட்டர். சீனாவில் இது இரண்டாவது நீளமான ஆறு. இதனைவிட யாங்ட்ஸீ அதிக நீளமானது. அது சுமார் 5,100 கிலோமீட்டர் நீளமுள்ளது.

ஹுவாங் ஹோ என்றால் சீனமொழியில் மஞ்சள் ஆறு என்று பொருள். இது வெள்ளப்பெருக்கு எடுத்து ஓடும்போது மஞ்சள் நிற மண்ணை அடித்துச் செல்வதால் மஞ்சள் நிறமாக இருக்கும். அதனால் இப்பெயர் ஏற்பட்டது. இந்த ஆற்றைச் 'சீனாவின் துயரம்' (China's Sorrow) என்றும் சொல்வார்கள். ஏனெனில் இந்த ஆற்றில் அவ்வப்போது ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள்.

இந்த ஆறு, திபெத்தின் வடகிழக்குப் பகுதியில் உற்பத்தியாகி, கிழக்கு நோக்கிப் பாய்ந்து, 'போ ஹை' (Po Hai) என்ற வளைகுடாவில் கலக்கிறது. ஆறு அடித்துச் செல்லும் மஞ்சள் மண் அதிக அளவில் படிவதால், ஆற்றின் படுகை உயர்ந்து, ஆறு ஆழமற்றதாகிவிடுகிறது. அதனால் இது கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை. ஆற்றின் படுகை உயர்வதால் மற்றொரு பெரிய தீமையும் ஏற்படுகிறது. அதாவது, வெள்ளம் ஏற்படும்போது, ஆறு தன் போக்கை அடிக்கடி மாற்றிக் கொள்கிறது.

ஹுவாங் ஹோ ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகளில் மிக மோசமானது 1887-ல் ஏற்பட்டதாகும். அப்போது சுமார் 10 லட்சம் மக்கள் இறந்துவிட்டனர். வெள்ளத்தின் கொடுமையைத் தடுக்க ஆற்றின் இருபுறங்களிலும் உயரமான கரைகள் எழுப்பியிருக்கின்றனர் என்றாலும் வெள்ளப்பெருக்கை முற்றிலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

முன்பு இந்த ஆறு ஷான்டங் தீபகற்பத்திற்குத் தெற்கே மஞ்சள் கடலில் கலந்துகொண்டிருந்தது. 1852-ல் இது தன் போக்கை மாற்றிக்கொண்டு, 400 கிலோமீட்டருக்கு அப்பால், தீபகற்பத்திற்கு வடக்கே, போ ஹை வளைகுடாவில் கலக்கத் தொடங்கியது. 1938 ஆம் ஆண்டில் சீனாவுக்கும் ஜப்பானுக்குமிடையே போர் நடந்தபோது, கைபேங் என்னும் நகருக்கு அருகில் இந்த ஆற்றின் கரையைச் சீனர் வெட்டி, முன்னேறிக் கொண்டிருந்த ஜப்பானியர்களை நோக்கித் திருப்பிவிட்டனர். இந்த ஆற்றின் வெள்ளத்தைக் கடந்து ஜப்பானியர்களால் முன்னேற முடியவில்லை. இவ்விதம் கரையை வெட்டிவிட்டதால் ஆறு மீண்டும் ஷான்டங் தீபகற்பத்திற்கு தெற்கே மஞ்சள் கடலில் கலந்தது.

இரண்டாம் உலக யுத்தம் முடிந்தபின் 1947-ல் ஆற்றின் கரையைச் சீனர்கள் மீண்டும் எழுப்பினர். இப்போது ஆறு மறுபடியும் 'போ ஹை' வளைகுடாவின் கலக்கிறது.

**ஹூக்ளி ஆறு:** கங்கை ஆறு கடலில் கலக்கும் முன்பு பல கிளையாறுகளாகப் பிரிகிறது. இக்கிளையாறுகளுள் ஒன்று ஹூக்ளி. இது மேற்குக் கோடியிலுள்ள கிளை. மற்ற கிளையாறுகளைவிட இதுவே முக்கியமானதாக விளங்குகிறது.

சாந்திப்பூர் என்னுமிடத்தில் கங்கை ஆற்றிலிருந்து ஹூக்ளி பிரிகிறது. அந்த இடத்திலிருந்து, இந்த ஆறு வங்காள விரிகுடாவில் கலக்குமிடம் வரை இதன் நீளம் 190 கிலோமீட்டர். ஹூக்ளி ஆற்றின் கரையில்தான் கல்கத்தா (த.க.) நகரம் அமைந்துள்ளது. கல்கத்தா நகரம் கடலிலிருந்து 130 கிலோமீட்டர் தொலைவில் நாட்டினுள்ளே இருந்தாலும் அது ஒரு பெரிய துறைமுகமாக விளங்குவதற்கு ஹூக்ளி ஆறுதான் உதவுகிறது. ஹூக்ளி மிக ஆழமாக இருப்பதால் மிகப் பெரிய கப்பல்களும் இதன் வழியே செல்லலாம். ஆற்றின் படுகையில் படியும் வண்டல் மண்ணை அவ்வப்போது அகற்றிவிடுவர். இதன் முகத்துவாரம் 16 கிலோமீட்டர் அகலமானது. பெரிய கப்பல்கள் மட்டுமின்றி, விறகு, சணல், வைக்கோல் முதலியவற்றை ஏற்றிச் செல்லும் சிறு படகுகளையும் மீன்பிடிக்கச் செல்லும் பலவிதமான படகுகளையும் ஹூக்ளியில் பார்க்கலாம்.

கல்கத்தாவின் ஒரு பகுதி ஹௌரா. இது ஹூக்ளி ஆற்றின் மேற்குக் கரையிலிருக்கிறது. ஹௌராவையும் கிழக்குக் கரையிலுள்ள கல்கத்தாவையும் ஒரு பெரிய பாலம்

இணைக்கிறது. இதற்கு ஹௌரா பாலம் என்று பெயர். இதன் நீளம் 455 மீட்டர். இதுவே இந்தியாவின் மிகப் பெரிய பால மாகும். இந்தப் பாலத்தின் அடியில் கப்பல் கள் செல்லலாம்.

போக்குவரத்துக்கு மட்டுமின்றி பயிர்த் தொழிலுக்கும் ஹூக்ளி உதவுகிறது. ஹூக் ளியும் கங்கையின் மற்ற கிளையாறுகளும் கொண்டுவரும் வண்டல்மண் படிந்திருப்ப தால்தான் கங்கைக் கழிமுகத் தீவு மிகச் செழிப்பானதாக இருக்கிறது.

**ஹெக்ட்டர்:** பண்டைய கிரேக்கக் கவிஞர் ஹோமரின் 'இலியாது' காவியத்தில் காணப்பெறும் ஒரு சிறந்த வீரன். இவன் டிராய் நாட்டுமன்னரான பிரியம் என்பவ னின் மகன்; பாரிஸ் என்பவனுக்கும் தமை யன். இவனே டுரோஜர்களுக்கும் கிரேக் கர்களுக்கும் நடந்த போரில் டுரோஜர் களுடைய தலைமைத் தளபதியாக இருந் தான். போரின் கடைசி ஆண்டில் கிரேக்கர் களைத் தம் கப்பல்களை நாடி ஓடுமாறு துரத்தினான். அக்கில்லஸ் (த.க.) என்ற கிரேக்க வீரனுடைய நண்பனாகிய 'பெட்ராக்ளஸ்' என்பவனைக் கொன் றான். இதற்குப் பழிவாங்க அக்கில்லஸ் ஹெக்ட்டரை எதிர்த்துத் தன் ஈட்டியால் குத்தி ஹெக்ட்டரின் உடலை தன் தேரில் கட்டி இழுக்கச் செய்தான். பிறகு ஜூஸ் (Zeus) என்ற கடவுளின் ஆணையின் பேரில் ஹெக்ட்டரின் பிரேதம் பணம் வாங்கிக் கொண்டு அவனுடைய தந்தை யிடம் தரப்பெற்று முறைப்படி புதைக்கப் பட்டது.

**ஹெர்க்குலீஸ்** (Hercules): இது ஒரு நட்சத்திரக் கூட்டம். வானத்தின் வடபகுதி யில் சுவாதிக்கு அருகில் காணப்படுகிறது. ஹெர்க்குலீஸ் என்ற கிரேக்க வீரன் முழங் கால் பணியிடுவதுபோல தோன்றுவதால் இந்த நட்சத்திரக் கூட்டம் இப்பெயர் பெற்றது. இவற்றுள் மிகவும் அதிகமான ஒளியுடையது ராஸ் ஆல்கெதி (Ras Algethi) என்பது. இது ஒரு இரட்டை நட்சத்திரம் (Binary Star). டெலஸ்கோப்பின் மூலம் நோக்கினால் ஒன்று பச்சையாகவும் மற் றொன்று ஆரஞ்சு நிறமாகவும் காணப் படும். ஒளிமாறும் நட்சத்திரங்களுள் ராஸ் ஆல்கெதியும் ஒன்று. சூரியனும் அதன் கிர கங்களும் ஹெர்க்குலீஸ் என்பதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன.

**ஹெலிக்காப்ட்டர்** (Helicopter): விமான வகைகளில் ஒன்று ஹெலிக்காப்ட்டர். இது தரையிலிருந்து நேராக மேலே கிளம்பவும், மேலிருந்து நேராகத் தரையில் இறங்கவும், நேராக முன்னோக்கியும் பின்னோக்கியும், பக்க வாட்டில் பறக்கவும், ஆகாயத்தில் நிலையாக நிற்கவும் வல்லது.

விமானத்திற்கு உள்ளதுபோன்ற இறக் கைகள் ஹெலிக்காப்ட்டருக்கு இல்லை. இதன் உச்சியில் பெரிய செலுத்தி (Propeller) நீண்ட, குறுகலான அலகு களுடன் கிடைமட்டத்தில் பொருத்தப்பட்டி ருக்கும். இது சுழலி (Rotor) எனப்படும். பொதுவாக இந்தச் சுழலியிலுள்ள அலகு கள் இரண்டு, மூன்று அல்லது நான்கு ஆக இருக்கும். இவை உச்சியில் வெளிப்பக்க மாக வளைந்திருக்கும். சுழலி வேகமாகச் சுழலும்போது, காற்று உச்சியின்மீது விரை வாக வீசும். அதன் காரணமாக உச்சியில் அழுத்தம் குறையும். அடியிலுள்ள காற்றின் அழுத்தம் அதிகமாக இருப்பதனால், ஹெலிக்காப்ட்டர் மேலே எழுகின்றது. அலகுகளைத் திருப்புவதன் மூலம், ஹெலிக் காப்ட்டரை வேண்டிய திசையில் பறக்கு மாறு செய்யலாம்.

ஹெலிக்காப்ட்டரின் சுழலி வேகமாகச் சுற்றுகிறது; இதன் விளைவாக சுழலி சுற்றும் திசைக்கு எதிர்த்திசையில் ஹெலிக் காப்ட்டரும் சுற்றக்கூடும். இதைத் தவிர்க்க ஹெலிக்காப்ட்டர்களில் இரண்டு சுழலி களை அமைத்து, அவற்றை எதிரெதிர் திசை களில் சுற்றும்படிச் செய்கிறார்கள். வேறு விதமாகவும் அமைப்பதுண்டு, உச்சியி

**இந்திய விமானப் படையைச் சேர்ந்த 'சிக்கார்ஸ்க்' ஹெலிக்காப்ட்டர்**



லுள்ள பெரிய சுழலித் தவிர, வால்பகுதியில் ஒரு பக்கத்தில் ஒரு சிறு சுழலியையும் அமைக்கிறார்கள். இதற்கு வால்சுழலி (Tail Rotor) என்று பெயர். இது பெரிய சுழலியைப்போல் கிடைமட்டமாக இல்லாமல், செங்குத்தான நிலையில் பொருத்தப்பட்டிருக்கும். எந்தத் திசையில் ஹெலிக்காப்ட்டர் சுற்றக்கூடுமோ அதற்கு எதிராகச் செயல்படும் வகையில் இது வால்முனையில் ஒரு பக்கத்தில்மட்டும் இருக்கும். சுழலி சுற்றுவதால் ஹெலிக்காப்ட்டரும் எதிர்த் திசையில் சுற்றாமல் இருக்கச் செய்வது வால்சுழலி; எனவே, தேவைப்பட்டால் இதைக் கொண்டே ஹெலிக்காப்ட்டரை ஒரே இடத்தில் சுற்றிக்கொண்டிருக்கவும் செய்ய முடியும். விமானங்கள், முன்னோக்கிச் செல்வதன் மூலமே மேலே எழுகின்றன. ஹெலிக்காப்ட்டர், சுழலி சுழல்வதனாலேயே மேலே எழுகின்றன. ஹெலிக்காப்ட்டர் வானத்தில் அசையாது நிற்கும்போது, சுழலி மேலே தூக்கும் சக்தியும், பூமி கீழ் இழுக்கும் சக்தியும் சமமாக இருக்கும். சுழலியின் வேகத்தைச் சிறிது குறைத்தால் ஹெலிக்காப்ட்டர் மெதுவாகப் பூமியில் இறங்கும்.

இத்தாலியைச் சேர்ந்த அறிஞர் லியனார்டோ-டா-வீன்சி (த.க.) என்பவர் 1500 ஆம் ஆண்டு அளவில் ஒருவகை ஹெலிக்காப்ட்டர் செய்தார். ஆனால், அப்பொழுது எஞ்சின் உருவாக்கப்படவில்லையாதலால், அது பயன்படவில்லை. 1910-ல் ஈகாரி சிக்கார்ஸ்கி (Igor Sikorsky) என்னும் ரஷ்யரும், பிறகு லூயி சார்லஸ் பிரெகுவே (Louis Charles Breguet) என்னும் பிரெஞ்சுக்காரரும் பிறரும் பல வகை ஹெலிக்காப்ட்டர்களை உருவாக்கினர். 1938-40 ஆம் ஆண்டு அளவில் தான் நன்கு பயன்படக்கூடிய ஹெலிக்காப்ட்டர் உருவாக்கப்பட்டது. தேவைகளுக்கு ஏற்பப் பலவகையான ஹெலிக்காப்ட்டர்கள் இன்று தயாரிக்கப்படுகின்றன.

ஹெலிக்காப்ட்டர்கள் விலை மிகுந்தவை. இவற்றுக்கு ஆகும் எரிபொருள் செலவும் மிக அதிகம். இவற்றின் வேகம் விமானங்களைவிட மிகக் குறைவு. மணிக்குச் சுமார் 150 கிலோமீட்டர் வேகத்தில் இவை பறக்கும்.

ஹெலிக்காப்ட்டர்கள் மேலே கிளம்பவும், கீழே இறங்கவும் ஒரு சிறு இடம் போதும். விமானங்களுக்குத் தேவைப்படுவதுபோல இதற்கு நீண்ட ஓடு பாதைகள் தேவையில்லை. ஹெலிக்காப்ட்டர்கள் எல்லா இடங்களுக்கும் செல்லமுடியும். மலைகள், கடல் பகுதிகள், தீவுகள் மற்றும் வெள்ளம், நில நடுக்கம் முதலியவற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகள் போன்ற, விமானம் செல்லமுடியாத இடங்களுக்கெல்லாம் இவை செல்கின்றன. மேலும் இவற்றால் வானத்தில் ஓரிடத்தில் அசையாமல் இருக்கவும் முடியும். போரில் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லவும், படைகளுக்கு உணவுப்பொருள்களை வழங்கவும், செய்திகளை அனுப்பவும் ஹெலிக்காப்ட்டர்கள் பயன்படுகின்றன. ஜீப், டாங்கி முதலியவற்றைத் தூக்கிச் செல்லவும் ஹெலிக்காப்ட்டர் உதவுகிறது. சமாதான காலத்தில் அஞ்சல்களைக் கொண்டுசெல்லவும், வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கவும், பயிர்கள்மீது பூச்சி மருந்துகளைத் தெளிக்கவும் சிறு தொலைவு பயணம் செய்வதற்கும் பயன்படுகின்றன.

**ஹேக்** (The Hague): நெதர்லாந்து (த.க.) நாட்டின் முக்கிய நகரங்களுள் ஒன்று ஹேக். இந்நாட்டின் தலைநகரம் ஆம்ஸ்ட்டர்டாம் என்றாலும் அரசாங்கத் தலைமை அலுவலகங்கள் யாவும் ஹேக் நகரிலேயே உள்ளன. ஐரோப்பிய வரலாற்றில், பல உடன்படிக்கைகள் கையெழுத்தான இடம் என்ற பெருமை இதற்கு உண்டு. இன்று சர்வதேச நீதிமன்றத்தின் இருப்பிடமாகவும் இந்நகரம் உள்ளது.

நெதர்லாந்து நாட்டின் தென்மேற்குக் கரையில் உள்ளது இந்நகரம். வரலாற்றுப் புகழ்பெற்ற பல கட்டடங்களும் அரண்மனைகளும் கலைக்கூடங்களும் இங்கு உள்ளன. நகரின் மக்கள்தொகை சுமார் 7½ லட்சம். பெரும்பாலும் அரசாங்க ஊழியர்களும் வசதிபெற்ற செல்வர்களுமே

ஹேக்கிலுள்ள சமாதான அரண்மனை



வாழ்ந்து வருவதால் இங்குப் பெரிய தொழிற்சாலைகள் எதுவும் இல்லை. அச்சுத்தொழில், நூல் வெளியிடுதல், மேசை நாற்காலி போன்ற மரச்சாமான்கள் செய்தல், தொப்பி, ஆடை உற்பத்தி, தங்கம்-வெள்ளிப் பாத்திரங்கள், பீங்கான் பொருள்கள் செய்தல் முதலிய தொழில்களே இங்கு நடைபெறுகின்றன.

இந்நகருக்கு வடமேற்கில் ஸ்க்கேவெனிங்கென் (Scheveningen) என்று ஒரு சுகவாசத் தலம் உள்ளது.

ஹேக் நகரம் 13ஆம் நூற்றாண்டில் உருவாகியது. அக்காலப் பிரபுக்கள் இங்கிருந்த காட்டில் வேட்டையாடுவது வழக்கம். டச்சு மொழியில் 'கிரேவன் ஹேக்' என்றால் 'பிரபுக்கள் வேட்டையாடும் இடம்' என்று பொருள். அதுவே பின்னர் இந்நகருக்குப் பெயராக அமைந்தது. வேட்டையாடும் போது தங்குவதற்காக, வில்லியம் என்ற பிரபு இங்கு ஒரு மாளிகை கட்டினார். நிரந்தரமாகத் தங்குவதற்காக ஓர் அரண்மனையும் கட்டினார். இவற்றைச் சுற்றி ஒரு கிராமம் வளரலாயிற்று.

பின்னர் அரசரும் இந்நகரையே தம் இருப்பிடமாகக் கொண்டார். 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நாடாளுமன்றமும் இங்கு கூடத் தொடங்கியது. இவ்வாறு இது தலைநகராக மாறியது. சமாதான உடன்படிக்கைகள் கையெழுத்தாகும் இடமாகவும் இது விளங்கிவந்தது.

உலகில் போர் மூளாமல் தடுக்கும் பொருட்டு இங்கு 1899, 1907 ஆகிய ஆண்டுகளில் சமாதான மாநாடுகள் நடைபெற்றன. 1907 ஆம் ஆண்டு நடந்த மாநாட்டில் 44 நாடுகள் கலந்துகொண்டு, போர் ஏற்படாமல் தடுக்கவும், போர் ஏற்பட்டால் நாடுகள் பின்பற்றவேண்டிய விதிகளையும் வகுத்தன. அப்பொழுது ஒரு சர்வதேச நீதி மன்றமும் (International Court of Justice) அமைக்கப்பட்டது. இந் நீதிமன்றத்தைக் கட்டுவதற்கு எல்லா நாடுகளும் உதவி புரிந்தன. 'சமாதான அரண்மனை' (Peace Palace) என்று இதற்குப் பெயர். ஐக்கிய நாடுகள் சபையின் (த.க.) ஓர் அங்கமாக இது இப்போது பணியாற்றி வருகிறது.

**ஹைடிரஜன் :** காற்றடைத்த பலூன்களைக் கையினால் தட்டித் தட்டி விளையாடுகிறீர்கள். ஆனால் சிலவகை பலூன்களைக் காற்றில் விட்டுவிட்டால் அவை மேல் நோக்கிச் செல்லும். இதற்குக் காரணம் அந்த பலூன்களில் காற்றைவிட இலேசான ஒரு வாயு நிரப்பப்பட்டிருப்பதுதான். அப்படி நிரப்பப்படும் வாயுக்களில் ஒன்று ஹைடிரஜன். ஹைடிரஜன், வாயுநிலையிலுள்ள முக்கியத் தனிமம் (த.க.) ஆகும்.

காற்று, ஹைடிரஜனைப்போல சுமார் 14½ மடங்கு எடையுள்ளது. வாயுக்களில் ஹைடிரஜன்தான் மிகக் குறைந்த எடையுள்ளது. இது பெரும்பாலும் இயற்கையில் தனியே காணப்படுவதில்லை. ஆனால் சூரியனின் வாயுமண்டலப் பகுதியில் பெருமளவு ஹைடிரஜன் உள்ளது. நீர், தாவரங்கள், காகிதம், மரம் (Wood), உணவுப் பொருள்கள், நிலக்கரி, எண்ணெய் வகைகள், அமிலங்கள், பெரும்பாலான இரசாயனப் பொருள்கள் இவற்றிலெல்லாம் ஹைடிரஜன் உள்ளது.

ஹைடிரஜன் வாயுவுக்குச் சுவை, மணம், நிறம் எதுவும் கிடையாது. பிற பொருள்கள் எரிவதற்கு ஹைடிரஜன் துணை செய்யாது. ஆனால் இது நிறமற்ற சுடருடன் எரியும். எரியும்போது மிக அதிகமான வெப்பம் உண்டாகும். ஹைடிரஜன் ஆக்சிஜனுடன் சேர்ந்து நீராகும். இந்த இரண்டு வாயுக்கள் அடங்கிய கலவையில் ஒரு தீப்பொறியை உண்டாக்கினால் பெரும் ஓசை உண்டாகி நீர்த் துளிகள் உருவாகும்.

ஹைடிரஜன் மற்றத் தனிமங்களுடன் கூடும்போது கூட்டுப் பொருள்கள் (த.க.) உண்டாகின்றன. முக்கியமாக உலோகமல்லாத பொருள்களுடன் ஹைடிரஜன் இவ்வாறு கூடுகிறது. ஒரு கூட்டுப்பொருளிலுள்ள பெருமளவு ஆக்சிஜனை நீக்கும் பொருளுக்குக் குறைப்பான் (Reducing Agent) என்று பெயர். ஹைடிரஜன் மிகச் சிறந்த குறைப்பானாகும். சூடுபடுத்திய தாமிர ஆக்சைடுமீது ஹைடிரஜனைச் செலுத்தினால், தாமிர ஆக்சைடிலிருந்து ஆக்சிஜன் பிரிந்து தாமிரம் எஞ்சி நிற்கும்.

ஹைடிரஜன் வாயுவைப் பல வழிகளில் தயாரிக்கலாம். நீர் என்பது ஹைடிரஜனும் ஆக்சிஜனும் சேர்ந்த கூட்டுப் பொருள் அல்லவா? இந்த நீரை மின்பகுப்பு (த.க.) மூலம் பிரித்து, ஹைடிரஜனையும் ஆக்சிஜனையும் தனித்தனியே பெறலாம். சோதனைச்சாலைகளில் மற்றொரு முறை கையாளப்படுகிறது. துத்தநாகத்தையும் கந்தக அமிலத்தையும் வினைப்படுத்தினால் ஹைடிரஜன் வாயு உண்டாகும்.

ஹைடிரஜனின் பயன்கள் பல. பலூனைப் பற்றிச் சொன்னோம் அல்லவா? மிகப் பெரிய பலூன்களைச் செய்து, அவற்றில் ஹைடிரஜன் வாயுவை நிரப்பி,

1. முன்பு ஆகாயக் கப்பல்களில் ஹைடிரஜன் வாயு பயன்பட்டு வந்தது.
2. பற்றவைக்கும் தொழிலில் ஆக்சி-ஹைடிரஜன் சுவாலை பயன் படுகிறது.



ஹைடிரஜன் வாயு

வானிலை ஆராய்ச்சிக்கான கருவிகளை அவற்றுடன் இணைத்து வானத்தில் விட்டு, வான மண்டலத்தைப் பற்றிய ஆராய்ச்சி நடத்துகிருர்கள். விமானம் அமைக்கப்படுவ தற்கு முன் ஆகாயக் கப்பல்கள் (த.க.) பயன்பட்டு வந்தன. இவை ஹைடிரஜன் வாயு நிரப்பப்பட்ட மிகப் பெரிய பலூன் களே. ஆனால் இவை யாவும் ரப்பர் பலூன் கள் அல்ல. இலேசான அலுமினியத் தகடு, அலுமினியம் அடங்கிய உலோகக் கலவை போன்றவற்றால் செய்யப்பட்டவை இவை.

எரியும்போது அதிக வெப்பத்தைக் கொடுக்கக்கூடியதாகையால் உருக்கு வேலை, பற்றவைக்கும் தொழில் (Welding) இவற்றில் ஹைடிரஜன் உதவுகிறது. ஆக்சி-ஹைடிரஜன் சுவாலை இந்தப் பணிக்குப் பயன்படுகிறது.

ஹைடிரஜனை மற்ற பொருள்களுடன் சேர்ப்பது ஹைடிரஜனேற்றம் எனப்படும். நிலக்கரியை திரவ எரிபொருளாக மாற்ற வும், திரவநிலையிலுள்ள கொழுப்புப் பொருளைக் கட்டியாக ஆக்கவும் இது உதவுகிறது. வனஸ்பதி என்பது ஹைடிரஜ னேற்றிய எண்ணெயேயாகும்.

**ஹைடிரஜன் பராக்சைடு** (Hydrogen Peroxide)-: $H_2O_2$ இது ஹைடிரஜனும் ஆக்சிஜனும் சேர்ந்த ஒரு சேர்மம் (Compound). தண்ணீரில் இருப்பதுபோல இருமடங்கு ஆக்சிஜன் இதில் இருக்கிறது. 1818-ல் டேனார் (Thenard) என்பவரால் முதன் முதல் கண்டுபிடிக்கப்பட்டது.

நைட்ரிக் அமிலத்தை ஒத்த மணமுடைய பாகுபோன்ற நிறமற்ற திரவம். 20 செ.மீ. அழுத்த நிலையில் கொதிநிலை சுமார் 60°. ஒப்பு அடர்த்தி 1.458. இது எளிதில் தண்ணீராகவும் ஆக்சிஜனாகவும் பிரியும். ஆல்கஹால், கிளிசரின் முதலிய திரவப் பொருள்கள் இதைச் சிதையாமல் காக்கும்.

இது சோடியம் பராக்சைடிலிருந்து தயாரிக்கப்படுகிறது. பனிக்கட்டியில் குளிர் விக்கப்பட்ட 20% கந்தக அமிலத்துடன் வேண்டிய அளவு சோடியம் பராக்சைடை சேர்த்துப் பெற்ற ஹைடிரஜன் பராக்சைடு கரைசல் சுண்டவைக்கப்பட்டு 30% செறி வுள்ள கரைசலாக விற்கப்படுகிறது.

ஹைடிரஜன் பராக்சைடு பிரியும்போது உண்டாகும் ஆக்சிஜன் இதை ஒரு சிறந்த ஆக்சிகரணியாக செயல்படச் செய்கிறது. புண்களில் உண்டாகும் கிருமிகள் இதனால் கொல்லப்படுகின்றன. புண்களைக் கழுவ வும் காது, பல் முதலியவற்றைச் சுத்தி செய்யவும், கறுத்துப்போன எண்ணெய் வர்ணப்படங்களைப் புதுப்பிக்கவும், வெண்கலச்சிலைகளைப் புதுப்பிக்கவும், மயிர், தந்தம் முதலயனவைகளை வெளுக் கவும் ஹைடிரஜன் பராக்சைடு பயன்படு கிறது.

**ஹோமர்** : இராமாயணம், மகாபாரதம் என்னும் காப்பியங்களை நீங்கள் எல்லோ ரும் அறிவீர்கள். இவைபோன்று கிரேக்க நாட்டிலும் இரண்டு பெரிய காப்பியங்கள் உண்டு. அவை இலியடு (த.க.), ஆடிசி (த.க.) என்பன. இவ்விரு காப்பியங்களை யும் இயற்றியவர் ஹோமர்.

ஹோமருடைய வாழ்க்கை பற்றிய விவ ரங்கள் சரியாகத் தெரியவில்லை. இவர்

கி.மு. 10 ஆம் நூற்றாண்டுக்கும் கி.மு. 8 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கலாம் எனக் கருதப் படுகிறது. இவர் பிறந்த இடமாகப் பல ஊர் களைக் கூறுகின்றனர்.

ஹோமர் கண்பார்வையற்றவராயிருந் தார் என்றும், இவர் அரசவைகளில் தம் கவிதைகளைப் பாடிப் பரிசுபெற்று வாழ்க் கை நடத்தினார் என்றும் சிலர் கூறுவர். ஆனால் இவர் குருடராயிருந்தார் என்ப தற்குச் சான்றுகளில்லை. மேலும், இவரு டைய காப்பியங்களில் காணப்படும் இயற்கை வருணனைகள் உலகைக் கூர்ந்து நோக்கி எழுதியனவாகத் தோன்றுகின்றன.

ஹோமர் காலத்தில் எழுத்துக்கள் தோன்றவில்லை. எழுதினால் அன்றி இத்த கைய பெரிய காப்பியங்களை இயற்ற இய லாது; எனவே இலியடும், ஆடிசியும் ஹோமர் இயற்றியன அல்ல' என்பது ஒரு சிலர் கருத்து. இக்கருத்தை இன்னொரு சாரார் மறுக்கின்றனர். 'ஹோமர் காலத் திற்கு முன்பே எழுதக் கற்றிருந்தார்கள்; எழுதத் தெரியாதவராயினும் நீண்ட காவி யங்களை இயற்றி மனப்பாடம் செய்யும் ஆற்றல் உடையவர்கள் இருந்தார்கள்; இவ் விரண்டு காப்பியங்களும் ஹோமர் இயற்றி யனவே' என்று அவர்கள் கூறுகிறார்கள். இக்கருத்தையே இன்று எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

கி.மு. 6 ஆம் நூற்றாண்டு முதல் ஹோமரு டைய காப்பியங்கள் கிரீஸ் நாட்டில் புகழ் பெற்று விளங்கின. அலெக்சாந்தர் (த.க.) இக்காவியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண் டிருந்தார். ஹோமரின் நடையைத் தழுவி 'வர்ஜில்' (Virgil) போன்ற புகழ்பெற்ற கவிஞர்கள் காவியங்கள் இயற்றலானார் கள்.

பண்டைக் கிரேக்கர்களுடைய வரலாற் றின் பெரும்பகுதியை அறிய ஹோமருடைய காவியங்கள் துணைசெய்கின்றன. பெரும் பாலான உலகமொழிகளில் இவரது காவி யங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**ஹோவர்கிராப்ட்** (Hovercraft): தரை மட்டத்திலோ, நீர்மட்டத்திலோ அதன் பரப்பிற்கு மேலே சற்று உயரத்தில் அந்தர நிலையில் செல்லக் கூடிய ஒரு போக்கு வரத்து சாதனம் ஹோவர்கிராப்ட்.

ஹோவர்கிராப்ட் முற்றிலும் காற்றி லேயே மிதந்து செல்லக்கூடியது; அந்த வகையில் இது விமானத்தைப் போன்றது. இது தளப்பரப்பிலிருந்து செங்குத்தாக



ஹோவர் கிராப்ட்

மேலே எழும்பவல்லது; அதனால் ஹெலிக் காப்ட்டரைப் போன்றது. நீரிலும் செல்லக் கூடியதாகையால் கப்பல் போன்றதுமாகும். இவ்வாறு விமானம், ஹெலிக்காப்ட்டர், கப்பல் ஆகிய மூன்றின் அமைப்புகளையும் உடையதாக ஹோவர்கிராப்ட் விளங்கு கிறது.

ஹோவர்கிராப்ட்டின் உடல்பகுதி, படகு வடிவத்தில் அமைந்திருக்கும். உடலின் அடிப்பகுதி தட்டையாக இருக்கும். ஹோவர்கிராப்ட்டின் மேல்பகுதியில் சக்தி வாய்ந்த விசிறி ஒன்று வேகமாகச் சுற்றிக் கொண்டிருக்கும். இதன் சுழற்சியினால், காற்று மேலிருந்து கீழாக வீசும். இதன் காரணமாக ஹோவர்கிராப்ட்டின் அடிப் பகுதிக்கும், தளப்பரப்பிற்கும் இடையிலான காற்று வெளியேறிவிடாமல் தடுக்கப்பட்டு, ஹோவர்கிராப்ட்டை அந்தரத்தில் தாங்கும் திண்டுபோல் (Air Cushion) அமைகின்றது. இவ்வாறு தாங்கப்படும் ஹோவர்கிராப்ட் டில், விமானத்தில் உள்ளதுபோல ஒன்று அல்லது இரண்டு செலுத்திகள் (Propellers) இருக்கும். இந்தச் செலுத்திகள் சுழன்று, ஹோவர்கிராப்ட்டை முன்னோக்கித் தள்ளும்.

ஹோவர்கிராப்ட்டைக் கண்டுபிடித்தவர் கிறிஸ்டோபர் காக்கரல் (Christopher Cockerell) என்னும் பிரிட்டிஷ் பொறியியல் வல்லுநராவார். இவர் படகுகள் கட்டுவதில் ஈடுபட்டிருந்தார். நீரில் செல்லும்பொழுது படகுகளின் உராய்வைக் (த.க.) குறைத்து, அதிக வேகமாகச் செல்வதற்குரிய வழியைக் காண்பதில் இவர் முனைந்தார். இதற்கு ஊர்தியின் உடல்பகுதி நீரில் படாமல் காற் றில் மிதந்து செல்லும்படி செய்வதே சிறந்த வழி எனக் கண்டார். தொடர்ந்து ஆராய் ச்சி செய்து, முதலாவது ஹோவர்கிராப்ட் டைத் தயாரித்து, 1959 ஜூன் 11-ல் அகை

இயக்கிக் காட்டினார். இது நீரின் பரப்பையோ, தரையின் பரப்பையோ தொடாமல், தளப் பரப்பிற்கு மேலே சிறிது உயரத்தில் அந்தரத்திலேயே பறந்து சென்றது. நீரில் மிதந்துகொண்டோ, தரையில் உருண்டுகொண்டோ செல்லும் ஊர்திகளை விட இது அதிக வேகத்தில் சென்றது. இதன்பின் மிகக் குறுகிய காலத்தில் ஹோவர்கிராப்ட் தயாரிக்கும் தொழில் முன்னேற்றமடைந்தது. இன்று பலவகையான ஹோவர்கிராப்டுகள் தயாரிக்கப்படுகின்றன.

கரடுமுரடான பகுதிகளிலும், பனி உறைந்த பகுதிகளிலும், சதுப்பு நிலங்களிலும், பாலைவனங்களிலும் போக்குவரத்துக்கு ஹோவர்கிராப்ட் பயன்படுகிறது. எண்ணெய் ஊற்றுகளைக் கண்டுபிடிக்கவும், வேளாண்மை விளைபொருள்களைப் பண்ணைகளிலிருந்து விற்பனை நிலையங்களுக்கு எடுத்துச் செல்லவும் ஹோவர்கிராப்ட் பயனாகிறது. தொழிற்சாலைகளில் கனமான எந்திர சாதனங்களை இடம்விட்டு இடம் கொண்டு செல்லவும், பாலங்கள் கட்டும்பொழுது பளுவான உத்திரங்களை அமைக்கவும் ஹோவர்கிராப்ட்டைப் பயன்படுத்துகிறார்கள். அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் ஏரிகளையும், ஆறுகளையும் கடக்கும் பயணிகளின் போக்குவரத்துக்கும் சரக்குகளைக் கொண்டுசெல்வதற்கும் ஹோவர்கிராப்ட் பயன்படுகிறது.

**ஹௌரா :** மேற்கு வங்காளத்தில் ஹூக்ளி ஆற்றின் கரையில் அமைந்துள்ள நகரம் ஹௌரா. கல்கத்தாவின் ஒரு பகுதியே எனினும் இது ஒரு தனி நகரமாகக் கருதப்படுகிறது.

ஹௌராவையும் ஹூக்ளியின் கிழக்குக் கரையிலுள்ள கல்கத்தாவையும் ஒரு பெரிய பாலம் இணைக்கிறது. இதற்கு ஹௌரா பாலம் என்று பெயர். இதன் நீளம் 455 மீட்டர். இந்தியாவிலே இதுதான் மிக நீளமான பாலம். மின்சார டிராம், மோட்டார் வண்டிகள் மட்டுமின்றி மாட்டுவண்டிகள் செல்வதற்கும்கூட இப்பாலத்தில் வழி அமைக்கப்பட்டுள்ளது. பாலத்திற்கு அடியில் கப்பல்கள் செல்லலாம். அவ்வளவு உயரமானது இந்தப் பாலம்! இப்பாலம் கட்டும் வேலை 1936-ல் தொடங்கியது. கட்டிமுடிப்பதற்கு ஏழு ஆண்டுகளாயின. சுமார் 3.3 கோடி ரூபாய் செலவாயிற்று.

பல ரெயில்பாதைகள் இணையும் இடமாக ஹௌரா உள்ளது. இங்கு தொழிற்சாலைகள் அதிகம். சணல் தொழிற்சாலைகளின் மையமாக இது விளங்குகிறது. நெசவாலைகளும் காகித ஆலைகளும் எந்திர உற்பத்தித் தொழிற்சாலைகளும் பல உள்ளன.

கிழக்கிந்தியக் கம்பெனியாரால் 1787-ல் இங்கு அமைக்கப்பட்ட தாவரத் தோட்டம் மிகுந்த புகழ்பெற்றது. உலகிலுள்ள பல்வேறு வகையான தாவர இனங்களும் இங்கு வளர்க்கப்படுகின்றன. தாவர நூல் பயிலும் ஆராய்ச்சியாளர்களுக்கு இத்தோட்டம் பெரிதும் உதவியாக உள்ளது. இங்கு மிகப் பெரிய ஆலமரம் ஒன்று இருக்கிறது. இது 200 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி வளர்ந்ததாகும்.

ஹௌரா பாலம்



# குழந்தைகள் கலைக்களஞ்சியம்

## பொருட் குறிப்பு அகராதி

குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் 10 தொகுதிகளிலும் எத்தனையோ பொருள்களைப் பற்றித் தனிக் கட்டுரைகள் உள்ளன. இன்னும் ஏராளமான பொருள்களைப் பற்றிய குறிப்புகளும் அவற்றில் அடங்கியிருக்கின்றன. இவற்றைப் பற்றியெல்லாம் எளிதில் தெரிந்துகொள்வது எப்படி? அகர வரிசையில் அமைந்துள்ள இந்தப் பொருட்குறிப்பு அகராதி அதற்குப் பயன் படும். இதைப் பயன்படுத்துவது எப்படி என்பதை இங்கு விளக்கியிருக் கிறோம்.

1. பொருட்குறிப்பு அகராதியில் ஒரு சொல் தடித்த எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்தால் அதுபற்றித் தனிக்கட்டுரை உள்ளது என்று தெரிந்து கொள்ள வேண்டும். அதைத் தொடர்ந்து வரும் எண்கள், தொகுதியையும் பக்கத்தையும் குறிக்கும்.

எடுத்துக்காட்டு:

**உடல் 2-33**

உடல் 2-33 என்பது, இரண்டாம் தொகுதியில் 33 ஆம் பக்கத்தில் 'உடல்' பற்றித் தனிக் கட்டுரை உள்ளது என்பதைக் குறிக்கிறது. இதைப் போலவே பிறவற்றையும் கொள்ளவேண்டும்.

2. ஒரு பொருளுக்குத் தனிக் கட்டுரை இருந்தாலும், அதைப்பற்றி வேறு கட்டுரைகளிலும் சில விவரங்கள் இருக்கலாம். இதைக் குறிப்பதற்குக் கீழுள்ளவாறு அச்சிடப்பட்டிருக்கும்.

எடுத்துக்காட்டு:

**இராசராச சோழன் 2-10**
4-93; 5-16

இதன்படி, இராசராச சோழனைப் பற்றி இரண்டாம் தொகுதியில் 10 ஆம் பக்கத்தில் தனிக் கட்டுரை இருப்பதோடு, இராசராச சோழனைப் பற்றிய ஒரு சில குறிப்புகள், நான்காம் தொகுதியில் 93 ஆம் பக்கத்திலும், ஐந்தாம் தொகுதியில் 16 ஆம் பக்கத்திலும் இடம்பெற்றுள்ளன என்று கொள்ள வேண்டும்.

3. தனிக் கட்டுரைகள் சிலவற்றில் உள்தலைப்புகளும் இடம்பெற் றிருக்கக்கூடும். இந்த உள்தலைப்புகள், தடித்த எழுத்துக்களுக்குக் கீழே சிறிய எழுத்துக்களில் கொடுக்கப்பட்டிருக்கும்.

எடுத்துக்காட்டு:

**மூளை 8-48**
பெருமூளை-சிறுமூளை-முகுளம்

இங்கு, எட்டாம் தொகுதியில் 48 ஆம் பக்கத்திலுள்ள மூளை என்னும் தனிக் கட்டுரையில் பெருமுளை, சிறுமுளை, முகுளம் பற்றிய உள்தலைப்பு கள் உள்ளன என்று கொள்ளவேண்டும்.

4. ஒரு பொருளைப்பற்றித் தனிக் கட்டுரை இல்லாவிட்டாலும் அதைப் பற்றிய விவரங்கள் இக் கலைக்களஞ்சியத்தில் உள்ள கட்டுரைகளில் எங்காவது இடம்பெற்றிருக்கக்கூடும். அந்தப் பொருள்களும் சிறிய எழுத்து களில் தொகுதிபக்க எண்களுடன் அகர வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டு:

அகத்தியம் 2-19; 5-21

அகத்தியம் என்ற பொருளைப்பற்றித் தனிக்கட்டுரை இல்லை. எனினும் அதுபற்றிய குறிப்பை இரண்டாம் தொகுதியில் 19 ஆம் பக்கத்திலும், ஐந்தாம் தொகுதியில் 21 ஆம் பக்கத்திலும் காணலாம்.

5. இப்பொருட்குறிப்பு அகராதியில் படங்களும் சேர்க்கப்பட்டுள்ளதைக் காணலாம். இவை கட்டுரைகளில் இடம்பெறாதவையாகும். இப்படங்களைப் பற்றிய குறிப்புகள் எங்கு உள்ளன என்பதை இவை அச்சிடப்பட்டுள்ள பக்கங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

# பொருட் குறிப்பு அகராதி

## அ


அ 1-1
அக்காடமி 1-1
அக்கார்டியன் 1-1
அக்கி 1-2
அக்கில்லஸ் 1-2
அக்கினிப் பாறைகள் 6-87
அக்குன்காக்குவா 1-49
அக்டோபர் புரட்சி 1-2
அக்பர் 1-3
10-19
அக்யூமுலேட்டர் 1-3
அக்ரோப்பலிஸ் 6-75
அகத்தியக்கீரை 3-89
அகத்தியம் 2-19, 5-21
அகத்தியமாலை 5-34
அகநானூறு 1-4
அகப்பொருள் விளக்கம் 4-38
அகமத் நகர் 1-4
அகமதாபாத் 4-9
அகமென்னான் 1-4; 2-21
அகர்த்தலா 5-45
அகராதி 8-62
அகல்யாபாய் 3-23
அகவிதழ் 7-91
அகஸ்ட்டஸ் 3-59
அகஸ்ட்டஸ் சீசர் 1-5
அகாடிர் 6-11
அ கேட் 1-6
அங்கவடி 3-53
அங்காரர் 1-6
அங்கோலா 1-54
அச்சடித்தல் 1-6
லித்தோமுறை-மாற்று
அச்சடிப்பு-ஒளிச்செதுக்கு
முறை
அச்சலன் 3-60
அச்சு எந்திரம் 1-7; 7-12
அசாவ் கடல் 3-29
அசுகுணி 2-74


அசோக சக்கரம்




அசுவமேதா 1-8
அசெட்டிலீன் 1-8
அசெட்டேட் 1-9
அசெட்டோ பாக்டர் 1-9
அசெட்டோன் 1-9
அசோக சக்கரம் 4-17
அசோகர் 1-9; 7-61
அசோர்ஸ் 1-10
அஞ்சல் நிலையம் 1-10
அட்சரேகை 5-2; 63
அட்டகாமா பாலைவனம் 8-2
அட்டார்னி ஜெனரல் 1-11
அட்டிலா 1-11
அட்டை 1-12
அட்ரியாடிக் கடல் 1-12
அட்ரீனல் சுரப்பி 1-12
அட்லாண்டிக் சமுத்திரம் 1-13
அட்லாண்டிக் வால்ரஸ் 9-35
அடிச் அபாபா 1-14
அடிந்தாச்சதை 1-14
அடிப்படை உரிமைகள் 1-15;
10-8
அடிப்படை நிறங்கள் 6-12
அடிலேய்டு 1-15
அடினாய்டு 1-14
அடுக்கு வாயுமண்டலம் 9-32
அடைகாக்கும் பெட்டி 1-15
அடையாறு 4-85
அடையாறு ஆலமரம் 1-67
அண்டங்காக்கை 3-46
அண்டாச் சூளை 4-70
அண்ணம் 9-31
அணா 5-96
அணிகள் 1-16
அணில் 1-17
அணு 1-17
அணு அமைப்பு 2-58
அணு உலை 1-18
அணுகுண்டு 1-19; 2-49;
10-40
அணு சக்தி 1-19
அணைகரை 9-79
அணைகள் 1-19
அத்தர் 8-93; 10-5
அத்திப்பழம் 6-60
அத்துவைதம் 4-31; 5-19
அதர்வண வேதம் 4-38; 9-88
அதியமான் நெடுமாறன் அஞ்சி
2-96
அந்தமான் தீவுகள் 1-20
அந்துப்பூச்சி 7-29
அப்சல் கான் 4-62
அப்பர் 5-47
அப்பலேச்சியன் மலைகள் 1-21
அப்பாலோ 1-2; 4-36;
8-82; 9-51
அப்பிரகம் 1-21
அப்பினைன் மலை 1-78; 2-80
அபராசிதவர்மன் 6-56
அபிதம்மாவதாரம் 3-71
அபிதான கோசம் 3-37
அபிதான சிந்தாமணி 3-37
அபிநயம் 6-49
அபினி 5-81
அம்பர் இராட்டை3-17
அம்பலக்காடு 9-68
அம்பலம் 5-84
அம்பலவாணன் 5-84
அம்பாலிகை 9-52
அம்மீட்டர் 1-21
அம்மை 1-22; 6-37; 10-12
அம்மை குத்தல் 1-22
அம்மோனியம் ஹைடிராக்சைடு
1-24
அமர்நாத் 1-92; 10-5
அமராவதி (நகர்) 5-59
அமராவதி ஆறு 3-71
அமருகன் 4-38
அமாவாசை 4-36
அமிண்டிவிஸ் தீவு 1-87
அமிர்தசரஸ் 1-23; 1-92
அமிர்தமகால் மாடு 3-64
அமிலங்களும் காரங்களும் 1-23
அமீபா 1-24; 2-41; 7-17
அமெரிக்க இந்தியர்கள் 1-24
அமெரிக்க ஐக்கிய நாடுகள்
1-25; 4-18
அமெரிக்கஸ் வெஸ்ப்பூசியஸ்
1-26
அமெரிக்கா 1-26; 2-48; 49,
79; 10-7, 42
அமைச்சரவை ஆட்சி 1-29
அய்யம்பேட்டை 3-22
அயர்லாந்து 1-27; 4-18; 6-95
அயல்மகரந்தச் சேர்க்கை 7-64
அயனாஸ்பியர் 1-27
அயனி பரிமாற்ற பிசின் 3-9
அயோடின் 1-27
அயோடோபாரம் 1-28
அயோனின் தீவுகள் 2-80
அர்த்தசாஸ்திரம் 1-28
அர்த்தநாரீசுவரர் 4-62
அர்த்வர்க் 1-28
அரக்கு 1-29
அரங்கநாதர் 5-48
அரசாங்கம் 1-29
அரசியல் நிருணய சபை 1-84
அரசியலமைப்பு 10-8

அரணை 6-56
அரம் 3-32
அரரட் 6-38
அரவிந்தர் 1-30; 7-15
அரவிந்தாச்சிரம் 1-30
அராபிய ஒட்டகம் 2-86
அரிக்கமேடு 1-30; 7-15
அரிக்கேன் விளக்கு 9-65
அரிகேசரி 6-71
அரிசிலாறு 3-71
அரிதில் கடத்திகள் 8-23; 9-75
அரிமானம் 1-31
அரிஸ்டாட்டில் 1-31; 3-37;
5-18; 7-6
அருகன் கோயில் 2-23
அருச்சுனன் 7-65
அருச்சுனன் தவம் 8-8
அருட்பெருஞ்சோதி 2-13
அருண்மொழித்தேவர் 4-86
அருணகிரிநாதர் 1-95
அருணாசலக் கவிராயர்
5-21; 8-34
அருணாசல துதி 8-79
அருணாசலப் பிரதேசம் 10-19
அருந்ததி நட்சத்திரம் 5-82
அருவி 6-20
அருவையாறு 2-20
அருள்மொழி 2-10
அரேபியன் இரவுகள் 1-31
அரேபியா 1-32
அரோ மாட்டிக் 3-28
அரைக்கீரை 3-89
அரைத்தண்டு உயிரினங்கள் 8-37
அல்க்கேன்கள் 6-79
அல்சேஷியன் 6-1
அல்பாக்கா 7-51; 8-95
அல்லாகு 2-28
அல்லி 6-16; 7-92
அல்லி (அகவிதழ்) 7-91
அல்ஹிலால் 1-42
அலகநந்தா ஆறு 6-45
அலகாபாத் 1-92; 2-38; 3-2
அலாரம் கடிகாரம் 3-8
அலாஸ்க்கா 1-25
அலிகார் 2-38
அலிகார் முஸ்லிம் பல்கலைக்
கழகம் 10-8
அலிஃபாடிக் 3-28
அலுமினியம் 1-32
அலுமினா 6-23
அலெக்சாண்டர் கிரஹாம்
பெல் 7-41
அலெக்சாண்டர் டூமாஸ் 6-95
அலெக்சாண்டர் பிளெமிங் 7-42
அலெக்சாந்தர், மகா 1-33
அலெக்சாந்தர் கஸ்டாவ் ஐபல்
2-79
அலெக்சாந்திரியா கலங்கரை
விளக்கம் 2-46; 47
அலெர்ஜி 1-34
அலைகள் 1-34
அலோகம் 2-51
அவிசெனா 8-71
அவிநயக் கூத்து 5-91
அவிரொளித் தோற்றம் 5-58
அவுரிச் செடி 4-48
அவுரி நீலம் 4-48
அவெஸ்தா 4-50
அழகர் கோயில் 7-75
அழகர்மலை 8-42
அழகுக் கலைகள் 1-35
அழுத்தக் குக்கர் 4-39
அறக்கட்டளைகள் 3-34
அறநூல் 5-45
அறநெறிச்சாரம் 4-38
அறவண அடிகள் 7-72
அறுபத்துமூவர் 6-2; 7-78
அறுவைச் சிகிச்சை 8-76
அன்டார்க்டிகா 1-35; 10-21
அன்னம் 1-36
அன்னா கரீனினா 5-2
அன்னாசி 1-37
அன்னிபெசன்ட் அம்மையார்
4-49; 8-88
அனபாய சோழன் 4-86
அனல்நிலக்கரி 6-9
அனல்மின்சாரம் 8-23
அனிச்சைச் செயல் 5-87; 8-49
அனிராய்டு பாரமானி 6-80
அனுமான் 1-37
அனுமான் குரங்கு 4-2
அனுமான தீர்த்தர் 7-74
அனுராதபுரம் 2-20
அஜ்மீர் 8-89
அஜந்தா 1-38; 1-92; 7-66
அஜந்தா ஓவியம் 2-95
அஜாக்ஸ் 1-2
அஜினா 9-49
அஸ்கா 3-31; 4-40
அஸ்வான் அணை 1-20

## ஆ

ஆக்சி-அசெட்டிலீன் 9-31
ஆக்சிகரணம் 5-56
ஆக்சிஜன் 1-38
ஆக்சி-ஹைடிரஜன் 10-46
ஆக்ட்டினான் 8-91
ஆக்டீனியம் 5-32
ஆக்டேவ் ஷனூட் 9-57
ஆக்ரா 1-92; 2-38
ஆகாசத் தாமரை 6-17
ஆகாயக் கப்பல் 1-39
ஆகாய கங்கை 1-39; 4-75
ஆங்க்காரா 5-57
ஆங்கிலம் 1-40


ஆகாசத் தாமரை

ஆங்கோர் 1-41
ஆங்கோர் வாட் 1-41
ஆச்சா 5-90
ஆசாது, அபுல் கலாம் 1-41
ஆசாம் 1-42
ஆசாமிய மொழி 1-85
ஆசாரிய சங்கரர் 4-31
ஆசிய ஜோதி 5-64
ஆசியா 1-42
ஆசியாவின்ஜோதி 7-15
ஆசுன் சியான் 6-50
ஆட்டங்களும் விளையாட்டுக்களும்
1-45
ஆட்டவா 3-76
ஆட்டா ஆறு 10-39
ஆட்டு அம்மை 3-65
ஆட்டோ 8-64
ஆட்டோ லிலியந்தால் 9-57
ஆட்டோ வான் குவெரிக் 9-83
ஆட்லெஸ் மலைத்தொடர் 1-53
ஆடி 1-46
ஆடிசி 1-46; 10-46
ஆடிசியஸ் 1-46
ஆடு 1-46
ஆடுதுறை-27, 3-36
ஆடைகள் 1-47
ஆடை நெய்தல் 3-93
ஆண்டர்சன், ஹான்சு
கிறிஸ்தியன் 1-49
ஆண்டாள் 1-49
ஆண்டிரோமீடா 1-39; 6-92
ஆண்டீஸ் மலைகள் 1-49;
1-63; 7-94
ஆணிவேர் 9-89
ஆத்திச்சூடி 2-96
ஆத்மாராம் துபே 5-58
ஆதன்ஸ் 3-84
ஆதாமும் ஈவும் 1-50
ஆதிக் குகை மனிதர்கள் 3-91
ஆதிக்குடிகள் 1-50
ஆதிகவி 9-38
ஆதிகாலக் குகை ஓவியம் 2-95
ஆதிகிரந்தம் 4-4, 66
ஆதிச்சநல்லூர் 1-51; 5-72
ஆதிசங்கரர் 4-31

ஆதிநாத ஈசுவரர் கோயில்10-34
ஆதிபுராணம் 5-53
ஆதிவராகர் குகைக்கோயில் 8-7
ஆந்த்ராக்ஸ் 6-89
ஆந்திரப் பிரதேசம் 1-51
ஆந்தை 1-52
ஆப்கானிஸ்தானம் 1-53; 4-18
ஆப்பிரிக்கா 1-53
ஆப்பிள் 1-56
ஆப்பு 2-63, 64
ஆபிரகாம் லிங்கன் 9-1
ஆபு 1-56; 1-92
ஆம்ப்பியர் 8-23
ஆம்புலன்ஸ் 1-57
ஆம்ஸ்டர்டாம் 6-27
ஆமரிசியம் 5-32
ஆமுண்ட்சென் 1-36; 5-62; 10-22
ஆமுதாரியா ஆறு 1-64
ஆமெசான் ஆறு 1-57
ஆமை 1-58; 2-57
ஆயுதங்கள் 1-58
ஆயுர்வேதம் 1-59
ஆயுள் இன்ஷூரன்சு 2-26
ஆர்க்கன்சா ஆறு 8-81
ஆர்க்கிடு 1-60
ஆர்க்கிமிடீஸ் 1-60; 7-57; 7-63
ஆர்க்கிமிடீஸ் தத்துவம் 1-61
ஆர்க்கியாப்டெரிக்ஸ் 6-58
ஆர்க்டிக் சமுத்திரம் 1-61
ஆர்க்டிக் வட்டம் 1-61
ஆர்க் நகர ஜோன் 10-14
ஆர்கான் 1-62
ஆர்சனிக் 5-31
ஆர்ட்டிமிசியோ 2-47
ஆர்மடில்லோ 1-62
ஆர்லியன்ஸ் 10-15


ஆர்க்கியாப்டெரிக்ஸ்




ஆர்லியன்ஸ் கன்னி 10-16
ஆர்வில் ரைட் 8-91
ஆர்ஜென்டினா 1-62; 4-18
ஆர்ஸ்டெட் 8-22
ஆரஞ்சு 1-63
ஆரஞ்சு ஆறு 1-55
ஆரமீயர் 9-6
ஆரல் கடல் 1-64
ஆரவல்லி மலை 1-56, 85; 8-88
ஆரிசோனா 3-75
ஆரியபட்டர் 1-44; 2-15; 3-15; 9-39
ஆரியபட்டா செயற்கைக் கிரகம் 4-82
ஆரியாம்பிகை 4-31
ஆரினாக்கோ ஆறு 9-84
ஆரோரூட் 1-64
ஆரோவில் 7-15
ஆல்கஹால்கள் 1-64; 2-33
ஆல்காக்கள் 1-65; 2-41
ஆல்ப்ஸ் 1-65; 7-95
ஆல்பனி 6-8
ஆல்பா கதிர்கள் 3-17
ஆல்பேனியா 1-66
ஆல்போனா 4-28
ஆல்ஜீரியா 1-54
ஆலங்கட்டி 6-66
ஆலம்பாடி மாடு 3-64
ஆலமரம் 1-67
ஆலன் ஷெப்பர்டு 9-50
ஆலா 3-40
ஆலோ (கற்றாழை) 3-43
ஆவியாதல் 1-67
ஆவிவிளக்கு 9-65
ஆழ்கடல் மீன்கள் 1-67
ஆழ்வார்கள் 1-68
ஆழ்வார் திருநகரி 5-85
ஆழிவடிம்பலம்பநின்ற பாண்டியன் 6-71
ஆளவந்தார் 2-14
ஆளிச்செடி 1-69
ஆளுடை அரசு 5-47
ஆற்றுக்குருவி 6-64
ஆறுகள் 1-69
ஆறு படைவீடுகள் 8-42
ஆன் 7-84
ஆன்ட்வெர்ப் 7-42; 9-14
ஆன்டிமொனி 2-51; 5-32
ஆன்டிவெனீன் 6-75
ஆனட்டோலியா 5-56
ஆனந்த தீர்த்தர் 7-74
ஆனைகுந்தி 10-34
ஆஸ்ட்டட்டீன் 5-32
ஆஸ்ட்டெக் நாகரிகம் 1-70; 8-50
ஆஸ்திரியா 1-71; 2-48; 4-18
ஆஸ்திரேலியா 1-71; 4-16
ஆஸ்பால்ட் 1-73
ஆஸ்மியம் 5-32
ஆஸ்லோ 6-3


## இ


இக்கேபானா 10-3
இகுவானொடான் 2-57
இங்கிலாந்து 6-95
இங்குலிகம் 6-72
இசை 1-73
இசைக் கருவிகள் 1-74; 2-2; 3-30
இசைஞானியார் 4-71; 6-2
இசை நுணுக்கம் 5-21
இட்டர்பியம் 5-32
இட்ரியம் 5-31
இடம்புரிச் சங்கு 4-32
இடம்புரி நீரோட்டம் 6-23
இடி, மின்னல் 1-77
இடிதாங்கி 1-77
இடிதுப்பாக்கி 5-55
இடைக்கால அரசாங்கம் 6-31
இடைத் தேர்தல் 5-67
இடையுவா ஏற்றங்கள் 2-77
இண்டிக்கா 8-50
இண்டியம் 5-32
இணைப்பார்வை தொலை நோக்கி 1-78
இணைப்பு ரெயில்பெட்டித் தொழிற்சாலை 8-91
இத்தக்கா 1-46
இத்தாலி 1-78; 2-48, 49; 4-18
இதயத் துடிப்பு 1-80
இதயம் 1-79; 2-34
இந்தி 1-85
இந்திய அரசியல் அமைப்பு 1-80
நாடாளுமன்றம் — மந்திரி சபை — உச்ச நீதிமன்றம்
இந்திய ஊழியர் சங்கம் 4-22
இந்திய சமுத்திரம் 1-82
இந்திய சுதந்தரப் போராட்டம் 1-82
இந்திய தரிசனம் 6-31
இந்திய தேசியக் காங்கிரஸ் 1-83
இந்திய தேசிய கீதம் 5-64
இந்திய தேசிய ராணுவம் 4-72
இந்திய நாடாளுமன்றக் கட்டடம் 5-95
இந்திய மொழிகள் 1-85
இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் 9-91
இந்தியன் பைப் 4-53
இந்தியா 1-85; 4-18
இயற்கை அமைப்பு — தட்ப வெப்பம் — விளைபொருள்கள் — தொழில்வளம் — தாதுவளம் — நாகரிகம் — மொழிகள் — அழகுக்கலைகள் — மதம் — விஞ்ஞானம் — வரலாற்றுக்

குறிப்பு — மாநிலங்கள் — மத்திய ஆட்சிப் பகுதிகள்
இந்தியா (செய்தித்தாள்) 6-79
இந்தியாவின் வாயில் 6-47; 7-66
இந்திரசித்து 2-14
இந்திரப் பிரஸ்தம் 5-9
இந்திராவதி 4-24
இந்துகுஷ் 1-53
இந்து மதம் 2-1
இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலை 3-20
இந்துஸ்தானி இசை 2-2
இந்தூர் 7-74
இந்தோ-அராபிய எண் குறிகள் 2-60; 3-13
இந்தோ-ஆரிய மொழிக் குடும்பம் 1-85
இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம் 8-62
இந்தோ-சீனா 2-2
இந்தோனீசியா 2-3
இப்செஸ் 5-94
இப்ராஹிம் லோடி 6-73
இம்ப்பால் 7-71
இமய ஆறுகள் 1-70
இமயமலை 2-4; 7-96
இமயவரம்பன் 4-87
இமாசலப் பிரதேசம் 2-4
இமாம் 8-78
இமாலயம் 2-4

இயக்க நரம்புகள் 5-86
இயற்கணிதம் 3-14
இயற்கைக் கிரகங்கள் 4-82
இயற்கைப் பூகோளம் 7-29
இயற்கை வாயு 2-5
இயேசு கிறிஸ்து 2-5 3-87; 5-49; 7-45. 84
இரகுநாத மன்னர் 9-67
இரகுநாத வீணை 9-67
இரகுவமிசம் 3-72; 4-38
இரட்டை உப்பு 6-43
இரட்டைக் கிளிஞ்சில் 3-87
இரட்டைக் குளம்பிகள் 4-5
இரட்டை நட்சத்திரங்கள் 5-82
இரட்டை நரம்புகள் 8-51
இரட்டை விதையிலைத் தாவரம் 5-37; 9-52
இரண்டாம் உலக யுத்தம் 2-48
இரணியன் அல்லது இணையற்ற வீரன் 6-78
இரத்த அணுக்கள் 2-7
இரத்த அழுத்தம் 2-6
இரத்த உயிரணுக்கள் 2-40
இரத்த ஓட்டம் 10-36
இரத்தச் சோகை 2-8
இரத்த சேமிப்பு நிலையம் 2-8
இரத்தத் தகடுகள் 2-7
இரத்தம் 2-7
இரத்தம் ஊட்டல் 2-8
இரத்த மண்டலம் 2-9
இரத்த வியர்வை 6-19
இரத்தினகிரி 5-49
இரவிவர்மர் குலசேகரர் 4-88
இரவி வர்மா 2-95; 4-15
இரவும் பகலும் 2-10
இராச்சிய சபை 1-80; 4-32
இராசக் கிருகம் 6-3
இராசசிம்மன் 6-56
இராச ராச சோழன் 2-10; 4-93; 5-16
இராச ராசேச்சுரம் 2-11; 4-93
இராசலீலை 7-71
இராசேந்திர சோழன் 2-11; 4-93
இராசேந்திர சோழீச்சுரம் 2-11
இராட்டை 3-17
இராம்தாஸ் 1-94
இராம்துலாரி தேவி 8-95
இராமகிருஷ்ண பரமஹம்சர் 2-12; 1-95; 5-19; 9-63
இராமகிருஷ்ண மடம் 2-12
இராமச்சந்திர திலகர் 5-49
இராம நாடகம் 5-22, 94
இராமநாதபுரம் 5-24; 7-25
இராமபாணப் பூச்சி 7-30
இராமலிங்க சுவாமிகள் 2-12 1-95; 5-19
இராமன் 2-13, 16; 5-53
இராமாயணம் 2-13; 7-65
இராமானந்தர் 3-21; 9-93
இராமானுச மண்டபம் 8-7
இராமானுசர் 2-14; 7-82; 9-93
இராமானுஜன் 2-15; 3-15
இராமேசுவரம் 2-15; 1-92
இராவணன் 2-14; 5-53
இராஜேந்திர பிரசாது, டாக்டர் 6-91
இரிடியம் 5-32
இருண்ட கண்டம் 1-53
இருண்ட காலம் 4-88
இருண்ட வனம் 1-58
இருண்ட வீடு 6-78
இரும்பு-எஃகுத் தொழிற்சாலை 1-89
இரும்புக் காலம் 2-16
இரும்பு நுரையீரல் 2-16; 6-24

இரும்பும் எஃகும் 2-17, 18 வார்ப்பிரும்பு — தேனிரும்பு — எஃகு
இரும்பு மனிதர் 9-23
இருளர்கள் 6-24
இலக்கணம் 2-19
இலக்கியம் 2-19
இலக்கிய வரலாறு 9-19
இலங்கை (ஸ்ரீலங்கா) 2-20




இருளர்கள்


இலட்ச கானம் 5-92
இலட்சத் தீவுகள் 1-87
இலட்சுமண தீர்த்தம் 3-71
இலட்சுமணன் 2-13
இலட்சுமிபாய் 10-9
இலாமிச்சை 9-70
இலியடு 2-21; 10-46
இலியம் 1-2; 2-21
இலை 2-21
இலை அட்டை 8-38
இலைக்கள்ளி 3-41
இலைக்கோசு 8-32
இலைச்சுருட்டை நோய் 9-96
இலைப்பாசி 6-16
இலையஸ் ஹவீ 5-71
இலையுதிர் காலம் 6-53
இழை 2-22
இளங்கோவடிகள் 2-23; 4-60
இளம்பிள்ளைவாதம் 2-23; 6-37
இளம்பூரணர் 5-72
இளவேனில் 6-53
இறகு 2-24
இறால் 2-94; 3-15
இறுதித் தீர்ப்பு 8-57
இறுதி விருந்து 8-96
இன் ஆறு 10-38
இன்கா நாகரிகம் 2-25; 1-25; 5-61; 7-40
இன்சுலின் 2-25
இன்வார் 6-4
இன்னிங்ஸ் 3-82
இன்ஷூரன்சு 2-26
இனீசு 1-6
இஸ்தான்புல் 2-27; 5-57
இஸ்ரவேல் 2-27
இஸ்லாம் 2-28; 5-19; 8-30
இஸ்லாமாபாத் 6-68


ஈ


ஈ 2-29
ஈக்வடார் 2-29; 2-66
ஈக்வடோரியல் கினி 1-54

ஈகாரி சிக்கார்ஸ்கி 10-44
ஈசல் 3-43
ஈசாப் 2-30
ஈட்டி (மரம்) 6-25
ஈத்-உல்-அஸா 6-38
ஈத்தியோப்பியா 2-30
ஈதர் 2-31
ஈதைல் ஆல்கஹால் 1-65
ஈப்பிடிப்பான் 4-11
ஈப்புலி 7-19
ஈப்போ 7-93
ஈமு 1-72
ஈர்க்கிறால் 8-18
ஈரப்பதமானி 9-42
ஈரல் செடி 5-77
ஈரல் திரவம் 6-24
ஈரல் புழு 7-24
ஈராக் 2-31; 4-18
ஈரான் 2-32; 4-18
ஈரி 6-42
ஈவான்ஸ் 10-22
ஈழ நாடு 2-20
ஈஜியன் கடல் 2-47
ஈஜியன் தீவுகள் 2-80
ஈஸ்ட்டர் பண்டிகை 2-6, 33
ஈஸ்ட்டு 2-33

## உ

உச்ச-நீச வெப்பமானி 9-77
உச்ச நீதிமன்றம் 1-81; 6-14
உட்கரு 2-41
உடல் 2-33
உடல்நலம் பேணுதல் 2-34
உடலியல் 2-35
உடற்பயிற்சி 2-35
உடுக்கை 1-75
உடையநங்கையார் 5-85
உண்ணி 2-36; 3-15
உணர்ச்சி நரம்புகள் 5-86
உணவு 2-36
உணவுக் குழாய் 4-67; 9-31
உணவு-காலரி 3-69
உணவு — விவசாய நிறுவனம் 2-79






உத்தராடம் 1-40
உத்தரை 2-38
உத்தானபாதன் 5-58
உத்திரப் பிரதேசம் 2-37
உதகமண்டலம் 2-38; 2-55; 3-95; 5-25
உதக வாத்தியம் 10-6
உதயகிரி 7-73
உதயப்பூர் 7-74; 8-89
உப்பு 2-39
உப்புக்கோடு 4-33
உப்புத்தாள் 3-61
உபதேச உந்தியார் 8-79
உமர்கய்யாம் 1-44
உமர்கய்யாம் பாடல்கள் 5-64
உமர் ஷேக் 6-73
உமிழ்நீர் 4-72
உமிழ்நீர்ச் சுரப்பிகள் 4-67; 9-31
உயர்த்தி 2-39
உயர்த்தி (விமானம்) 9-57
உயர்நிலைப் பள்ளிப்படிப்பு 3-34
உயர்நீதிமன்றம் 1-81; 6-14
உயரமானி 6-80
உயிர்ப் பூகோளம் 7-29
உயிரணு 2-40; 2-35;
உயிரியல் 2-41
உயிரியல் ரசாயனம் 8-75
உரம் 2-43
உராய்வு 2-43
உரிமம் 2-44
உருகுவே 2-44
உருண்டைப் புழுக்கள் 7-24; 8-38
உருது 1-85
உருப்பெருக்கிக் கண்ணாடி 8-58
உருமாற்றப் பாறைகள் 6-87
உருளைக்கிழங்கு 2-45; 3-58
உலக அதிசயங்கள் ஏழு 2-46
பிரமிடுகள் — பாபிலன் தொங்கு தோட்டங்கள் — ஜூப்பிட்டர் சிலை — டயானா கோயில் — மாசோலஸ் மன்னன் கல்லறை — ரோட்ஸ் பேருருவச் சிலை — அலெக் சாந்திரியா கலங்கரை விளக்கம்
உலக சுகாதார நிறுவனம் 2-79; 10-13
உலகத்தின் கூரை 1-42
உலக நாடுகளின் சட்டம் 4-32
உலக நீதிமன்றம் 4-32
உலகப் பொதுமறை 5-49
உலகம் 2-47
உலக யுத்தம் 2-47
உலக வானிலையியல் நிறுவனம் 9-42
உலர்ந்த பனிக்கட்டி 3-60
உலைகள் 2-50
உலோகக் கலவைகள் 2-51
உலோகங்கள் 2-51
உலோகவேலை 3-93
உவா ஏற்றங்கள் 2-77
உழவனின் தோழன் 4-53
உள்சாலை 3-95
உள்நாக்கு 9-31
உள்நாட்டுப் போர் 8-69
உள்நிலக் குடைவு வழி 3-95
உள்நீர்க் குடைவு வழி 3-95
உள் மங்கோலியர் 7-68
உள்ளாறு 5-34
உள்ளான் 6-62
உள்ளெரி எஞ்சின் 2-53 5-6; 7-12
உளவியல் 2-53
உளி 3-32
உளி வெட்டு எழுத்துகள் 2-71
உற்பத்தி 7-50
உறக்க நோய் 6-37
உறக்கம் 2-54
உறைச் சிறகிகள் 9-16
உறைதல் 2-55
உறைபனி 2-55
உறைபனிமானி 9-42
உஜ்ஜயினி 2-56; 1-92; 7-74
ஊக்கி 6-4
ஊசல் 3-8
ஊசித் துளைக் காமிரா 3-57
ஊசியிலைக் காடுகள் 3-51
ஊடைநூல் 6-26
ஊதாக் காளான் 4-52
ஊது உலை 2-50
ஊதுகாளான் 4-52
ஊதுபொறி 5-57
ஊமன் 1-52
ஊமை அன்னம் 1-36
ஊர்த்தவ தாண்டவம் 5-84
ஊர்தி அலைகள் 9-43
ஊர்பினோ 8-84
ஊர்வன 2-56
ஊராங்ஊட்டான் 3-50; 4-2; 8-3
ஊலார் ஏரி 10-3
ஊலான் பாட்டோர் 7-68
ஊழியர் அரசு இன்ஷூரன்சு 2-26
ஊற்றுப்பேனா 7-45

## எ

எஃகு 2-56
எக்காளம் 1-76
எக்கிட்னா 6-84
எக்ஸ்-கதிர்கள் 2-57; 8-81
எக்ஸ்—கதிர் நிறமாலை வரைவி 2-58




எகிப்து

எக்ஸ்புளோரர் 4-83; 9-50
எகிப்திய எண்குறிகள் 2-60
எகிப்து 2-58; 4-18
எங்கெல்ஸ் 7-47; 8-10
எஞ்சின்கள் 2-59
எட்டயபுரம் 6-78
எட்டிக்கோபத்தா 7-48
எட்டுத்தொகை 5-22; 23
எட்மண் ஹில்லாரி 2-71; 7-96
எட்வர்டு ஜென்னர் 10-12
எட்வின் ஆல்டிரின் 9-51
எட்னா எரிமலை 1-78; 2-66; 81
எடிசன், தாமஸ் ஆல்வா 2-60; 3-81; 7-41; 63
எடின்பரோ 6-95; 10-22
எண்கள் 2-60
எண்காலி 8-38
எதிர் அனல் உலை 2-50
எதிர்முனைக்கதிர் அலைவுக் பதிப்பி 2-61
எதிர்முனைக் குழாய் 2-62
எதிரொலி 2-62; 2-88
எந்திரக் கலப்பை 5-4
எந்திரங்கள் 2-63
எந்திர சக்தி 4-30
எந்திரத் துப்பாக்கி 5-56
எப்சம் உப்பு 7-64
எபனைட்டு 8-78
எபிடியாஸ்கோப் 2-64
எம்பயர் ஸ்டேட் கட்டடம் 1-26; 6-8
எம்பா ஆறு 3-77
எம்மர் கோதுமை 4-25
எம்ஸ் ஆறு 10-11
எயிற் பட்டினம் 2-65
எயினைய்டு 1-5
எர்ணாகுளம் 4-15
எர்பா மாட்டே 6-50
எர்பியம் 5-32
எர்மின் 3-76
எர்னஸ்ட் செயின் 7-43
எர்னஸ்ட் பீஷோ 4-88
எ்ரி எண்ணெய் 7-37
எரிசக்தி 3-69
எரிநட்சத்திரங்கள் 4-75
எரிபொருள்கள் 2-65
எரிமலை 2-66
எருசலேம் 2-28; 4-61
எருதுப் போதிகை 8-84
எருமைப் புல் 7-18
எல் சால்வடார் 7-72
எல்பர்ட் சிகரம் 8-81
எல்பா தீவு 6-28
எல்பின்ஸ்டன் 1-21
எல்பெ ஆறு 4-78; 10-11
எல்மோதி 6-11
எல்லோரா 2-66; 1-92; 7-66
